விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# *Valampurii*

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 11 சனிக்கிழமை (26.11.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 343


## மாவீரர்நாள் நவம்பர் - 27 நாளை

### தமிழர் தாயகமெங்கும் நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்காக போராடி உயிரிழந்த மாவீரர்களின் நினைவாக மாவீரர் வாரத்தின் இறுதி நாளான நாளைய தினம் 27ஆம் திகதி உலகம் முழுவதுமுள்ள தமிழர்களால் உணர்வெழுச்சியுடன் நினைவு கூரப்படவுள்ளது. தமிழீழ தேசியத் தலை 23ஆம் பக்கம் பார்க்க....




## தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு இன்று பிறந்த நாள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு இன்று 26ஆம் திகதி 62ஆவது பிறந்த தினமாகும்.

வல்வெட்டித் துறையில் வேலுப்பிள்ளை மற்றும் பார்வதி அம்மாள் ஆகியோருக்கு 1954ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி மகனாக பிரபாகரன் பிறந்தார்.

சிறுவயது முதலே விடுதலை சிநதனை கொண்டவராக வளர்ந்த அவர், வல்வெட்டித்துறையில் ஊரிக்காடு எனும் இடத்திலுள்ள சிதம்பரா கல்லூரியில் 10ஆம் வகுப்பு வரையிலும் கற்றார்.

தமிழ் மாணவர்கள் பாடசாலைக் கல்வியை 23ஆம் பக்கம் பார்க்க....

# யாழ்.பல்கலையில் நேற்று மாவீரர் நினைவேந்தல்



## மூவின மாணவர்களும் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

தமிழின விடுதலைக்காக போராடி உயிர்நீத்த மாவீரர்களை நினைவுகூரும் வகையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று மாவீரர் தின நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. பல்கலைக்கழக சமூகத்தினால் நடத்தப்பட்ட இந்த நினைவேந்தல் நிகழ்வில் மாவீரர்களை நினைவுகூர்ந்து மரங்களை நாட்டியும் சுடர் ஏற்றியும் மலர்களை தூவியும் அஞ்சலி நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இடம்பெற்றிருந்தன. இதில் தமிழ் மாணவர்களுடன் இணைந்து சிங்கள, முஸ்லிம் மாணவர்களும் பங்கேற்றிருந்தமை சிறப்பம்சமாகும்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## இருவரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

## தமிழின விடுதலைக்கான போரில் உயிர் நீத்தவர்களை அஞ்சலிப்போம்

## தேர்தல் முறைமை; பவ்ரல் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)



இதில் தமிழ் மாணவர்களுடன் இணைந்து சிங்கள, முஸ்லிம் மாணவர்களும் பங்கேற்றிருந்தமை சிறப்பம்சமாகும். (24ஆம் பக்கம் பார்க்க)

## இருவரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர் கடற்பரப்பில் இருந்து கடந்த 23 ஆம் திகதி கடற்தொழிலுக்கு சென்ற இருவர் காணாமல் போயுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். குருநகர் கடற்பரப்பில் இருந்து 24ஆம் பக்கம் பார்க்க....

## தமிழின விடுதலைக்கான போரில் உயிர் நீத்தவர்களை அஞ்சலிப்போம்

### த.தே.கூட்டமைப்பு, த.தே.ம. முன்னணி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்போரில் உயிர் நீத்த அத்தனை உயிர்களுககாகவும் நாளை 27 ஆம் திகதி சுடர ஏற்றி அஞ்சலி செலுத்துமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் தமிழ்த தேசிய மக்கள் முன்னணி ஆகியன அறிவித்துள்ளன.

உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவதை சட்டரீதியாக எவரும் தடுக்க முடியாது எனவும் முன்னணி 04ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தல் முறைமை; பவ்ரல் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

புதிய அரசியல் அமைப்பில் தேரதல் முறைமை தொடர்பான ஆக்கபூர்வமான விடயங்களை இணைதுக்கொள்வதற்கான சிபாரிசுகளைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டை மாவட்டம்தோறும் பவ்ரல் அமைப்பு ஆரம்பித்துள்ளது. மேற்குறித்த விட 23ஆம் பக்கம் பார்க்க....

## 18 பேருக்கு; மரண தண்டனை

(தெரணியகல)

கேகாலை - தெரணியகல நூரி தோட்டத்தில் இடம்பெற்ற படுகொலையுடன் தொடர்புபட்டதாக கைது செய்யப்பட்டவர்களில் 18 பேருக்கும் அவிசாவளை மேல் நீதிமன்றம் மரண 23ஆம் பக்கம் பார்க்க....

## சிங்கள மாணவனை தாக்கி கையில் "தமிழ்" என எழுதினர்

(கொழும்பு)

தலவாக்கலையில் உள்ள பிரபல சிங்கள பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவனை இனந்தெரியாத நபர்கள் தாக்கி அம் மாணவனின் கையில் "தமிழ" என ஆங்கிலத்தில் பிளேட் ஒன்றினால் கீறியுள்ளனர்.

தலவாக்கலை பகுதியைச் சேர்ந்த தரம் பத்தில் கல்வி கற்கும் பாடசாலை மாணவனே இவ்வாறு தாக்குதலுக்குள் 23ஆம் பக்கம் பார்க்க....

## தூய்மையாகும் துயிலுமில்லம்



23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கில் இராணுவம் தேவையில்லை!

(கொழும்பு)

வடக்கில் இப்போது இராணுவம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை அவர்களுக்கு அங்கு வேலை இல்லை என்று அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். 04ஆம் பக்கம் பார்க்க....

## "இரத்த காயங்களுடன் மாவை நின்றிருந்தார்"

### மெய்ப்பாதுகாவலர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

அந்த மோசமான தாக்குதலில் இருந்து நான் மீண்டு வந்த போது மாவை சேனாதிராஜா இரத்தக் காயங்களுடன்நின்றார் என மாவை சேனாதிராஜாவின் முன்னாள் மெயபாதுகாவலரான உப பொலிஸ் பரிசோதகர் தர்மரட்ணம் தமிழ்வேந்தன் சாட்சியமளித்துள்ளார்.

ஊர்காவற்துறை பகுதியில் தமிழ்தேசிய கூட்டமைப்பின்மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பான வழக்கின் சாட்சியங்களுக்கான பதிவு விசாரணை 5 ஆம் நாளாக யாழ்மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்றையதினம் யாழ் மேல் நீதிமன்றில் நடைபெற்றது.

அந்த வழக்கில் கண்கண்ட சாட்சியங்களில் ஒருவரான அவர் மன்றில் ஆஜராகி சாட்சியம் அளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கடந்த 2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காகவென 23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

25 YEARS OF SERVICE EXCELLENCE 1991-2016

செய்மதி தொலைக்காட்சி சேவை
(Direct to Home)




டிஷ் அன்டெனா மூலம் (Digital SD/ HD) தரத்தில் இடையூறு அற்ற முறையில் குறைந்த கட்டணத்தில் (ரூபா 400/- தொடக்கம்) உங்கள் விருப்பம் போல் டிவி சானல்களை கண்டுகளிக்க கூடிய செட் 1 வருட உத்தரவாதத்துடன்*
அனைத்து டிவி ரிசார்ஜ்ற்கும் RECHARGEக்கும் 20% வரை விலைக்கழிவு.

Rs.2750/-*

SATS-TECH ENGINEERS
NO. 298 K.K.S.ROAD JAFFNA. PH:- 021 222 8812. Hotline : 0777710785

(சி-6479)

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் கந்தசாமி

(பிள்ளையார் வெல்டிங் இரும்புத் தொழிற்சாலை உரிமையாளர் - காரைநகர், யாழ்ப்பாணம்.)



காளி கோவிலடி, களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கந்தசாமி 22.11.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - கற்பகம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான கனகசபை - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் மனோன்மணியின் (வேவி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனகபூரணம், காலஞ்சென்ற பரமசாமி மற்றும் கிருஸ்ணாம்பாள் (வவா), அன்னலட்சுமி (மணி), புவனேஸ்வரி (வேவி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மகேஸ்வரி (மணி), கிறேசம்மா (குஞ்சு), லோகேஸ்வரி (கிளி) ஆகியோரின் மைத்துனரும் கலைச்செல்வன் (பிரான்ஸ்), கலைவாணி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - தெல்லிப்பளை பிரதேச செயலகம்), கலைச்சந்திரன் (டோகா), கலையமுதா (கலைப் பட்டதாரி கிழக்கு பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சோபனா (பிரான்ஸ்), அகிலன் (அதிபர்-யா/அரியாலை கிழக்கு அ.த.க.பாடசாலை) ஆகியோரின் மாமனாரும் சத்தியமூர்த்தி (சத்தியன்), சத்தியரூபன் (ரூபன்), சத்தியபாமா, சத்தியரூபி (ஆசிரியர்-யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்), சத்தியாயினி ஆகியோரின் சிறிய தந்தையும் வேணுகா, ஜானுகா, கர்னிகா, பிரதாபன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.11.2016 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் காரைநகர் தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (6707)

காளி கோவிலடி,
களபூமி, காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்

# கொள்ளை சம்பவம் நால்வர் கைது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பகல் கொள்ளைகளில் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் 4 பேர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் அதிகாரி ஸ்ரீகஜன் தலைமையிலான அணியினரால் கைது செய்யப்பட்டுள்ள நால்வரிடமிருந்தும் 21 பவுண் நகை, ஒரு மடிக்கணனி, டிஜிற்றல் கமரா ஆகியன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்டுள்ள நகையின் பெறுமதி சுமார் 9 இலட்சம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். ஆரம்ப விசாரணைகளிலிருந்து கைது செய்யப்பட்டவர்கள் ஆறிற்கு மேற்பட்ட களவுச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாக கண்டறிந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்களும் நேற்றையதினம் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு டிசம்பர் மாதம் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை கைது செய்யப்பட்ட கொள்ளைக்குழுவில் மேலும் மூவரைத் பொலிஸார் தேடி வருகின்றதாகவும் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன. (செ-4)

# பல்கலையில் பகிடிவதை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலுள்ள கிழக்கு பல்கலைக்கழக மருத்துவபீட புதிய மாணவர்கள் மீதான பகிடிவதைகள் தொடர்ந்து நடைபெறுவதாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் பகிடிவதை முற்றாக தடை செய்யப்பட்ட நிலையில் சட்டத்திற்கு புறம்பாக இந்த பகிடிவதைகள் இடம்பெற்று வருவதாகவும் இதில் புதுமுக ஆண் மாணவர்கள் கடுமையாக தாக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. அதுமட்டும் இன்றி பெண் மாணவிகள்மீதும் பகிடி வதைகள் இடம் பெறுவதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறான மறைமுகமான பகிடிவதைச் சம்பவங்கள் மாணவர்களுக்கு கடுமையான மன அழுத்தத்தைக் கொடுத்துள்ள நிலையில் பல்கலைக்கழக நிர்வாகத்தினர் இது தொடர்பில் நட வடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது. (செ)

திருகோணமலையில்
## காணி விற்பனைக்கு

நகரப்பகுதியில் 30Perches காணி விற்பனைக்கு உள்ளது. இக் காணிக்கு அண்மையில் Beach, Natural Harbour , Fort, கோணேஸ்வர ஆலயம், காளிக்கோயில் OlD National School அண்மையில் உள்ளது. பல்வேறு தேவைகளுக்கு (Super market, Hotel, Wedding Hall, Flat House-exter) பாவிக்கலாம். (6683)

தொடர்புகளுக்கு:-0774746571

கல்விமாணி (B.Ed )
நுழைவுப் பரீட்சைக்கான
விசேட கருத்தரங்கு
சனி (இன்று)பி.ப 1.00 மணி
ஞாயிறு 9.00 - 4.00 மணி வரை
தொடர்பு
0766883394, 0212223382
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்)
(சி-6482)

## காணி விற்பனைக்கு

நுணாவில் சந்தி மட்டுவில் வீதியில் துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் (150M உள்ளே) 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. ——————

தொடர்புக்கு:-0778730129 (6708)

"கோசலா புடவை மாளிகை" ஸ்தாபனத்தினரின்
பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணி விநியோகம்



பாடசாலை மாணவ மாணவியரின் நீடித்த பாவனைக்கும் அழகான தோற்றத்திற்கும் தேவையான சீருடைகளைத் தைப்பதற்கான அனைத்து வகைத் தரமான துணிகளையும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
"கோசலா புடவை மாளிகை"
அனைத்து மாணவர்களும் உங்களின் பரிசுக் கூப்பனை வழங்கி விரைவாகவும் குறைந்த விலையிலும் உங்களுக்குத் தேவையான சீருடைத் துணிகளைப் பெற்றுக் செல்லுங்கள்



"கோசலா புடவை மாளிகை"
தண்ணீரூற்று, முள்ளியவளை
தொ.பே:-0778371266 (சி-6480)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
# கடை வாடகை ஒப்பந்தம் புதுப்பித்தல்

எமது பிரதேசசபை சுன்னாகம் உபஅலுவலக எல்லைக்குட்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் கடைகளுக்குரிய ஒப்பந்தங்கள் இதுவரை காலமும் தங்களினால் புதுப்பிக்கப்படாமல் உள்ளன. 2016.12.09ஆம் திகதியன்று ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்கு ஏதுவாக குறித்த கடை சார்பாக செய்து கொண்ட ஒப்பந்தப்பத்திரத்துடனும், தேசிய அடையாள அட்டையுடனும் சபையின் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த திகதியில் தாங்கள் அலுவலகத்திற்கு சமுகமளிக்கத் தவறும் பட்சத்தில் தங்கள் ஒப்பந்தம் இரத்துச்செய்யப்பட்டு சபையினால் கடை பொறுப்பேற்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

| தொ. இல | கடை இல | வீதி | ஒப்பந்தகாரரின் பெயர் | விலாசம் |
| --- | --- | --- | --- | --- |
| 01 | 09 | சுன்னாகம் மத்திய சந்தை | சபாபதி வன்னியசிங்கம் | ஸ்ரேசன் வீதி, சுன்னாகம். |
| 02 | 13 | சுன்னாகம் மத்திய சந்தை | சிவகுரு சண்முகலிங்கம் | பருத்திக்கலட்டி, சுன்னாகம் |
| 03 | 15 | சுன்னாகம் மத்திய சந்தை | குகனேசன் அம்பிகா | அளவெட்டி தெற்கு, அளவெட்டி |
| 04 | 24 | சுன்னாகம் மத்திய சந்தை | முருகேசு சுப்பிரமணியம் | சுன்னாகம் தெற்கு, சுன்னாகம் |
| 05 | 26 | சுன்னாகம் மத்திய சந்தை | சபாபதி புஸ்பநாதன் | டாக்.சுப்ரமணியம் வீதி, சுன்னாகம் |
| 06 | 30 | சுன்னாகம் மத்திய சந்தை | டேவிற் பேடினன் பெண் மரீனா | சென்.அன்ரனீஸ் ஒழுங்கை, சுன்னாகம் |
| 07 | 08 | சந்தை தெற்கு வீதி | சுவாமிநாதன் தவராசா | உடுவில் கிழக்கு, சுன்னாகம் |

செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை
சுன்னாகம்
(சி-6481)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
1982 - 11 - 17



விண்ணில்
2013 - 11 - 26

## சிறிகாந் ரோகினி றெக்ஷி

உயிர் குடிக்கும் நோயாகி காலன்
நம்மையெல்லாம் துடி துடிக்க வைத்து உங்கள்
உயிரெடுத்துச் சென்றானே
விழி சிவத்து இன்னும் விம்மி அழுகிறோம்
மூன்றாண்டென்ன முன்னூறு ஆண்டானாலும்
மாறாத வலி நம் சந்ததிகள் தாண்டியும்
தொடருமே எங்கள் உயிரானவரே

தகவல்:-
கணவன் சிறிகாந்
பிள்ளைகள் யாழினி, பிரியங்கா

ஒட்டிசுட்டான்
வன்னி.

(சி-6483)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் விடுதலைப்புலிகளின்

# தலைவர் பிரபாகரனுக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்து சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தும் மாவீரர் தினத்தை அனுஷ்டித்தும் யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்றைய தினம் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (7 ஆம் பக்கம் பார்க்க)




## பலத்த பாதுகாப்புடன் பௌத்த துறவிகள் சகிதம் சீனாவில் மகிந்த







சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட கூட்டு எதிரணியினர்க்கு அங்கு பௌத்த துறவிகள் வரவேற்பளித்துள்ளதோடு பலத்த பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

## மோட்டார் சைக்கிள்களுக்கு தண்டம் பொருத்தமற்றது

அதிக வேகம், இடது பக்கத்தால் முந்த முற்படுத்தல் போன்ற குற்றச்சாட்டுக்களுக்கு 25000 ரூபா தண்டப் பணம் அறவிடும் வரவு செலவுத் திட்ட யோசனையை மீள் பரிசீலனைக்குட்படுத்துமாறு அகில இலங்கை மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் சங்கம் நிதி அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சர்வதேச தரத்துக்கு ஏற்ப வேகக்கணிப்பு கருவிகள் இல்லாத நிலையில் இந்த தண்டப்பணத் தீர்மானம் மோட்டார் சைக்கிள் செலுத்துநர்களை அசௌகரியங்களுக்கு உட்படுத்துவதாகவும் அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்த தண்டப் பணத்தின் மூலம் குறைந்த வருமானம் உடையவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் நிலை உருவாகும். வாகனங்களின் தராதரம் பார்த்து தண்டனைகளை நடைமுறைப்படுத்துமாறும் அச்சங்கம் அனுப்பியுள்ள கடிதம் மூலம் கேட்டுள்ளது. (இ-10)

## பாடசாலைகளுக்கு 500மீ.தொலைவுக்குள் புகைப்பொருட்களை விற்க விரைவில் தடை

நாடு முழுவதிலுமுள்ள பாடசாலைகளை அண்மித்த பகுதிகளில், அதாவது, பாடசாலையிலிருந்து சுமார் 500 மீற்றர் தொலைவுக்குள், சிகரெட்டுகள் மற்றும் புகையிலை உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யத் தடை விதிக்கப்போவதாக, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அத்துடன், சுண்ணாம்பு மற்றும் பாக்கு விற்பனைக்கு எதிராகவும், கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் ஏற்பாட்டில், பத்தரமுல்லையில் அமைந்துள்ள வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற, புகைப் பொருட்களின் பயன்பாட்டைக் குறைத்தல் தொடர்பான கலந்துரையாடலின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், "பாடசாலைகளை அண்மித்த பிரதேசங்களில், மதுபானங்களை விற்பனை செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, புகையிலை உற்பத்திப் பொருட்கள் விற்பனையைத் தடை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது" எனத் தெரிவித்தார்.

இதேவேளை, "இலங்கையின் கலாசாரத்துடன் பின்னிப்பிணைந்த பொருட்களில், சுண்ணாம்பும் பாக்கும் காணப்படுகின்றது. இருப்பினும், இவற்றைப் பயன்படுத்துவதால், புற்றுநோய் ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அதனால், அவற்றுக்கு எதிராகவும், கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்" என்று, அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-10)


## ஆவா குழு சந்தேக நபர்கள் மீது பயங்கரவாத தடைச்சட்டம் பாயாது

### அமைச்சர் மனோ கணேசன் உறுதியளிப்பு

(கொழும்பு)

ஆவா குழு உறுப்பினர்கள் என அண்மையில் கைது செயயப்பட்டு, பயஙகரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களின் விவகாரம், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழிருந்து அகற்றப்பட்டு சாதாரண சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும் என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்த, கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்களின் குடும்ப உறுப்பினர்கள், என்னை எனது அமைச்சு அலுவலகத்தில் நேற்று முன்தினம் காலை சந்தித்து, இவ்விவகாரத்தை என் கவனத்துக்கு கொண்டு வந்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு அலரி மாளிகையில் நடைபெற்ற கட்சி தலைவர்கள் கூட்டத்தின் போது கேள்வி எழுப்பினேன். பயங்கரவாத தடைச் சட்ட பிரயோகம் உடன் நிறுத்தப்பட வேண்டும் என்பதுவே எனது நிலைப்பாடாக இருந்தது. இதையடுத்து இந்த விவகாரம் விரிவாக ஆராயப்பட்ட நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களான இளைஞர்களின் விவகாரத்தை, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழிருந்து அகற்றி, சாதாரண சட்டத்தின் கீழ் கொண்டுவரும்படி, கூட்டத்தில் கலந்துக்கொண்டிருந்த சட்டம் ஒழுங்கு துறை அமைச்சர் சாகல ரட்நாயக்கவுக்கு பணிப்புரை விடுத்தார். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள வயதில் குறைவான இந்த இளம் பிராயத்தினரின் எதிர்காலம் குறித்தும் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது. எனவே பயங்கரவாத தடை சட்டத்தின் கீழிருந்து இவர்களின் விவகாரம் அகற்றப்பட்டு, சாதாரண சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுவதற்கு, கைதான இளைஞர்களின் வயதும் ஒரு பிரதான காரணமாக அமைந்துள்ளது. விசாரணையின் முடிவில் இந்த இளைஞர்கள், நீதிமன்றத்தில் நிறுத்தப்படும் பட்சத்தில் அவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனை, பயங்கரவாத சட்ட பாய்ச்சல் இல்லாத காரணத்தால், ஒப்பீட்டளவில் பாரதூரமானதாக இருக்காது. எனினும் ஆவா அல்லது எந்த ஒரு சட்டம் ஒழுங்கு முறைகேட்டையும் நமது அரசு இனி மேல் சகித்துக் கொள்ள போவதில்லை என்பதையும் சம்பந்தப்பட்டவர்கள் நினைவில் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். (இ-10)



அடிலெய்ட் 'பிங் போல்' டெஸ்ட்

# கவாஜா சதம்; தென்னாபிரிக்காவுக்கு ஆஸி பதிலடி

அடிலெய்டில் நடைபெற்று வரும் பிங்க் போல் பகல்- இரவு டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா 6 விக்கெட் இழப்பிற்கு 307 ஓட்டங்கள் குவித்து தென்னாபிரிக்க அணிக்கு பதிலடி கொடுத்துள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி அங்கு மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

ஏற்கனவே முடிவடைந்த இரண்டு போட்டிகளிலும் தென்னாபிரிக்கா வெற்றி பெற்று தொடரை 2:0 எனக் கைப்பற்றி யுள்ளது.

இந்நிலையில் 3ஆவது மற்றும் 'பிங்க் போல்' பகல்- இரவு டெஸ்ட் அடிலெய்டில் நேற்று முன்தினம் தொடங்கியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 76 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 259 ஓட்டங்களை எடுத்திருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்தியது.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த அவுஸ்திரேலியா நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டநேர நிறைவில் விகெட் இழப்பின்றி 12 ஓவர்களில் 4 ஓட்டங்களை எடுத்திருந்தது. கவாஜா 3, ரென் ஷாவ் 8 ஓட்டங்களுடன் களத்தி லிருந்தனர்.

நேற்று 2ஆவது நாள் ஆட்ட நடை பெற்றது. மேலும் இரண்டு ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரென்ஷாவ் 10 ஓட்டங்களில் தனது விக்கெட்டை அபோட்டிடம் பறி கொடுத்தார். அடுத்த வந்த வோர்னரையும் 11 ஓட்டங்களில் பெவிலி யனுக்கு அனுப்பினார் அபோட்.

இதனால் ஆஸ்திரேலியா அணி 37 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 2 விக்கெட்டுக்களை இழந்தது. 3ஆவது விக்கெட்டுக்கு கவாஜாவுடன் அணித் தலைவர் ஸ்மித் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. ஸ்மித் 59 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரன்அவுட் ஆனார். இவர் 3ஆவது விக்கெட்டுக்கு கவாஜாவுடன் இணைந்து 137 ஓட்டங்கள் குவித்தார்.

மறுமுனையில் விளையாடிய கவாஜா சிறப்பாக விளையாடி சதம் அடித்தார். அத்துடன் ஒரு பக்கத்தில் விக்கெட் விழாமலும் பார்த்துக் கொண்டார். ஸ்மித் ஆட்டமிழந்ததும் களம் இறங்கிய புதுமுக வீரர் ஹேண்ட்ஸ்காம்ப் 54 ஓட்டங்கள் சேர்த்தார். இவர் கவாஜாவுடன் இணைந்து 4ஆவது விக்கெட்டுக்கு 99 ஓட்டங்களும் சேர்த்தார்.

ஸ்மித், ஹேண்ட்ஸ்காம்ப் அரைசதம் மற்றும் கவாஜாவின் சதத்தால் அவுஸ்திரேலியா அணியின் ஓட்ட எண்ணிக்கை மளமளவென உயர்ந்தது.

ஹேண்ட்ஸ்காம்ப் ஆட்டமிழந்ததும் அடுத்த இரண்டு விக்கெட்டுக்கள் மளமளவென சரிந்தது. மேடின்சன் ஓட்டம் எதுவும் எடுக்காமலும், விக்கெட் காப்பாளர் வேட் 4 ஓட்டங்களிலும் ஆட்டம் இழந்தனர். 11 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்ததால் அவுஸ்திரேலியா சற்று தடுமாறியது. அதன்போது அவுஸ்திரேலியா 6 விக்கெட்டுக்களை இழந்து 283 ஓட்டங்களை எடுத்திருந்தது.

7ஆவது விக்கெட்டுக்கு கவாஜாவுடன் மிட்செல் ஸ்ரார்க் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி 2ஆவது நாள் முடியும் வரை மேலும் விக்கெட் ஏதும் இழக்காமல் பார்த்துக் கொண்டது.

இதனால் அவுஸ்திரேலியா அணி நேற்றைய 2ஆவது நாள் ஆட்ட நேர நிறைவில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 307 ஓட்டங்கள் குவித்துள்ளது.



இதன்மூலம் தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் குவித்த ஓட்டங்களிலும் பார்க்க அவுஸ்திரேலிய 48 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

கவாஜா 138, ஸ்ரார்க் 16 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர்.

இன்றைய 3ஆவது நாள் ஆட்டத்தில் அவுஸ்திரேலியா கையில் உள்ள 4 விக்கெட்டுக்களை கொண்டு மேலும் 50 ஓட்டங்களுக்கு மேல் சேர்த்து, 100 ஓட்டங்களால் முதல் இன்னிங்சில் முன்னிலை பெற்றால்' இந்த டெஸ்டில் வெற்றி பெற்று வைட் வோஷில் இருந்து தப்பிக்க வாய்ப்புள்ளது. (க)

## வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வலைப்பந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டி இன்று இரவு 7 மணிக்கு கழகத் தலைவர் க. சதீஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர்கள் எம்.கே.சிவாஜிலிங்கம், த. சித்தார்த்தன், வே. சிவயோகன், எஸ். சுகிர்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

முன்னதாக லீக் போட்டிகள் யாவும் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும். எனவே இப்போட்டியில் பங்குபற்றும் கழகங்கள் உரிய நேரத்துக்கு சமுகம் தருமாறு போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (க)

## மோட்டார் சைக்கிளுக்கு விசமிகள் தீ வைப்பு

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று முன்தினம் இரவு இனம் தெரியாத நபர்களால் திணைக்கள வளாகத்தில் வைத்து தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு கடற்கரை வீதியில் உள்ள கடற்தொழில் நீரியல் வள திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகஸ்தர் ஒருவரின் மூன்று லட்சம் ரூபாய் பெறுமதியிலான மோட்டார் சைக்கிளை அலுவலக வளாகத்தில் நிறுத்திவிட்டு விடுதியில் தூக்கத்தில் இருந்த வேளையில் நள்ளிரவில் வந்த இனம்தெரியாத நபர்கள் காவோலைகளை மோட்டார் சைக்கிளின் மேல் போட்டு தீ வைத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதன்போது மோட்டார் சைக்கிளின் பெரும் பகுதி முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.



சம்பவம் தொடர்பில் திணைக்கள அதிகாரிகளால் முல்லைத்தீவு விசேட குற்றத்தடுப்பு பிரிவில் முறையிட்டதினை தொடர்ந்து விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அண்மைக்காலமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கொக்கிளாய், நாயாறு போன்ற பிரதேசங்களில் உள்ள களப்புக்களில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களையும் அவர்களின் மீன்பிடி உபகரணங்களோடு கைது செய்து நீதிமன்றில் முற் படுத்தும் நடவடிக்கையில் முல்லை மாவட்ட நீரியலவள திணைக்களத்தின் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்ற நிலையில் இடம்பெற்ற மேற்படி சம்பவம் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. (செ-281)

## தமிழின விடுதலைக்கான போரில்...

சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் பொதுச் செயலாளருமான மாவை சேனாதிராஜா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இன விடுதலைக்கான போரில் போராளிகள் உள்ளிட்ட பொது மக்கள் இலட்சக் கணக்கானோர் தம்முயிரை அர்ப்பணித்துள்ளனர். அவ்வாறு உயிர் நீத்த உறவுகளுக்காக கண்ணீர் வடிப்பதும் அஞ்சலி செலுத்துவதும் மக்களின் அடிப்படை உரிமையாகும். இவ்வுரிமை மனங்களுக்கு, ஆத்மாக்களுக்கு ஆறுதல் தருவதாகும்.

மத நம்பிக்கை கொண்ட மக்கள் உயிர் நீத்த உறவுகளின் ஆத்மாக்களுக்கு அஞ்சலி செலுத்துவது மட்டுமல்ல ஈமக்கடன் செய்வதும் அவரவர் நம்பிக்கையின்படி பாரம்பரியமும் கடமையுமாகும். இதில் வெற்றி தோல்வி என்ற பரிசீலனைக்கு இடமில்லை. தெற்கு வடக்கு என்ற வேறுபாடில்லை. அதில் மனித குலத்தின் அடிப்படை உரித்தே முக்கியமானதாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அனைவரும் மனித நேயத்துடன் தங்களுக்கேற்றவாறு அஞ்சலி செலுத்துவதே உயர்ந்த பண்பும் நாகரிகமும் ஆகும். எனவே இன்றுள்ள சூழ்நிலைகளை மதிப்பிட்டு எந்த சன்தங்களுக்கும் இடங்கொடுக்காமல் அமைதியான முறையில் கோவில்களில், வீடுகளில் நீர்நிலைகளில், நினைவிடங்களில் அஞ்சலி செலுத்துமாறும் ஈமக்கடனை நிறைவேற்றுமாறும் கேட்டுக் கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிக்கையில், தமிழ் மக்களுடைய விடுதலைக்காக ஆயிரமாயிரம் பேர் போராடினார்கள். அவ்வாறு போராடி உயிரிழந்தவர்களை நினைவுகூர வேண்டிய வரலாற்றுக் கடமை எமக்கு உண்டு. இவ்வாறு எம்மவர்கள் நினைவுகூரப்படுவதை எந்த சட்டத் தாலும தடுத்துவிட முடியாது. ஒவ்வொரு தமிழனும் விடுதலை போரில் உயிரிழந்த உயிர்களை நினைவு நாளில் நினைவுகூர வேண்டும் என அவர் தெரிவித்தார். (செ-4)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 6 பேர் ஐந்து பந்துப் பரிமாற்றம் கொண்ட மென்பந்து போட்டிக்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக்கழகங்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

மேற்படி போட்டியானது இன்று சனி, நாளை ஞாயிறு ஆகிய தினங்களில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

போட்டிக் கட்டணமாக ஆயிரம் ரூபாய் அறவிடப்பட்டதோடு போட்டியானது காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை நடைபெறும்.

இப்போட்டியில் சம்பியனாகும் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும்.

இக்கிரிக்கெட் சுற்றுத் தொடரில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் திஸாந்தன் 077 172 5432 என்பவருடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (க)

## வடக்கில் இராணுவம்...

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர்,

இலங்கை முழுவதும் இராணுவம் இருக்க வேண்டும என்பதற்காகவே வடக்கில் இராணுவம் தற்போது நிலைநிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. உண்மையில் வடக்கில் பொலிஸாருக்கான தேவை மட்டுமே இருக்கிறது.

இராணுவம் ஒரு இடத்தில் அதிகளவில் நிலைநிறுத்தப்பட வேண்டியது வேறு விடயம். ஆனாலும் இப்போது வடக்குக்கு இராணுவத்துக்கான தேவையில்லை. ஒரு சில நேரங்களில் இராணுவத்துடைய தேவை இருக்கலாம். அதே போன்று இல்லாமலும் போகலாம் அது கட்டாயம் இல்லை எனவும் பொன்சேகா தெரிவித்தார். (செ)

JSAC

16 2016

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு செயற்பாடு
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
பெண்களுக்கு பல்துறைக் கல்வி வாய்ப்புக்கள் மற்றும் தொழில் பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதனூடாக சமூகத்தில் ஆண், பெண் சமத்துவத்தினை மேம்படுத்துவோம்.
யாழ் சமூக செயற்பாட்டு மையம்

ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1997 - 09 - 18



விண்ணில் 2015 - 11 - 26

அமரர் இராஜேஸ்வரன் செங்தூரன்
(க.பொ.த (உ/த) பிரிவு ஊடகக்கற்கை மாணவன் - யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி)

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

- குடும்பத்தினர்

# அதிரடிப்படையால் காணி அபகரிப்பு!

பதுளை தெல்பெத்த - மலங்காமை தோட்டப்பிரிவில் விசேட அதிரடிப் படை முகாம் அமைப்பதற்காக ஐந்து ஏக்கர் காணியை சுவீகரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது குறித்து தீர்மானம் எடுக்கும் வகையில் பதுளை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் காலை பிரதேச செயலாளர் பிரபாத் அபேவர்தன தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. எனினும் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படாத நிலையில் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கூட்டத்தில் ஊவா மாகாண சபை உறுப்பினர் ஆறுமுகம் சிவலிங்கம் மற்றும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அ. அரவிந்தகுமார், வடிவேல் சுரேஸ் ஆகியோரது இணைப்பாளர்கள், மலங்காமை தோட்ட முகாமையாளர் பி.கே.சேனநாயக்க, தோட்ட முக்கியஸ்தர்கள், விசேட அதிரடிப் படை முகாம் அதிகாரி மற் றும் படையினர் ஆகியோர் கலந்துகொண்டிருநதனர.

இதன்போது உரையாற்றிய பிரதேச செயலாளர் பிரபாத் அபேயவர்தன அரசிற்கு தேவையான போது குறிப்பிட்ட காணியை சுவீகரிக்க உரிமையுண்டு ஆனாலும், மக்களுடன் நல்லுறவு பேணப்பட வேண்டுமென்ற நிலையில் மக்களின் விருப்பு, வெறுப்புக்களையும் அறியவே கூட்டத்தினை நடத்துகின்றோம் என்றார். விசேட அதிரடிப் படையினர ஏனையவர்கள் போலன்றி ஒழுக்க சலர்களாக கடமையாற்றுபவர் கள். இவர்களுடைய முகாம், குறிப்பிட்ட தோட்டத்தில்அமைவது, மக்களுக்கு பெரும் பாது காப்பாக இருக்கும். மலங்காமை தோட்டக் காணி அரசுடைமையாகும் இதனை வழங்குவதில், எவ்வித ஆட்சேபனையும் கிடையாது என்றார். இதன் பின்னர் கருத்து தெரிவித்த பலர், அதிரடிப்படை முகாம் அமைக்கும் மலங்கமைப் பிரதேசத்தில் ஏற்கனவே, பதுளையின் குப்பைகளை கொண்டு வந்து குவிப்பதற்கு பதுளை மாநகர சபை நடவடிக்கை எடுத்த போதிலும்தோட்ட மக்களின்பலத்த எதிர்ப்பினால், முயற்சி கைவிடப்பட்டது. பாடசாலை, ஆலயம், மக்கள் குடியிருப்பு பகுதிகள், நீர் நிலைகள ஆகியனவும் அமைந்திருப்பதால், முகாமை அமைப்பதற்கு, எம்மால் அனுமதிக்க முடியாது. எனினும் முகாம் அமைப்பது தொடர்பாக இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படாத நிலையில் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ)


## தொழில்நுட்பவியலாளர்கள்/ விற்பனையாளர்கள்/ உதவியாளர்கள் தேவை

கொழும்பில் இயங்கி வரும் எமது டிஷ் ஆண்டெனா மற்றும் கேபிள் டிவி உபகரணங்கள் விற்பனை நிலையத்திற்கு கொழும்பில் தங்கி இருந்து வேலை செய்ய கூடிய டெச்னிசிங் மற்றும் டிஷ் ஆண்டெனா மற்றும் இலத்திரனியல் பொருட்கள் விற்பனையாளர்கள் மற்றும் ரிப்பேர்/ டிஷ் ஆண்டடெனா பொருத்துநர்கள் மற்றும் உதவியாளர்கள் உடன் தேவை. தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் கிடைக்கும் உடன் தொடர்பு கொள்ளவும்.

(சி-6467)

Contact:-0777710785

SATS-TECH ENGINEERS (PVT) LTD

No.51/ 102, Wolfendhal street, Colombo 13



## மாணவிகளுக்கான ஆரம்ப தையல் வகுப்பு ஆரம்பம்

தரம் 3 தொடக்கம் மாணவிகளுக்கான ஆரம்ப தையல் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

விண்ணப்பங்கள் 28,29.11.2016 அன்று பெற்றுக் கொள்ளலாம்.

வகுப்புக்கள்:-03.12.2016 அன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.


தொடர்பு:-077 766 2039

021 222 3502

(6701)


## நீங்கா நினைவலைகள்





திருமதி. சரோஜினிதேவி பாலகிருஷ்ணன்

தோற்றம் :26.12.1944 மறைவு: 30.06.1979

பாலகிருஷ்ணன் யனந்தன்

தோற்றம்: 12.05.1971 மறைவு:16.05.2004

பொன்னையா பாலகிருஷ்ணன் -கணவர், பாலகிருஷ்ணன் ஸசிந்தன்-மகன்

லசிந்தா பகவன்தாஸ் -மகள், ஸ்ரீதேவி யனந்தன் -மருமகள்

யனந்தன் கோஜனன் -மகனின் மகன் -பேரன்

1058, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

(6699)

## மரண அறிவித்தல்



தோற்றம்

21 . 01 . 1950

மறைவு

24 . 11 . 2016

### திருமதி. குமாரசாமி சோதிமலர்

அல்வாய் இலஹடியைச் சேர்ந்த திருமதி. குமாரசாமி சோதிமலர் அவர்கள் 24.11.2016 வியாழக்கிழமை காலமானார். அன்னார் சுப்பிரமணியம் காலஞ்சென்ற வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான கந்தையா, சகுந்தலை (மாணிக்கம்) ஆகியோரின் மருமகளும் கந்தையா குமாரசாமியின் அன்பு மனைவியும் ஆவார். அன்னார் அனிதா (Canada), அகிலன் (Canada), வனிதா (சுட்டி -London) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவகரன்(Canada), கிரிசாந்தன் (London) ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.11.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அல்வாய் கிழக்கு கரகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலஹடி

அல்வாய் கிழக்கு, அல்வாய்.

021 226 1211

(சி-6477)

தகவல்:

குடும்பத்தினர்.

## இராசி பலன்

26.11.2016

(கார்த்திகை 11, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு

துவாதசி முற்பகல் 11.54 மணிவரை

சித்திரை பிற்பகல் 5.02 மணிவரை

சுபநேரம் 3.12-4.42 மணிவரை

இராகுகாலம் 9.12-10.42 மணிவரை

சனிப் பிரதோச விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்திரட்டாதி, ரேவதி | | |
| செவ் | | | ராகு |
| சுக்<br>புத | சூரி<br>சனி | சந் | குரு |

**மீனம்:** வரவும் செலவும் சமமாகும் நாள், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், புதிய பொறுப்புகளை யோசித்து ஏற்பது நல்லது.

**மேடம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**இடபம்:** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், உள்ளம் மகிழும் விதத்தில் உரிதி வருமானங்கள் வந்து சேரலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்:** பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், நன்மைகள் நடைபெறும் நாள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள்.

**கும்பம்:** நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், பயண ங்களால் பலனுண்டு, புதிய முயற்சிகள் கைகூடும்.

**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொல்லை கொடுத்த சிலரே உதவ முன் வரலாம்.

**மகரம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட் டுவீர்கள், வருமானம் திருப்தி கரமானதாக அமையும், சான் றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாட்டில் ஆ வம் கூடும்.

**சிம்மம்:** சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள், உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.


**தனுசு:** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், வீட்டுக்கு தேவை யான பொருட்களை வாங் கும் வாய்ப்புண்டு, நினைத்த காரியங்கள் நிறைவேறும் நாள்.

**விருச்சிகம்:** செலவுகளில் தாராளம் காட்டு வீர்கள், பயணத்தால் பிரபல மானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், உஷ்ண சம்பந் தமான ரோக பயமுண்டு.

**துலாம்:** புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, சிந்தனை மிகுதியான நாள்.

**கன்னி:** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், உங்களின் வார்த்தையை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

# சுவீகரிப்புக்கு எதிராக கவனயீர்ப்பு





(படங்கள்:-மகாலிங்கம்)

(கரணவாய்)

பொலிகண்டி கிழக்கு ஆலடிப் பகுதியில் படகு நிறுத்தும் இடத்தினை சுவீகரிப்பு செய்வதற்கு எதிரான கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் நடைபெற்றது. பொலிகண்டி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ம.ஜீவராஜா தலைமையில் நடைபெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தில் அப் பகுதி கடற்றொழிலாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அப் பகுதியில் படகு நிறுத்தும் இடத்தினை தனி நபர் ஒருவர் சொந்தம் கொண்டாடுவதனால் தாம் தொழிலினைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டதாகத் தெரிவித்து பொலிகண்டி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கத்தினால் கடந்த மே மாதம் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டு மகஜர்களும் கையளிக்கப்பட்டது.

இதில் முதலமைச்சர் செயலகத்தால் 11.04.2016ஆம் திகதி இடப்பட்ட கடிதத்தில் இம்முறைப்பாட்டை பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை பிரதேச செயலாளரைக் கோரியிருந்தது.

ஆனால் எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை எனத் தெரிவித்து அப் பகுதி கடற்றொழிலாளர்களால் நேற்று மீண்டும் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

இதில் முதலமைச்சருக்கு கடிதம் ஒன்று எழுதப்பட்டு அதன் பிரதிகள் அரச அதிபர், பருத்தித்துறை பிரதேச செயலர், வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன், கரையோரக் காவல் திணைக்களம், பருத்தித்துறை நீதிமன்றம் ஜே/394 கிராம அலுவலர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டது.


இப்போராட்டத்தில் "அரசாங்க அதிகாரிகளே எதற்காக எமக்கு நீதி தர மறுக்கிறார்கள்", அன்று செய்த ஆர்ப்பாட்டத்திற்கு ஏன் இன்னும் பதில்தரவில்லை என்ற சுலோகங்களைத் தாங்கி நின்றனர்.

இக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கடற்றொழிலாளர்களுடன் வட மாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கமும் கலந்து கொண்டிருந்தார். (இ-60)

## விண்ணப்ப திகதி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம் கொக்குவில் தொழில்நுட்பவியல் கல்லூரியின் NVQ மட்டம் 3, 4 தர கற்கை நெறிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளது.

பொறியியல்துறை, வர்த்தகத்துறை, தொழிற்றுறை ஆகிய அனைத்து கற்கை நெறிகளுக்கும் விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 02.12.2016 வரை விண்ணப்பிக்க முடியும் என பணிப்பாளர் எஸ்.முகுந்தன் அறிவித்துள்ளார். (இ-3)

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்கள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் அமரர் சின்னையா தவரட்ணத்தின் உருவப்பட அங்குரார்ப்பணமும் அஞ்சலி நிகழ்வும் நேற்றையதினம் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்கள் சம்மேளன அலுவலகத்தில் நடைபெற்றது. யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்கள் சம்மேளன தலைவர் தவச்செல்வம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா)

## வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

கரவெட்டி கிழக்கு யாக்கரு பெரியதம்பிரான் கோவில் வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

தற்பொழுது பெய்து வரும் மழையினால் நீர் தேங்கிய நிலையில் பயணிக்க பெரும் சிரமாக சகதியுடன் காணப்படுகிறது. இவ்வீதியில் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், உத்தியோகத்தர் எனப் பலர் சென்று வருகின்ற நிலையில் இது சம்பந்தமாக ஏற்கனவே உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இன்னும் இவ் வீதி திருத்தப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே இவ்வீதியை விரைந்து புனரமைப்புச் செய்து தர வேண்டும் என அப்பகுதி வாழ் மக்கள் கேட்டுள்ளனர். (செ-3-60)

## குருதிக் கொடை

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தால் சர்வதேச மாற்றுத் திறனாளிகளின் தினத்தை முன்னிட்டு யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியினரின் ஒத்துழைப்புடன் குருதிக் கொடை நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரையும் இல.05, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் இடம்பெறும். நிறுவனப் பயனாளிகள், பொது மக்கள், ஆர்வலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்குமாறு யாழ். ஜெய்ப்பூர் நிலையத் தலைவர் டாக்டர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி அறிவித்துள்ளார். (இ-3)


## வலிகாமம் கல்வி வலயத்தின் அதிபர், ஆசிரியர் கௌரவிப்பு

வலிகாமம் கல்வி வலயத்தின் அதிபர், ஆசிரியர் கௌரவிப்பு விழா இன்று சனிக்கிழமை வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே, கௌரவ விருந்தினராக வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) எஸ்.யூ.சந்திரகுமாரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)








யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரின் 2016 ஆம் ஆண்டுக்கான ஒளிவிழா நிகழ்வு பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.ஆயர் அருட்திரு ஜஸ்டின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையும் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மறைக்கல்வி இயக்குநர் அருட்பணி ஏ.எப் பெனட் அடிகளாரும் கௌரவ விருந்தினராக யாழ். கல்வி வலய கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி விக்ரோரியா எல்விஸ் பிறிஸ்லி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# தலைவர் பிரபாகரனுக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்து சுவரொட்டிகள்

(3 ஆம் பக்க தொடர்ச்சி...)

கரிகாலனுக்கு பிறந்த நாள் வாழத்துக்கள், தமிழீழ தேசிய த்தலைவர் மேதகு வேலுப் பிள்ளை பிரபாகரன் அவர் களுக்கு 62 வது பிறந்தநாள் வாழ்த்துக்கள் என குறித்த சுவரொட்டிகளில் குறிப்பி டப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப்பு லிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரனுக்கு இனறு 26 ஆம் திகதி 62 ஆவது பிறந்த நாள். வல்வெட்டித் துறையில் வேலுப்பிள்ளை மற்றும் பார்வதியம்மாள் ஆகியோருக்கு 1954 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி மகனாக பிரபாகரன் பிறந்தார்.

இவரது பிறந்த நாள் இன் றைய தினம் உலகத் தமி ழர்களால் கொண்டாடப்பட வுள்ள நிலையிலேயே மேற் படி துண்டுப்பிரசுரங்கள் யாழ்.பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் ஒட்டப் பட்டுள்ளன. புலிகளின் சின் னம் பொறிக்கப்பட்டு அதற்கு முன்னால் புலிகளின் தலை வர் பிரபாகரன் நிற்கும் புகை ப்படம் அச்சிடப்பட்டுள் ளது.

இதேபோன்று மாவீரர் நாளுக்கான சுவரொட்டியும், மஞ்சள், சிவப்பு வர்ணங்க ளில் அச்சிடப்பட்டு அதில் மாவீரர கல்லறையும் பொறிக் கப்பட்டுள்ளது. இவ்விரண்டு சுவரொட்டிகளும் யாழ். பல்க லைக்கழக சமூகம்என உரிமை கோரப்பட்டுள்ளது.

இச்சுவரொட்டிகள் மிக வும் நேர்த்தியான முறையில் அசசிடப்பட்டுள்ளதோடு, யாரால் ஒட்டப்பட்டது என்பது குறித்து தகவல் ஏதும் வெளியாக வில்லை. இதனையடுத்து யாழ்.பல்கலைக்கழகத்தை சூழ புலனாய்வுபிரிவினர் களமிறக்கப்பட்டுள்ளனர்.(இ-4)




# ஒருமைப்பாடு, நல்லிணக்க அமைச்சின் செயலாளராக சிவஞானசோதி நியமனம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன , தேசிய ஒரு மைப்பாடு மற்றும் நல்லி ணக்க அமைச்சின் செய லாளராக வேலாயுதன் சிவ ஞானசோதியை கடந்த 9 ஆம் திகதியிலிருந்து அமுலு க்கு வரும்வரை நியமனம் செய்துள்ளார்.



வேலாயுதன் சிவஞான சோதி இந்நியமனத்திற்கு முன்னதாக சிறைச்சாலை கள் மறுசீரமைப்பு, புனர் வாழ்வளிப்பு, மீள்குடியேற் றம் மற்றும் இந்துமத அலுவ ல்கள் அமைச்சு, தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபி விருத்தி அமைச்சுக்களில் செயலாளராக 2010ஆம்ஆண் டிலிருந்து கடமையாற்றியு ள்ளார்.

தேசிய ஒருமைப்பாடு மற் றும் நல்லிணக்க அமைச்சு நேரடியாக ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவின் கீழ் வருவதோடு ஜனாதிபதி தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கு பொறு ப்பான அமைச்சராகவும் இரு ப்பது குறிப்பிடத்தக்கது.(இ-10)

# உயிர் பறிக்கும் சட்டத்துக்கு ஆதரவு வழங்க முடியாது

## கெமுனு விஜேரத்ன அறிவிப்பு

(கொழும்பு)

மக்களின் உயிர்களைப் பறிக்கும் சட்டத்தைக் கொண்டு வர ஆதரவு தெரிவித்து ஆர்ப பாட்டத்தில் ஈடுபட தனியார் பேருந்து உரிமையாளர் சங் கம் தயாரில்லையென அச்ச ங்கத்தின் தலைவர் கெமுனு வஜேரத்ன தெரிவித்துள்ளார்.

தண்டப் பத்திரத்திலுள்ள 33 வகையான தண்டப் பண அறவீடுகளை நீக்குவதற்கு தமது சங்கம் அரசாங்கத்து டன் மேற்கொண்ட பேச்சு வார்த்தையினால் முடியு மாகியதாகவும் அவர் சுட்டி க்காட்டியுள்ளார்.



இந்த தண்டப் பண அற வீட்டுப் பத்திரத்தில் 6 வகையான குற் றங்கள் மக்களுடைய உயிர்களுக்கு அச்சு றுத்தலானவை. இவ ற்றை நக்குமாறு கோருவதற்கு, பொறு ப்புள்ள அமைப்பு என்ற வகையில் எம் மால் முடியாது என வும் கெமுனு விஜே ரத்ன தெரிவித் தார்.

எதிர்வரும் டிச ம்பர் முத லாம் திகதி நாட்டிலுள்ள பேரு ந்து சங்கங்கள் பல வும் பணிப்பகிஷ்கரி ப்பு நடவடிக்கைக்கு அழைப்பு விடுத்துள் ளது. இது குறித்து கருத்துத் தெரிவிக் கையிலேயேஅவர் இவ்வாறு பதிலளித் துள்ளார். (இ-10)


யாரிடம் பேசுவது ?

மனதில் சுமையா? வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா? துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?

எம்முடன் மனம் விட்டுப் பேசுங்கள்.

உங்களை உள்ளவாறு ஏற்றுக்கொள்வோம். எடை போட மாட்டோம். வெறுமையான புத்திமதிகள் சொல்ல மாட்டோம். உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிவகைகளை நீங்கள் கண்டறிய உறுதுணையாக இருப்போம். எத்தனை மணித்தியாலங்கள், எத்தனை நாட்கள் வேண்டுமாயினும் உங்களுக்காக ஒதுக்குவோம். ரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் இயங்கும் இலவச சேவை

தொலைபேசியில் அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள். உங்களுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

கை கொடுக்கும் நண்பர்கள்

104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

(021) 222 8117 / 077 900 8776

(தினமும் காலை 9.00-1.00)

வவுனியாவில் (024) 324 4444 சனி, ஞாயிறு காலை 9.00—1.00

(மத சார்பு எதுவுமற்ற அமைப்பு)

Advt. sponsored by: Enlightenment Circle, UK (Saiva Munneta Sangam)



அன்பு வாசகர்களே!

உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

நீங்கள் அறிந்த
- செய்திகள்
- புகைப்படங்கள்
- நிகழ்வுகள்
- பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல

076 636 3378

Viber



கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா:51செவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்
தொ.இ: B/6508

பிறப்பு: 1987 இந்து
நடசத்திரம் திருவாதிரை செவ் 7 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்BA/தனியார் தொழில்
தொ.இ: B/6509

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 3 3/4
உயரம்: 165cm
தகைமை/தொழில்:BA/அரசதொழில
தொ.இ: B/6512

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 45செவ் 2 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்BSc Eng முகாமை யாளர்
தொ.இ: B/6514

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 10
உயரம்: 4'9"
தகைமை/தொழில்:A/L/வங்கியாளர்
தொ.இ: G/6513

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 20செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/6517

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 32செவ் 8 இல்
உயரம்: 155cm
தகைமை/தொழில்:BA, MA/ஆசிரியர்
தொ.இ: G/6518

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 79சூரிசெவ் 1 இல்
உயரம்: 165cm
தகைமை/தொழில்:BSc/அரசதொழில்
தொ.இ: G/6520

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
அலுவலக நேரம் காலை 9.00-5.00 மணிவரை
ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினமாகும்

# நெற்பயிர்களை நாசம் செய்யும் கட்டாக்காலி கால்நடைகள் பிடிக்கப்பட்டு குற்றப்பணம் அறவிடும் நடவடிக்கை ஆரம்பம்

## துணுக்காய் கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் அறிவிப்பு

(மல்லாவி)

**துணுக்காய் கமநல சேவை நிலையப் பிரிவிற்குட் பட்டபகுதிகளில் 2016-2017ஆம் ஆண்டுக்கான கால போக நெற்செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகளின் நெற்பயிர்களை நாசம் செய்யும் வகையில் அலைந்து திரியும் கட்டாக்காலி கால்நடைகள் பிடிக்கப்பட்டு குற்றப் பணம் அறவீடு செய்வதற்குரிய நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் பெரும் பாக உத்தியோகத்தர் சி.பிரபாகரன் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

துணுக்காய் கமநலசேவை நிலையப்பிரிவிற்குட்பட்ட சிறு




குளங்களின் கீழ் மற்றும் வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ளதும் துணுக்காய் கமநல சேவை நிலையப்பிரிவிற்குள் அடங்குவதுமான பெரிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழும் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் விவசாயத்தை மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் திகதி கடந்த ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ஆயினும் கால்நடை வளர்ப்போரில் சிலர் கால்நடைகளைக் கட்டுப்படுத்தாது இருப்பதால் விவசாயிகளுக்கு பயிரழிவு ஏற்படுகின்றது.

எனவே கடந்த 15ஆம் திகதியில் இருந்து கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிப்பதற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய கட்டாக்காலியாகத் திரியும் ஆடுகள், மாடுகள் ஆகியவற்றை பிடிப்பவர்களுக்கு பிடிகூலி ஆயிரம் ரூபாவும் மற்றும் குற்றப் பணம் 500 ரூபாவும் நாளொன்றுக்கான பராமரிப்பு ஆடு ஒன்றிற்கு 250 ரூபாவும் மாடு ஒன்றிற்கு 350 ரூபாவுமாக மொத்தம் ஆயிரத்து 850 ரூபா மாடு ஒன்றிற்கும் ஆடு ஒன்றிற்கு ஆயிரத்து 750 ரூபாவுமாக அறவிடப்படும்.

குறித்த கட்டாக்காலிகளை 48 மணித்தியாலங்களுக்குள் உரிமையாளரினால் மீட்கப்படாவிடின் அவை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# மன்னார் உப்பளம் கைமாறுமாகில் நாம் போராட்டத்தில் குதிப்போம்

## வடமாகாண கடற்றொழில் இணைய தலைவர் எச்சரிக்கிறார்

மன்னார் மாந்தை உப்பு உற்பத்தி கூட்டுத்தாபனம் பாரிய அளவில் அபிவிருத்தியடைந்து நல்ல வருமானத்தை ஈட்டித்தந்து கொண்டிருக்கும் நிலையில் தனியாருக்கு அல்லது வெளிநாட்டவர்களுக்கு கைமாற்றப்படுவதை மீனவ சமூகமாகிய நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டோம் என வடக்கு மாகாண கடற்றொழில் இணையத்தின் தலைவர் என்.எம்.ஆலம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச்சங்க சமாசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த வருடம் உப்பின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரு மூடை சுமார் ஆயிரத்து 600 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தற்போது குறித்த உப்பளம் வரவு செலவுத் திட்டத்தில் தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

தனியாருக்கு உப்பளத்தை விற்பனை செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு மன்னார் மாவட்ட மீனவ சமூகமாகிய நாங்கள் வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்வதோடு, மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள் தமது கண்டனத்தை தெரிவித்து வருகின்றன.

எனவே மன்னார் உப்பளம் தனியாருக்கு அல்லது ஏனைய வெளிநாடுகளுக்கு கையளிக்கப்படுவதை நாங்கள் வண்மையாக கண்டிக்கின்றோம்.

எனவே எதிர்காலத்தில் உப்பளம் கைமாற்றப்படுவதை நாங்கள் விரும்பவில்லை. அதற்கு எதிராக போராட்டத்தை முன்னெடுப்போம்எனதெரிவத்தார். (2-9)

# மாவீரர் துயிலும் இல்லங்கள் சிரமதானப் பணி மூலம் துப்புரவு

நொச்சி கிளையினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம், முழுங்காவில் மாவீரர் துயிலும் இல்லம், விசுமடு மாவீரர் துயிராவது முற்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன கடந்த வாரம் அறிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், யுத்தத்



கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களைச் சிரமதானம் செய்யும் பணிகள் அப்பகுதி மக்களினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிரமதான பணிகள் நேற்று காலை வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை தலைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம், முழங்காவில், ஆகிய பகுதிகளில் இரண்டு மாவீரர் துயிலும் இல்லங்கள் காணப்படுகின்ற போதிலும், யுத்தத்தின் பின் இரண்டு துயிலும் இல்லங்களும் இராணுவத்தினரால் முற்றாக அழிக்கப்பட்டு அவர்கள் வசம் இருந்தது. எனினும இப்பொழுது குறித்த பகுதிகளில் இருந்த இராணுவ முகாம் அகற்றப்பட்டுள்ள நிலையில் கனகபுரம், மாவீரர் துயிலுமில்லம் மக்களினால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத் துப்புரவாக்கும் பணியில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜாவும் கலந்து கொண்டுள்ளார்.

இதேவேளை நாளை திகதி மாவீரர் நாள் அன்று கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லம் மற்றும் முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லங்களில் மாலை 6.05 மணிக்கு வணக்க வழிபாட்டு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. எனவே மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் பொதுமக்கள் என எல்லோரையும் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துமாறும் தமிழ்த் தேசியக்கூட்டமைபின் கிளிலும் இல்லம் ஆகியவற்றில் விசுவமடு துயிலும் இல்லத்தில் இராணுவம் இருப்பதனால் ஏனைய இரண்டு மாவீரர் துயிலும் இல்லங்களில் இம்முறை மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

போரின்போது கொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை நினைவுகூருவதற்கு எவதின் போது உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்கு அனைவருக்கும் உரிமையுள்ளதாகத் தெரிவித்துள்ள வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், நாளை 27 ஆம் திகதி நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும் என அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-312-271)

# வன்முறைகள் குறைவடைய வேண்டுமாகில் தண்டனைகள் அதிகரிக்கப்படல் வேண்டும்

## முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு




பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் குறைவடைய வேண்டும் என்றால் வன்முறைகளில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கான தண்டனைகள் அதிகரிக்கப்பட வேண்டுமென முல்லைத்தீவு அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

"பால்நிலை வன்முறைகளுக்கு எதிரான பணத்தையும் பலத்தையும் சேகரிப்போம்" எனும் தொனிப் பொருளில் உலக பால்நிலை வன்முறைகளுக்கு எதிரான வாரமான நவம்பர் 25 தொடக்கம் டிசெம்பர் 10 வரையான "வெண்பட்டி தின" வாரத்தின் தொடக்க நிகழ்வும் பேரணியும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தால் நேற்று நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முல்லைத்தீவு அரச அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (2-281)

# இபாட் திட்ட இரணைமடு அபிவிருத்தியில் முறைகேடு நிவர்த்தி செய்யப்பட்டு நிதி விடுவிப்பு மேற்கொள்ளப்படும்

## கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் திட்டவட்டம்




கிளிநொச்சி இரணைமடு அபிவிருத்தி திட்டத்தின் ஒரு பகுதியான இபாட் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்திப் பணிகளில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் இரணைமடுக்குளத்தின் கீழ் வருகின்ற கமக்கார அமைப்புக்களை உள்ளடக்கிய பிரதேசங்களில் விவசாய வீதிகள், பாலங்கள், நீர்ப்பாசன வாய்க்கால்கள், பொதுக் கிணறுகள் என்பன பெருமளவு நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த அபிவிருத்திப் பணிகளிலேயே முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பாலங்கள், நீர்ப்பாசன வாய்க்கால்கள் என்பன பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ள போதும் அவை சீராக அமைக்கப்படவில்லை. அவற்றுக்குரிய நியமங்களுக்கு அமைவாக பணிகள் இடம்பெறவில்லை.

மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் தற்போது பெய்துள்ள ஓரளவான மழைக்கே தாக்குப் பிடிக்காது சேதமுற்ற நிலையிலும், சரிந்து விழும் நிலையிலும் காணப்படுகின்றது.

குறிப்பாக கிளிநொச்சி, திருவையாறு, மகிழங்காடு கமக்கார அமைப்புக்குட்பட்ட பிரதேசத்தில் அண்மையில் இத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பொதுக்கிணறு இரண்டு பக்கங்களில் மேலிருந்து அடி வரைக்கும் வெடிப்பு ஏற்பட்டு எந்த நேரத்திலும் இடிந்து விழும் நிலையில் காணப்படுகிறது. அதே வேளை அந்தப் பகுதியில் புனரமைக்கப்பட்ட விவசாய வீதிகளின் பணிகள் நிறைவுபெற்றுள்ளன என்று கூறப்பட்ட போதும் குறித்த வீதிகளில் விவசாயிகள் விவசாய உள்ளீடுகளை கொண்டு செல்ல முடியாத நிலையில் உள்ளனர்.



இதேவேளை அங்கு அமைக்கப்பட்டுள்ள நீர்ப்பாசன வாய்க்கால்களில் உள்ள மதில்கள் மற்றும் மதவுகள் என்பன சாதாரண மழைக்கு தாக்குப் பிடிக்க முடியாது உடைந்து காணப்படுகின்றன.

எனவே இவ்வாறு பல குறைப்பாடுகள் இபாட திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளில் காணப்படுகிறது என விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஒதுக்கப்பட்டுள்ள பெருமளவு நிதிக்கு அமைவாக நீடித்து நிலைத்திருக்கக் கூடிய வகையில் அர்ப்பணிப்புடன் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுங்கள் என விவசாயிகள் வினயமாக கோருகின்றனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் பொறியியலாளர் எஸ்.சுதாகரனை தொடர்பு கொண்டு கேட்ட போது,

இபாட் திட்டத்தின் கீழ் இவ்வாறான பல குறைபாடுகள் காணப்படுகின்றன. மழை பெய்த பின்னர் தான் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளின் குறைபாடுகள் வெளிப்பட்டுள்ளன.

எனவே ஒப்பந்தகாரர்களிடம் இருந்து இன்னும் திணைக்களம் குறித்த அபிவிருத்திப் பணிகளை பொறுப்பேற்றுக்கொள்ளவில்லை. பொறுப்பேற்கின்ற போது இவ்வாறான குறைபாடுகள் கண்டறியப்பட்டால் அவை நிவர்த்தி செய்யப்பட்டே பொறுப்பேற்கப்படும். அதுவரைக்கும அவர்களுக்கான நிதி விடுவிப்பும் மேற்கொள்ளப்படாது என்றும் தெரிவித்தார். (2-312)

## வவுனியாவில்

## தேசிய நடமாடும் மின் சேவை இன்று

(வவுனியா)

மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சின் 'இருள் அகன்று -முழுநாடும் ஒளிமயம்' தேசிய மின் செயற்பாடு தொடர்பாக தேசிய நடமாடும் மின் சேவை இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணிவரை வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி பிரதி அமைச்சர் அஜித் பீ.பெரேரா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இலங்கை மின்சார சபையின் சிரேஷ்ட அதிகாரிகளின் பங்களிப்புடன் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)




# அனுமதி இன்றி மண் ஏற்றி பயணித்த உழவு இயந்திரம் கைப்பற்று

## சாரதியும் கைதானார்; மல்லாவி காட்டுப்பகுதியில் சம்பவம்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயப்பிரிவிற்குட்பட்ட மல்லாவி பொலிஸ் பகுதியிலுள்ள மல்லாவி காட்டுப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மண் அகழ்வு செய்து உழவு இயந்திரத்தில் ஏற்றிப் பயணித்த போது உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரியும் கைது செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்குட்பட்ட மல்லாவி, புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி, தென் னியன் குளம், கல்விளான் ஆகிய இடங்களில் அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையிலும் மற்றும் அனுமதிப்பத்திரம் இன்றியும் ஆற்று மணல், கிரவல் மண், விவசாயத்திற்குரிய மண் ஆகியன தினசரி கடத்தப்படுவதாகவும் பயன்தரும் காட்டு மரங்கள் தறிக்கப்பட்டு கடத்தப்படுவதாகவும் வழங்கிய தகவலை அடுத்து முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் நேரடி உத்தரவிற்கு அமைய முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி உப-பொலிஸ் பரிசோதகர் இ.சேந்தன் தலைமையிலான பொலிஸ் அணியினரின் திடீர் சுற்றி வளைப்பின் போதே அனுமதிப்பத்திரமின்றி மண் கடத்தலில் ஈடுபட்ட உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தின் போதுகைப்பற்றப்பட்ட உழவு இயந்திரமும் கைதான அதன் சாரதியும் மேலதிக விசாரணைக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைக்குமாக மல்லாவி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# வவுனியா நகர சபையின் அடுத்த ஆண்டிற்கான பாதீடு தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடல்

(குருமன்காடு)

வவுனியா நகரசபையின் 2017 ஆம் ஆண்டு பாதீடு தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது.

வவுனியா நகரசபையின் 2017 ஆம் ஆண்டுக்கான பாதீடு தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர், நகரசபையின் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்களுடன் நகரசபையின் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், வரியிறுப்பாளர் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது ஒவ்வொரு வட்டாரத்திலும் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக ஆலோசனைக்குழு உறுப்பினர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்ததுடன் பாதீட்டிற்கான முன்மொழிவுகளும் கையளிக்கப்பட்டிருந்தன.

இதேவேளை மேலதிகமாக வட்டார ரீதியாக நகர சபையின் புதிய திட்டமாக மக்களின் வரிப்பணம் மக்களுக்கே சென்றடையக் கூடிய விதத்திலான புதிய திட்டங்களை எதிர்பார்ப்பதாக நகரசபையின செயலாளர் தெரிவித்திருந்தார்.

இதன்போது வட்டார ரீதியாக புதிய திட்டங்கள் மற்றும் நகர சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை ஆலோசனைக்குழு உறுப்பினர்களின் ஊடாக எழுத்து மூலமாக ஓரிரு நாட்களில் சமர்ப்பித்து 2017 ஆம் ஆண்டுக்கான பாதீட்டை மக்களுக்கான பதீடாக செயற்படுத்த உதவுமாறும் தெரிவித்தார். (2-250)

# வெளிநாடு , ஏனைய காரணங்களின் போது அதிபர்கள், ஆசிரியர்களின் விடுமுறை தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டியவை

வடக்கு மாகாண கல்வியமைச்சிற்குட்பட்ட 12 கல்வி வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற அதிபர்கள், ஆசிரியர்கள் வெளிநாடு செல்லும் போதும் ஏனைய காரணங்களுக்காவும் விடுமுறைகள் பெற்றுக்கொள்வது தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களை வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் வலயக் கல்விப்பணிப்பாளர்கள் ஊடாக பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

இது தெடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

அதிபர்கள், ஆசிரியர்கள் பலர் வெளிநாடுகளுக்கு செல்லும் போது உரிய முறையில் விடுமுறை பெறாது நாட்டைவிட்டு வெளியேறுவது அவதானிக்கப்படுகின்றது. அவ்வாறானவர்களுக்கு பதவி வறிதாக்கல் கடிதம் (Vacation of Post) வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கைக்காக நியமன அதிகாரிக்கு முன்னிலைப் படுத்தப்படல் வேண்டும்.

அனுமதியுடன் விடுமுறை பெற்றுச் செல்லும் அதிபர்கள், ஆசிரிய ர்கள் பலர் விடுமுறை முடிவுபெற்ற பின்னரும் உரிய அனுமதியின்றி மேலும் தொடர் விடுமுறையில் நிற்கின்றனர்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் அவர்களின் விடுமுறை முடிவுபெறும் நிதியில் இருந்து பதவி வறிதாக்கல் கடிதம் வழங்கப்படல் வேண்டும். கற்கைநெறிகளுக்கானவிடுமுறையை பெற்றுக்கொள்ளும் அதிபர்கள், ஆசிரியர்கள் உரிய அனுமதி கிடைக்கப் பெற்ற பின்னரே கற்கை விடுமுறையைப் பயன்படுத்த வேண்டும்.

அவ்வாறு இல்லாத சந்தர்ப்பத்தில் அவர்களின் வேதனம் நிறுத்தப்படும் எனவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (2-15)

# ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த பாரவூர்தி உழவனூரில் சிக்கியது

## சாரதியும் கைதானார்

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயப் பிரிவுக்குட்பட்ட தர்மபுரம் பொலிஸ் பகுதியிலுள்ள உழவனூர் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த பாரவூர்த்தி கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்புப்பிரிவு பொலிஸாரினால் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தர்மபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 8.30மணியளவில்நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து சுற்றி வளைப்பொன்றை மேற்கொண்ட பொலிஸார் அனுமதிப்பத்திரமின்றி மணலைக் கடத்திய பாரவூர்த்தியைக் கடத்தியதுடன் அதன் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவத்தின்போது கைப்பற்றப்பட்டுள்ளபாரவூர்தியையும்கைதான சாரதியையும் விசாரணைகளின் பின்னர் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக தர்மபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—98

பயனில்லையென்று எதுவுமில்லை; கழிவையும் பொருளாக்கும் வழிதெரிந்தால்...

# குறைவாக பயன்படுத்தப்படும் தாவரங்கள்

## விளாம்பழத்தின் மகத்துவம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இத்தாவர சங்கமத்தில் பயன்பாடதிகமற்ற தாவரங்கள் **(Underutilized plants)** வரிசையில் விளாவும் ஒன்றாகின்றது.விளா இந்தியாவை பிறப்பிடமாகக் கொண்ட தாவரமாயினும் இலங்கையிலும் சிறப்பாக வளரக்கூடிய பழமரமாகும். வரண்ட வலயத்திற்கான பழங்களுள் விளாவும் ஒன்று. இதனை வசதியற்றவர்கள் பழமென்றும் அழைப்பர். அதிகம் விலை போகாததாயினும் இதனுள் பல ஆச்சரியப்படக்கூடிய விடயங்கள் உள்ளடங்கியிருக்கின்றது. வரட்சியான காலநிலையிலும் சிறப்பாக வளர்ந்திருப்பதுடன் சாலையோரத்தில் சாலை இனங்கண்டு இதனை விருத்தி செய்யவேண்டியது அவசிய மாகும். வீட்டுத்தோட்டத்தில் அவசியம் இருக்கவேண்டிய கனிமரங்களில் விளாவும் ஒன்று. மருத்துவத்தேவை க்கும் இதனைப் பயன்படுத் தினாலும் இதனது கிடைத் தன்மை பெரிதளவில் இல்லை. தற்போது பழரசங்களில் விளாம்பழத்தின் சாறை அடைத்து குளிரூட்டி விற்பனை செய்கின்றார்கள். ஜாம் போன்றவற்றிலும் விளாம்பழ ஜாம் வரத் தொடங்கியிருக்கின்றது. இப்பழத்தை பயன்படுத்துவதை அதிகரிப்பதற்கான சிறந்த முயற்சிகளாக இவற்றைக் குறிப்பிடலாம்.

நூறுகிராம் விளாம்பழத்தில் 8வீதம் புரதம், 1.45 வீதம் கொழுப்பு, 7.45வீதம் எதிர்ப்பு சக்தியை இப்பழம் கொண்டிருப்பது எமக்கு கிடைத்த வரப்பிரசாதமே. இதனது பழச்சாறு இரத்தத்தை சுத்திகரிக்கும் தன்மை கொண்டது. விற்றமின் சீ இனை அதிகமாகக் கொண்ட இப்பழத்தில் மேலும் பலவகையான சத்துக்கள் இருக்கின்றன. புற்றுநோயை எதிர்க்கும் தன்மை இப்பழத்தை உணவாக கொள்பவர்களிடம் உண்டென ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக சிறுநீரகத்தை நல்லநிலையில் வைத்திருப்பதற்கு இப்பழத்தை தொடர்ந்து உட்கொள்ள வேண்டும். போத்தல்களில் அடைக்கப்பட்டுள்ள விளாம்பழ பானம் எந்தளவிற்கு உண்மையானதாக இருக்கின்றது என்பதனை உண்மையே. குறிப்பாக வெளிநாட்டிலிருந்து வருகை தரும் நம்மவர்கள் தேடித்தேடி விளாம்பழத்தை வாங்கி உண்பதனையும் அந்நாட்டில் இது அருமை பெருமையான அதிகம் விலைகூடிய பழமாக இருப்பதாகவும் கூறுகின்றனர்.

பயனில்லை என்று எதுவுமில்லை. ஒவ்வொன்றுக்குமான பயன்பாட்டை கண்டுபிடிக்க முடியாத எம்மவரின் சோம்பேறித்தனம் இது. விளாவை பல இடங்களில் இன்னும் நடுகை செய்தல் வேண்டும். அதன் மதிப்பை உணரக்கூடியவாறு விளாவின் கனிகளை பயன்படுத்தி அதனை மதிப்பேற்றஞ்செய்து இன்னும் பல புதிய உணவுப்பொருட்களை உருவாக்கிவிட்டால் அதுவே அலட்சியமாக தள்ளி வைக்கக்கூடாது. தாவரங்கள் ஒவ்வொன்றிற்குமுள்ள மகத்துவத்தை அறிந்து எமது அன்றாட வாழ்வில் உணவில் அதனை பயன்படுத்த தலைப்பட்டால் எமது சுக ஆரோக்கியத்தை நாம் பேணிக்கொள்ள முடியும் .எம்மை சுகதேகியாக வைத்திருக்கும் இவ்வகை தாவரங்களை நாம் தேவையற்ற இடங்களென கருதும் இடங்களிலும் வீட்டுத் தோட்டத்திலும் நடுகைசெய்து பயன்படுத்துவதோடு அவற்றை நாம் சிறப்பாக

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 115

மரமாக **(Avenue Planting)** வளர்க்கக்கூடிய விளாம்பழத்தைத் தரக்கூடிய மரமாகும். சாலையோர மரமாக நடுவதனால் இம்மரத்திற்குரிய சிறப்புக்கள் அதிகம். வைரமான மரமாக இருப்பதனால் சாலையில் பயணிக்கும் வாகனங்களுக்கு எந்த இடரையும் இம்மரம்தராது. இலைகள் சிறியதாக இருப்பதுவும் இதற்கான ஒரு காரணமாகும். அத்துடன் இயற்கை இடர்கள் வரும்போதும் குறிப்பாக எதிர்பாரதவிதமாக சீறிச்சினக்கும் போதும் அதற்கு வளைந்து கொடுத்து தாக்கும்பிடிக்கும் மரங்களுள் விளாவும் ஒன்று.பொதுவாக விளாம்பழம் இந்துக்களின் சமய சடங்குகளில் பயன்படுத்தப்பட்டாலும் இன்னும் இதனது பயன்பாட்டை அதிகரிக்கும் உணவுப் பொருட்களை கண்டுபிடித்தல் நல்லது. நல்ல பழங்களுள்ள மரங்களை




காபோவைதரேற்று, 5வீதம் சாம்பல், 0.17வீதம் கல்சியம், 0.08வீதம் பொசுபரசு, 0.07வீதம் இரும்புச்சத்து மற்றும் 1.03வீதம் ரானின்கள் இருப்பதாக அறியமுடிகின்றது. குறிப்பாக நீரிழிவு நோயாளர்களுக்கு சிறந்த பழமாக கூறப்பட்டுள்ளது. மலச்சிக்கலுக்கான சிறந்த பழமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. உடலில் எதிர்ப்பு சக்தியைக் அதிகரிக்கக்கூடிய தன்மை விளாம்பழத்திற்கு உண்டு. பலவகை நோய்களுக்கான கூறமுடியாது. அதனால் சந்தையிலேயே பழத்தை வாங்கி அதனை பயன்படுத்துவது சிறந்தது. எங்கும் எதிலும் கலப்படமாக இருக்கும் இக்காலகட்டத்தில் விளாம்பழத்தின் சுவையுடனான உணவுப்பொருட்கள் செயற்கையாகவே உருவாக்கப்படுகின்றன என்பது கசப்பான செய்தி.

விளா குறிப்பிட்ட காலத்தில் தான் பூப்பதும் கனிகளை உருவாக்கினாலும் அதற்கான மவுசு அதிகமாக இருப்பது புதிய தொழில்முயற்சிக்கான அத்திபாரமாகிவிடும்.

இயற்கையின் உருவாக்கத்தில் உயிரினங்கள் அனைத்திற்குமே அதற்குரிய தனித்துவமும் இடமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆதலின் நாம் அதனை எவ்வாறு பயன்படுத்துகின்றோம் என்பதில் இன்னும் அதனது முக்கியத்துவமும் தனித்துவமும் தங்கியிருக்கின்றது. எதனையும் தேவையற்றது அல்லது அவசியமற்றது என எண்ணும் தன்மையிலிருந்து நாம் மாறவேண்டும். தேவையற்ற தென தெரிகின்ற பொருளை தேவைப்படும் பொருளாக மாற்றிக்காட்ட வேண்டும். இயற்கையின் விந்தையை அதன் ஆளுமையை நாம் இன்னும் உணராமலேயே இருக்கின்றோம்.

தாவரங்கள் அனைத்திற்குமே சிறப்புக்களுண்டு.பல ஊட்டச்சத்துக்களை இலகுவாக பெறக்கூடிய விற்றமின்களை கொண்ட தாவரங்களை நாம் பேணிப்பாதுகாக்கவும் வேண்டும். எதிர்கால சந்ததியின் நல்வாழ்வுக்காக நாம் இதனைக் கூட செய்யமுடியாவிட்டால் எதற்கும் நாம் திராணியற்றவர்களாவோம். வெறுமனே வெட்டிப்பேச்சு பேசும் கூட்டமாக இருந்துவிடாது ஒவ்வொருவரும் ஒரு மரம் நடுகை செய்து பாருங்கள். நடுகை செய்பவர்களை ஊக்குவியுங்கள். என்றோ ஒருநாள் இவ்வுடல் கட்டையில் போகும் போது நிச்சயம் எம்மை சுமக் கும் எமக்காக எரிந்து எமது இந்த உடலை தகனம் செய்யும் அந்த மரங்களுக்காக இன்றொரு மரம் நடுவோம். மற்றையவர் களுக்காக இல்லாது விட்டாலும் எமக்காகவேனும் அந்த சுயநலத்திற்காக வேனும் நாம் ஒரு மரம் நடுவோம்.



# ஆரோக்கியமான சனத்தொகை ஒன்றினை உறுதிப்படுத்தல்

## பட்ஜெட் - 2017

**நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு - செலவுத் திட்டம் அனைவருக்கும் நன்மைதரும் விரைவான அபிவிருத்தியை நோக்கி** என்ற தொனிப்பொருளில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் 10.11.2016 அன்று நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டது. நிதி அமைச்சரின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட வாசிப்பின் போது...

(தொடர்ச்சி)

212.இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில், இது தொடர்பாக வெளியிடப்பட்ட தொடர்புடைய ஒழுங்கு விதிகளை தேவைக்கேற்றவாறு திருத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இத்திருத்தங்கள் சர்வதேச துறைமுகங்கள் அல்லது விமான நிலையங்களின் 5 கிலோ மீற்றர் சுற்றளவுக்குள் இனங்காணப்பட்ட பிரதேசங்களையும் உள்ளடக்கும் வகையில் மேற்கொள்ளப்படுவதுடன் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்படுத்துநர்கள் வர்த்தக மைய தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் இத்திருத்தம் இடம்பெறும். ஒரு வருட காலப்பகுதிக்குள் முதலடு செயயப்பட முடியுமான தொழிற்பாட்டு மறறும் நிலையான மூலதனம் இரண்டினையும் உள்ளடக்கும் வகையில் முதலடுகள் விரிவாக்கப்படும் வகையில் ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்ட முதலீட்டுத் தேவைப்பாடுகள் இலகுபடுத்தப்படும். பெற்றுக்கொண்ட அனுபவத்தின் அடிப்படையில், பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள் விரிவாக்கப்படுவதுடன் இதுதொடர்பான விசேட தொழிற்பாட்டு வழிகாட்டல்கள் அனைத்து எண்ணக்கருக்களையும் உள்ளடக்கும் வகையில் உடனடியாக வெளியிடப்படும்.

213.பூச்சிய உள்நாட்டு சரக்கு கொள்கலனுடன் பல்நாட்டு இணைப்பு கொள்கலன்கள் (Multi Country Consolidated) இறக்கியேற்றல் கொள்கலனொன்றாக கருதப்படுவதுடன் தொடர்புடைய சரக்கு மேடை கையாளல் கட்டணங்கள் அத்தகைய கொள்கலன்களுக்கு பொறுப்புடையதாக மாட்டாது. பல்நாட்டு இணைப்பு கொள்கலன்களை மீள்நிரப்புவதை தாராளமயப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இதற்காக அதேபோன்று சேவை வழங்கல் மைய ஒழுங்குவிதிகளுக்குட்பட்ட இயக்குநர்களுக்கு மீள்நிரப்புவதற்கான வசதிகளை ஏற்பாடு செய்வதற்கான வசதிகளை அனைத்து இறங்குதுறைகளிலும் செய்து கொடுப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**நுழைவுத்துறைமுக வாத்தகம்**

214.அதேவேளை, சரக்குக் கையாளல் கட்டணங்கள் செலுத்தபட்ட நிறுவனங்கள் வெளித்துறைமுக வர்த்தகம் தொடர்பான ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளுக்கு வெளிநாட்டுச் செலாவணியற்ற (No Foreign Exchange) நிபந்தனைக்கமைவாக அனுமதி வழங்கப்படும்.

**விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் அபிவிருத்திக்கான கண்டுபிடிப்புக்கள்**

215. சபாநாயகர் அவர்களே, உணவுப் பயிர்கள் /உணவுப் பாதுகாப்பு ஆகியனவற்றில் பாதுகாப்பு, ஆரோக்கியமான சனத்தொகையொன்றினை உறுதிப்படுத்தல், உலகளாவிய் பெறுமதிச் சங்கிலிக்குள் உள்வாங்குவதற்கான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல் மற்றும் சிறந்த அரச சேவை விநியோக முறைமையொன்றினை உருவாக்குதல் உள்ளடங்கலாக எமது சொந்த அபிவிருத்தியையும் மற்றும் கொள்கை இலக்குகளையும் இனங்காணவேண்டுமாயிருந்தால் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் நவீன கண்டுபிடிப்புக்களுக்கு நாம் போதிய அளவில் நிதி வசதிகளை வழங்குவதோடு, அத்துறைகளுக்கு ஆதரவளிக்க வேண்டியதும் மிக இன்றியமையாததாகும் என்பதை நான் நம்புகின்றேன்.

விஞ்ஞானம், தொழில்நுட்பம், மற்றும் நவீன கண்டுபிடிப்புக்களின் வகையீட்டினைவிருத்தி செய்வதற்காக நாம் கடந்த ஆண்டில் ரூபா 826 மில்லியனை ஒதுக்கீடு செய்ததோடு, இவ்வாண்டிலும் ஏற்கனவே ரூபா 1,306 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளோம்.

பொதுவாக அரசாங்க நிதியீட்டுடன் தொடர்புடைய விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் நவீன கண்டுபிடிப்புக்களின் முயற்சிகளுக்கான நிதியீட்டத்திலுள்ள எதிர்வு கூற முடியாத அச்சத்தை நீக்க முடியுமென்பது எனது நம்பிக்கையாகும். ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியுடன் தொடர்புடைய இடர்களைப் பங்கேற்பதற்கு எமது அரசாங்கம் விரும்புகின்றது என்பதை உறுதியளிக்கின்றேன். நாட்டை செழிப்படையச் செய்வதற்கு விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் நவீன கண்டுபிடிப்புக்களுக்கான சாதகமான சூழல் ஒன்றை உருவாக்குவதற்கு நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம்.

216.கடந்த ஆண்டில் வர்த்தகமயமாக்கலுக்கு விசேடமாக அத்தியாவசியமான இறுதிக்கட்ட நிதியீட்டுக்கு ஆதரவளிப்பதற்காக நவீன கண்டுபிடிப்புக்களை துரிதப்படுத்துவோர் நிதியத்தினை அறிமுகப்படுத்தியிருந்தோம்.

இத்துறைக்கான ஆதரவானது பற்றாக்குறையாகக் காணப்படுவதோடு, அதனால் கண்டுபிடிப்பொன்றின் மூலம் பொருளாதாரத்திற்குக் கிடைக்கக்கூடிய உண்மையான அடைவு தடைப்படுகின்றது.

எனவே இத்துறையை வர்த்தக்மயமாக்குவதற்கும் ஊக்குவிக்கின்றேன். இதன் மூலம் "ஆராய்ச்சிகளை பணமாக" இலகுவாக மாற்ற முடியும். ஆகவே அதன் செயற்பாடுகளைத் தொடர்வதற்காக ரூபா 100 மில்லியனை 2017 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்வதற்கும் முன்மொழிகின்றேன்.

217.மருந்துப் பொருட்களின் கைத்தொழில், பிரதானமாக மரபியல் (Genomics) போன்றனவற்றில் ஈடுபட்டுள்ள கம்பனிகளுக்கு வசதிகளை வழங்கக்கூடிய உயிர் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றினை ஸ்தாபிக்கவுள்ளோம். இவ்வுயிர் தொழில்நுட்பப் பூங்காவின் ஸ்தாபிப்பானது அரசாங்க - தனியார் பங்கேற்பு அடிப்படையில் ஏற்பாடு செய்வதற்கான விஞ்ஞான தொழில் நுட்ப நவீன கண்டுபிடிப்புக்களை ஒருங்கிணைப்பதற்கான செயலகத் தினை (COSTI) ஊக்குவிக்கின்றேன்.

அரசாங்கம் காணி, மின்சக்தி, மற்றும் நீர் போன்ற பயன்பாடுகளையும் ஒதுக்கீடு செய்யும். இந்நோக்கத்திற்காக ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

218. இலத்திரனியலின் பிரதான பரப்புகளில் கம்பனிகளை ஆரம்பிப்பதற்கு ஆதரவளிக்கும் மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் இலத்திரனியல் வடிவமைப்பின் மேம்பாட்டு நிலையத்திற்கு ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன். இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவனத்திற்கும் (SLINTEC) ரூபா 250 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

219.றோபோக்களின் பிரயோகத்தில் விசேடத்துவம் பெற்ற நிலையம் (CERA) ஒன்றினை ஸ்தாபிப்பதற்கான முயற்சிகளையும் நாம் ஏற்கனவே ஆரம்பித்திருககின்றோம். இந்நிலையத்தினை மேலும் பலப்படுத்துவதற்கு ரூபா 50 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன். மரபியல் விஞ்ஞானத்தில் விசேடத்துவம் பெற்ற நிலையத்திற்கும் நாம் ரூபா 50 மில்லியனை ஒதுக்கீடு செய்வோம்.

220.கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திலுள்ள மருத்துவ ஆய்வுகூடத்தினை விரிவடையச் செய்வதற்கும் ரூபா 150 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

221.உயிரியல் ரீதியான நுகர்வுப் பொருட்கள், மாதிரிகள், உபகரணங்கள் போன்றனவற்றின் இறக்குமதிகள் சுங்கத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றன என்பது எனக்குத் தெரியும். இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நிதி அமைச்சு, இலங்கை சுங்கத் திணைக்களம் மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு (TRC) மற்றும் தொடர்புடைய பங்கேற்பாளர்களுடன் இணைந்து புதிய திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தும். முன்மாதிரிகளை உருவாக்குவதற காக மூலப்பொருட்கள் மீது விதிக்கப்படும் சுங்கத் தீர்வைகளையும் நாம் நீக்குவோம்.

222.ரோபோடிக்ஸ், சைபர்நெடிக்ஸ் இலத்திரனியல் போன்ற எதிர்காலத்தில் உருவாகவுள்ள கைத்தொழில்களுக்கு ஆதரவளிப்பதற்காக வரி வெகுமதிகளை வழங்குமாறு நான் முன்மொழிகின்றேன்.

223.அதிக அளவிலான ஆராய்ச்சிகளையும் அபிவிருத்தியினையும் ஊக்குவிக்கும் நோக்குடன் பயனுறுவிளைவினைக் கொண்ட ஆராய்ச்சி செயலாற்றத்தினை நோக்கி பல்கலைக்கழகங்களின் கல்விசார் உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதற்கும் மற்றும் பல்கலைக்கழக முறைமைக்குள் அவர்கள் தொடர்ந்து இருப்பதற்கான போக்கினை விருத்தி செய்வதற்கும் எச்-சுட்டெண் (H- Index) பட்டியலிடப்பட்ட வெளிப்படையான ஒரு இருக்கை வரிசையை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சி செயலாற்றத் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவை நாம் அழைக்கின்றோம்.

இத்திட்டமானது தற்போது செலுத்தப்பட்டு வரும் நடைமுறையிலுள்ள ஆராய்ச்சிக் கொடுப்பனவுகளைப் பூரணப்படுத்தக் கூடியதாகவுள்ளது.

224. சபாநாயகர் அவர்களே, உற்பத்திப் பொருட்களின் வடிவமைப்புப் பொறியியலானது தற்போது நடைமுறையிலுள்ள புனைதல் முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் நடைமுறையிலுள்ள தொழில நுட்பங்கள், சேர்க்கைகள், மாதிரிகள் ஆகியனவற்றை ஒன்றிணைப்பதன் மூலம் மேற்கொள்ளப்படும் வடிவமைப்பு உற்பத்தியாகும். இது ஆராய்ச்சியும் அபிவிருத்தியுமல்ல. உற்பத்திப் பொருட்களின் வடிவமைப்புப் பொறியியலானது கேள்வியின் மீதான தயாரிப்புக்களை அங்கீகரிப்பதோடு ஆளில்லா விமானங்கள் போன்ற ஸ்தாபிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மெகாட்ரொனிக் உற்பத்திப் பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் எம்மால் தயாரிக்க முடியும் என்பதை நான் நம்புகின்றேன்.

ஆகவே, இக் கைத்தொழிலுக்கு வசதியளிப்பதற்காக உற்பத்தி வடிவமைப்புப் பொறியியலில் ஈடுபடும் தொழில் முயற்சியாளர்களுக்கு ஆதரவளிப்பதற்காக உத்தரவாதங்களுடன் கடன்களை வழங்கக்கூடிய ரூபா 5 பில்லியன் ஆரம்ப மூலதனத்துடன் நிதியமொன்றினை ஸ்தாபிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

225.இந்நாட்டில் சுறுசுறுப்பான புதிய தொழில்முயற்சிகளினை ஆரம்பிக்கும் கலாசாரம் நிலவுகின்றது. இத்தொழில் முயற்சிகளின தொடக்கத்திற்கு மேலும் ஆதரவளிப்பதற்காக நெனசலவின் ஆதரவுடன் 5 மாவட்டங்களில் போதிய வசதிகளை மேற்கொள்வதற்கு நான் முன்மொழிவதோடு, அரச மற்றும் தனியார் பங்கேற்புடன் 2020 ஆம் ஆண்டளவில் 25 மாவட்டங்களிற்கும் இது விரிவாக்கப்படும். இந்நோக்கத்திற்காக நான் ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

**சுற்றுலாத்துறை**

226. சபாநாயகர் அவர்களே, 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும், நாட்டிற்கான உல்லாசப் பிரயாணிகளின் வருகையானது, கிட்டத்தட்ட 15 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. எனவே, அதிகரிக்கப்பட்ட சுற்றுலாத்துறையிலிருந்தான தேறிய வருவாயினை உறுதிப்படுத்தலே சவாலாக உள்ளது. இச்சூழ்நிலையில், அரசாங்கமானது, திருகோணமலையிலிருந்து - பாசிக்குடா - மட்டக்களப்பு - அறுகம்பே, மொனறாகலை - எல்லை,சிலாபம் கற்பிட்டி வலயம், மற்றும் தெத்துவை வாவியிலிருந்து அக்குராவலை பிரதேசம் வரையிலான பிரதான சுற்றுலா வலயங்களை இனங்கண்டுள்ளது. மேலும், எல்ல, பண்டாரவளை மற்றும் அப்புத்தளை ஆகிய பிரதேசங்கள் சூழல் தொடர்பான சுற்றுலா முக்கோணங்களாக இனங்காணப்பட்டுள்ளது. அத்தியாவசியமான உட்கட்டமைப்பு வசதிகளையும் ஒழுங்குமுறைப்படுத்தும் வேலைச் சட்டகங்களையும் வழங்குவதன் மூலம் நாம் அதற்கான சூழலை உருவாக்குவோம். உண்மையில் சூழல் தொடர்பான சுற்றுலா முக்கோணங்களுக்கு ஆதரவளிப்பதற்காக பதுளை மாவட்டத்தில் உள்நாட்டு விமான நிலையமொன்றினை நிர்மாணிப்பதற்கான சாத்திய வள ஆய்வினை ஆரம்பித்திருக்கின்றோம். அல்லது சமகாலத்தில் தெற்கு அதிவேகப்பாதைக்கு பதுளை மாவட்டத்தினை இணைக்கும் செயன்முறையினையும் ஆராய்ந்து பார்ப்போம்.

(தொடரும்)

## வெடிபொருட்கள் நிரம்பிய லொறியை பெற்றோல் நிலையத்தில் மோதி

# ஐ.எஸ்.கொடூரத்தாக்குதல்; 100 பேர் பரிதாபமாகப் பலி!

(ஹில்லா)

**ஈராக்கின் ஹில்லா நகரில் நேற்றுக்காலை நடத்தப்பட்ட பயங்கர தற்கொலைத் தாக்குதலில் 100 பேர் பலியாகியுள்ளனர். ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு இந்தத் தாக்குதலை நடத்தியதாக தெரிவித்துள்ளது.**



பக்தாத்திற்கு 100கி.மீ தெற்கே ஹில்லா நகரில் பெற்றோல் நிலையத்தில் வெடிபொருட்கள் நிரம்பிய லொறி ஒன்று வெடிக்கச் செய்யப்பட்டதில் பெருமளவான ஷியா பிரிவு முஸ்லிம்கள் பலியாகியுள்ளனர்.

ஈராக் புனித நகரான கெர்பலாவில் 40ஆவது துக்க தினத்தை அனுஷ்டிக்க ஷியா யாத்திரிகர்கள் மசூதிக்கு வந்து தொழுகை நடத்தி விட்டு உணவு விடுதிக்குச் சென்றனர்.

குண்டுவெடிப்புத் தாக்குதல் நடத்தப்பட்ட பெற்றோல் நிலையத்திற்கு அருகில் சுற்றுலாப் பயணிகளுக்குப் பிடித்தமான உணவு விடுதி உள்ளது.

இந்நிலையில் பெற்றோல் நிலையத்தை வெடிபொருட்கள் நிரம்பிய லொறியைக் கொண்டு தற்கொலைத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டதால் யாத்திரிகர்கள் வந்த 5 பேருந்துகளும் எரிந்து சாம்பலாயின.

அமெரிக்க ஆதரவுடன் ஐ.எஸ் .தீவிரவாதத்தை எதிர்த்து ஈராக்கிய படைகள் நடத்தி வரும் தாக்குதல்களுக்குப் பழிவாங்கும் விதமாகவும் ஷியா பிரிவினர் மேல் உள்ள வன்மத்தினாலும் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (இ-10)

# ட்ரம்ப் திடீர் பல்டி

## ஹிலாரியை எதிரியாக நினைக்கவில்லையாம்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள குடியரசுக் கட்சியைச் சேர்ந்த, டொனால்ட் ட்ரம்ப் தேர்தல் பிரசாரத்தின் போது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் பலவற்றில் இருந்து பின்வாங்கப் போவதாக மறைமுகமாக கூறியுள்ளார்.

அண்மையில் நடந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில், குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப், ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரியை தோற்கடித்தார். தேர்தல் பிரசாரத்தின் போது, அமெரிக்க குடியுரிமை பெறாதவர்களை, அவர்களின் நாடுகளுக்கே திருப்பி அனுப்பப் போவதாகவும் அமெரிக்கர்களுக்கு வேலைவாய்ப்புகள் உறுதியளிக்கப்படும் என்றும் கூறினார். தேர்தலில் வென்றால், எதிர்க்கட்சி வேட்பாளர் ஹிலாரியை சிறையில் தள்ளுவேன் என்றும் ட்ரம்ப் ஆவேசமாக கூறினார்.

இந்நிலையில் தேர்தலில் வென்று அடுத்தாண்டு ஜனவரியில் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள ட்ரம்ப், நியூயோர்க்கில் நேற்று முன்தினம் நிருபர்களை சந்தித்தார். அப்போது தேர்தலில் அளித்த பல வாக்குறுதிகளில் ஆர்வம் காட்டாதது போல் அவர் பதிலளித்தார்.

ட்ரம்ப் கூறியதாவது,சில விடயங்களில் தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டாம் எனக் கருதுகிறேன். ஜனநாயகக் கட்சி சார்பில், தேர்தலில் போட்டியிட்டு தோற்ற ஹிலாரியை புண்படுத்த வேண்டாம் என நினைக்கிறேன். அவரை நான் எதிரியாக நினைக்கவில்லை. பல வழிகளில் அவர் கஷ்டப்பட்டுள்ளார். என தொழில், ரியல் எஸ்டேட் சம்பந்தப்பட்டதாக இருப்பதால் அதை உடனடியாக விற்றுவிட இயலாது. அந்த தொழிலை கவனிக்க மாற்று ஏற்பாடுகள் செய்வேன். இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-7)

# ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியை அமெரிக்கா நிறுத்த வேண்டும்

# வடகொரியா கடிதம்

வடகொரியாவின் ஜனாதிபதி கிம் ஜாங் உன் ஆட்சியைக் கவிழ்க்கும் நடவடிக்கையை அமெரிக்கா நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி வடகொரியா அமெரிக்காவிற்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளதாக வட கொரிய மத்திய செய்திகள் முகவர் நிலையம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த ஆட்சிக்கவிழ்ப்பு நடவடிக்கைகள், அணுசக்தி அச்சுறுத்தல்களை வடகொரியா கைவிட வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

9 பக்கங்களைக் கொண்ட குறித்த கடித்தில், முக்கியமாக அமெரிக்காவிடம் இருந்தும், புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்பிடம் இருந்தும் வடகொரியா எதிர்பார்க்கும் விடயங்கள் குறித்து விபரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், அமெரிக்கா மற்றும் தென்கொரியாவை எதிர்கொள்வதற்கான தற்பாதுகாப்பு நடவடிக்கையாகவே, அணுசக்தி நிகழ்ச்சித் திட்டம் உள்ளிட்ட சில வடயங்களை மேற்கொள்ள நேரிட்டதாகவும் நிர்ப்பந்தத்தன் அடிப்படையிலேயே வடகொரியா இந்நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த சில வருடங்களாக அமெரிக்காவிடம் இருந்து அணு ஆயுதத் தாக்குதல் அச்சுறுத்தல்' அதிகரித்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள அக்கடிதத்தில், தென்கொரியாவுடன் இணைந்து அமெரிக்கா கூட்டு இராணுவ பயிற்சிகளை மேற்கொண்டு தம் நாட்டை அச்சுறுத்த முயற்சித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள ட்ரம்ப், தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது, வடகொரிய தலைவர் கிம் ஜாங்-உன்னை பேச்சுவார்த்தைக்கு அழைக்கப் போவதாகக் குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில் வடகொரியா தற்போது அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் ட்ரம்பிடம் எதிர்பார்க்கும் விடயங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, அமெரிக்காவுடன் நல்லுறவை பேண வடகொரியா முயற்சிப்பதாகத் தோன்றுகின்றது.

எவ்வாறாயினும் தனது தேர்தல் பிரசாரங்களில் கடும் போக்குவாத கருத்துக்களை முன்வைத்து வந்த ட்ரம்ப் தற்போது ஜனாதிபதியாகப் பொறுப்பேற்கவுள்ள நிலையில், மென்மையான போக்கைக் கையாளும் நடைமுறைக்கு மாறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்ற அதேவேளை, வடகொரிய தலைவரும் மென்மையான போக்கிற்கு மாறும் நிலைப்பாட்டை இந்த கடிதத்தின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளாரோ என்று எண்ணத்தோன்றுகின்றது என அரசியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (இ-7-10)

# இந்திய பெண் பத்திரிகையாளருக்கு சர்வதேச ஊடக சுதந்திர விருது

(நியூயோர்க்)

இந்தியாவைச் சேர்ந்த பெண் பத்திரிகையாளருக்கு, துணிச்சல் மிகுந்த பத்திரிகையாளர்களுக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இயங்கும், "திகமிட்டி டு புரோடக்ட் ஜர்னலிஸ்ட்ஸ்" என்னும் சி.பி.ஜே. அமைப்பு ஆண்டுதோறும் சிறந்த, துணிச்சல் மிகுந்த பத்திரிகையாளர்களுக்கு, "சர்வதேச ஊடக சுதந்திர விருது" வழங்கி கௌரவிக்கிறது.

இந்த ஆண்டுக்கான விருது இந்தியா, மத்திய அமெரிக்கா மற்றும் துருக்கி நாடுகளைச் சேர்ந்த பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்த அமைபபின் செயல் இயக்குநர் ஜோயல் சிமோன் கூறியதாவது, உலகம் முழுவதும் பத்திரிகையாளர்களுக்கு எதிரான தாக்குதல் அதிகரித்து வருகிறது. கொலை மிரட்டல், சிறைவாசம் மற்றும் நாடுகடத்தப்படும் நிலையிலும் கூட துணிச்சலான செயலால் குற்ற நடவடிக்கைகளை உலகிற்கு அம்பலப்படுத்தும் பத்திரிகையாளர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான விருது இந்தியாவின் இணையதள பத்திரிகையான, "ஸ்கிரோல் இன்" பத்திரிகையாளர் மாலினி சுப்பிரமணியத்துக்கு வழங்கப்படுகிறது.

கொலை மிரட்டல் காரணமாக மூன்று வாரங்கள் வெளிநாட்டில் வசித்த மத்திய அமெரிக்காவைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஆஸ்கர் மார்ட்டினஸ், துருக்கி உளவுத்துறை குறித்த செய்திக்காக 92 நாட்களாக சிறையில் அடைபட்டுள்ள துருக்கி பத்திரிகையாளர் ஜான் துன் தார் ஆகியோருக்கும் இந்தாண்டுக்கான விருது வழங்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

இந்தியாவின் சதீஸ்கர் மாநிலம், பஸ்தர் பகுதியில் பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினரின் அத்துமீறல்கள் உள்ளிட்ட மனித உரிமை மீறல் குறித்த செய்தியை தொகுத்து வெளியிட்ட மாலினி சுப்ரமணியம், பொலிஸாரின் சித்திரவதைக்கும் ஆளானார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ராஜீவ் கொலையை விபரிக்கும் நளினியின் சுயசரிதை வெளியீடு



(டில்லி)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் நளினியின் வாழ்க்கை வரலாற்றுத் தகவல்களை உள்ளடக்கிய "ராஜீவ் கொலை: மறைக்கப்பட்ட உண்மைகளும் பிரியங்கா- நளினி சந்திப்பும்" என்ற நூல் சென்னையில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யயப்பட்டு கடந்த 25 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர் நளினி.

ராஜீவ் கொலையின் பின்னணி , வழக்கு விசாரணை, வேலூர் சிறையில் நடைபெற்ற நளினி-பிரியங்கா காந்தி சந்திப்பு உள்ளிட்ட பரபரப்பான தகவல்கள் "ராஜீவ் கொலை: மறைக்கப்பட்ட உண்மைகளும் பிரியங்கா-நளினி சந்திப்பும்" என்ற நளினியின் சுயசரிதை நூலில் விபரிக்கப்பட்டுள்ளது.

மூத்த ஊடகவியலாளர் பா. ஏகலைவன் தொகுத்துள்ள இந்த நூலில், பல்வேறு பரபரப்பு தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

யாழ். பதிப்பகத்தின் வெளியீடாக வெளிவந்துள்ள இந்த நூல், நேற்று முன்தினம் மாலை சென்னை வடபழனியில் இடம் பெற்றது.

புத்தகத்தை ம.தி.மு.க. பொதுச செயலாளர் வைகோ வெளியிட, முதல் பிரதியை விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் பெற்றுக்கொண்டார்.

இந்த விழாவில் நாம் தமிழர் கட்சித் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருச்சி வேலுச்சாமி, முன்னாள் நீதிபதி ஹரி பரந்தாமன், நளினியின் தாயார் பத்மாவதி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். (இ-10)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 80 | 100 | 50 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 100 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 40 | 40 | 80 | 45 | 80 | 60 |
| தக்காளி | 50 | 60 | 45 | 80 | 60 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 50 | 50 | 100 | 80 | 60 | 80 | 70 |
| கரட் | 120 | 100 | 70 | 80-140 | 80 | 160 | 80 |
| பூசணி | 40 | 30 | 25 | 40 | 30 | 60 | 40 |
| புடோல் | 50 | 40 | 30 | 60 | 40 | 80 | 50 |
| வாழைக்காய் | 50 | 40 | 35 | 50 | 40 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 100 | 100 | 120 | 140 | 80 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 80 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 150 | 160 | 90 | 170 | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 70 | 80 | 70 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 100 | 70 | 80 | 80 | 100 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 70 | 140 | 100 | 160 | 180 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 80-120 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 50 | 50 | 50 | 60 | 60 | 80 | 40 |
| கறிமிளகாய் | 140 | 100 | 105 | 150 | 100 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 150 | 40 | 30 | 80 | 60 | 120 | 120 |
| போஞ்சி | 180 | 250 | 180 | 200 | 160 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | 30 | 70 | — | 80 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 30 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 600 | 400 | 400 | 550 | 500 | 50 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 15-35 | 40 | 30 | 30-40 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | 200 | 200 |
| முள்ளங்கி | 60 | — | 30 | 60 | 50 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 30 | — | 15 | 30 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 10 | — | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | — | — | 60 | 50 | — | 100 |

# சிறைக்குள் பேரறிவு

20

## 25 வருடங்கள் சிறைப்பட்டு வலிகளைச் சுமந்தவனின் தொடர்...



பேரறிவாளன்

"சஞ்சய்தத் தொடர் குண்டுவெடிப்பின் முக்கிய குற்றவாளியிடமிருந்து ஒரு (AK 47. ஒரு கைத் துப்பாக்கி ஆகியன வாங்கிய குற்றத்துக்காகக் தண்டனை பெற்றிருந்தார். அப்போது அவரது வயது 32. சிறைக்குள் வானொளி வர்ணனை யாளராக இருந்த அவரது நன்னடத்தையை நான் கேள்வி எழுப்பவில்லை."

...நடுவண் அரசின் பரிந்துரையின்படி எந்தச் சிறையிலும் தண்டனைக் கழிவுடன் 25 ஆண்டுகளுக்கும் மேல் எந்த ஆயுள் சிறைவாசியும் சிறையில் இருக்கக்கூடாது. நாங்கள் தண்டனைக் கழிவே இல்லாமல் 25 ஆண்டுகளை முடித்துவிட்டோம்.

எங்கள் வழக்கில் நடுவண் அரசு உரிமை கொண்டாட சட்டப்படி கூறும் ஒரே காரணம் வழக்கை விசாரித்தது நடுவண் புலனாய்வுத்துறை (CBI) என்பது மட்டுமே.

ஆனால், மும்பை தொடர் குண்டுவெடிப்பு வழக்கின் நிலை என்ன? அதனை விசாரித்ததும் CBI அமைப்புதான். 'தடா' சட்டப்படி வழக்கு நடந்து, உச்ச நீதிமன்றம் 'தடா' பிரிவுகளில் தண்டனையை உறுதி செய்தது.

நடிகர் சஞ்சயத்த் அந்த வழக்கில் இந்திய ஆயுதச் சட்டத்தின் பிரிவுகளில் 5 ஆண்டு தண்டனை பெற்றார்.

'தடா' சட் டமும், இந்திய ஆயுதச் சட்டமும் நடுவண் அரசின் நேரடி ஆளு கைக்குட்பட்ட சட்டங்கள் என்பதால், குற்றவியல் நடைமுறைச் சட்டம் (Cr.P.c.) பிரிவு 435 (2)இன் படி நடுவண் அரசுதான் எந்தத் தண்டனைக் கழிவையும் வழங்க முடியும் என்கிறது டிசம்பர் 2, 2015 அன்று வழங்கப்பட்ட எங்கள் விடுதலையை எதிர்த்துப் போடப்பட்ட, வழக்கின் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு. இருப்பினும் 8 மாதங்கள் தண்டனைக் கழிவு பெற்று முன் கூட்டியே விடுதலை செய் யப்பட்டார் நடிகர் சஞ்சயதத்.

அவரை யார் விடுதலை செய்து ஆணை பிறப்பித்தது என்பதுதான் எனது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழான விண்ணப்பம். அதற்கு இன்றுவரை பதில் இல்லை.

அவரை விடுதலை செய்ய நடு வண் அரசின் முன் அனுமதி பெறப்பட்டதா? குறைந்த பட்சம் நடுவண் அரசுடன் கலந்தாலோசிக்கப்பட்டதா? எதற்கும் விடை இல்லை. அவரது தண்டனைக் காலத்தில் ஆண்டுக்கு 28 நாட்கள் என ஏறத்தாழ 84 நாட்கள் Furlough என்ற விடுப்பில் சென்று திரும்பினார்.

இந்த நாட்கள் தண்டனைக் காலமாகக் கருதப்படும். இவையில்லாமல் தண்டனைக் காலத்தில் கணக்கில் வராத பரோல் விடுப் புகளில் சென்றால், அவர் தொடர் குண்டுவெடிப்பின் முகக்கிய குற்றவாளியிடமிருந்து ஒரு AK47, ஒரு கைத்துப் பாக்கி ஆகியன வாங்கிய குற்றத்துக்காகத் தண்டனை பெற்றிருந்தார். அப்போது அவரது வயது 32. சிறைக்குள் வானொலி வர்ணனையாளராக இருந்த அவரது நன்னடத்தையை நான் கேள்வி எழுப்பவில்லை. அதனால் அவருக்குக் கிடைத்த முன்கூட்டிய விடுதலையை மறுதலிக்கவில்லை. ஆனால் அதே அளவுகோள், சட்ட நிலைப்பாடு எனது வழக்கில் ஏன் இல்லாமல் போனது என்பதே எனது கேள்வி?



பேரறிவாளன்



சஞ்சய்தத்

'தடா' சட்டம், வெடிபொருள் சட்டம், ஆயுதச் சட்டம் என நடுவண் அரசின் மொத்த ஆளு கைக்குட்பட்ட சட்டப் பிரிவுகளில் ஆயுள் தண்டனை பெற்ற தனது மாநிலத்தைச் சேர்ந்த காலிஸ்தான் இயக்கத்தைச் சார்ந்த 13 சிறைவாசிகளை முன் விடுதலை செய்யக்கோரி பஞ்சாப் மாநில அரசு நடுவண் அரசிடம் கோரிக்கை வைத்திருக்கிறது.

அவர்களில் 1990ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு 'தடா' சட்டத்தின் கீழ் ஆயுள் தண்டனை பெற்று 25 ஆண்டுகள் 8 மாதங்கள் தண்டனையைக் கழித்துவிட்டு உத்தரப் பிரதேச சிறையில் இருந்த வார்யாம் சிங் (Waryam Singh) என்ற சிறைவாசியை நடுவண் உள் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கின் பரிந்துரையின் பேரில் உத்பிர தேச மாநில முதல்வர் அகிலேஷ் யாதவ் இந்த ஆண்டின் முற்பகுதியில் விடுதலை செய்து விட்டார்.

அந்தப் பட்டியலில் மேலும் மூவரின் முன் விடுதலைக்கு நடுவண் அரசு பரிந்துரை செய்துள்ளதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இவையெல்லாம் எனது விடுதலையிலும் கருத் தில் கொள்ளப்படுமா?

இவர்கள் அனைவருமே சிறை நன்னடத்தைக்காக முன் கூட்டியே விடுதலை செய்யப் படுகிறார்கள் எனில், எனது நன்னடத்தை குறித்து நான் சொல்வதைக் காட்டிலும் சிறையில என்னைப் பராமரிக்கும் சிறை அதிகாரிகளும் உடன் வாழும் சிறைவாசிகளும்தான் கூற வேண்டும்.

ஏறத்தாழ 15 ஆண்டுகள் எனக்கு அதிகாரியாக இருந்து ஓய்வுபெற்ற சிறைத்துறை துணைத்தலைவர் (DIG OF PRISONS) ராமச்சந்திரன். இதுகுறித்து ஊடகங்களுக்குப் பேட்டி தந்துள்ளார்.

உள்ளபடியான இந்தப் பாகுபாடுகளை உச்ச நீதிமன்ற பார்வைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் நான் கடந்த 08.01.2016 அன்று புனே, எர்வாடா சிறைக்குத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பம் அளித்தேன்.

(வலிகள் தொடரும்...)

# மக்களைப் பாதுகாக்கத்தான் அபராதம் அதிகரிக்கப்பட்டது

## நிதியமைச்சர் ரவி விளக்கம்



(கொழும்பு)

**வீதிப் போக்குவரத்தில் ஏற்படும் சட்ட மீறல்கள் தொடர்பான குற்றங்களுக்கு அபராதம் அதிகரிக்கப்படுவது திறைசேரியில் பணத்தைச் சேர்க்க அல்ல மக்களைப் பாதுகாக்கவே என நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க விளக்கமளித்துள்ளார்.**

வரி அறிவிடுதல் மற்றும் அபராதம் விதித்தல் போன்றவற்றை மட்டுமே தம்மால் செய்ய முடியும் எனவும், வேகக் கட்டுப்பாட்டு அளவு தொடர்பில் காட்சிப்படுத்தல், சட்டம் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தல் போன்றவற்றை பொலிஸார் அல்லது போக்குவரத்து அமைச்சு ஆகியனவே முன்னெடுக்க வேணடும் எனவும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, முக்கிய ஏழு குற்றங்களுக்கு அபராதத்தொகை அதிகரிக்கப்பட்டமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே, அவர இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் அரசாங்கத்தால் வேகக் கட்டுப்பாட்டை மீறும் சாரதிகளுக்கு எதிராக 25,000 ரூபா வரை தண்டப்பணம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

எனினும், நகரப் பகுதிகளில் வேகக் கட்டுப்பாட்டு அளவு தொடர்பில் காட்சிப்படுத்தி, அது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் மக்களுக்கு தெளிவுபடுத்தும் வரையில், வேகக் கட்டுப்பாடு குறித்த சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கூடாது என, இது குறித்து சில வருடங்களுக்கு முன்னர், உயர் நீதிமன்றத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நிதி அமைச்சரிடம் இது பற்றி வினவப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

மறுபுறம் இவ்வாறான தவறுகள் தொடர்பில் அபராதத் தொகையில் திருத்தம் செய்வது குறித்த யோசனையை முன்வைத்தது போக்குவரத்து அமைச்சு மற்றும் பொலிஸாருடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலைத் தொடர்ந்தே எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது நாளாந்தம் இடம்பெறும் வாகன விபத்துக்களால் 7 பேர் வரையில் மரணிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இவ்வாறு அபராதம் அதிகரிக்கப்படுவது, திறைசேரியில் பணத்தைச் சேர்க்க அல்ல என குறிப்பிட்ட ரவி கருணாநாயக்க, மக்களின் உயிர் பாதுகாப்பு தொடர்பில் அதிக அவதானம் செலுத்தியமையாலேயே எனவும் தெரிவித்துள்ளார். (இ-10)

# இலங்கையின் இரத்தினக்கல் படிமங்களை தேடியறிந்து அடையாளப்படுத்தும் 2017-2021 களில் மதிப்பீட்டு முயற்சி

இலங்கையில் 70 வீதம் நிலப்பகுதியில் இரத்தினக்கல் படிமங்களுக்கு பரந்து காணப்படுவதாக மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் அதன் 10 வீத பகுதி மட்டுமே இரத் தினக் கல் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த விதத்தில் மகாவலி அபிவிருத்திசுற்றாடல் அமை ச்சுக்கான தனது அதிகாரத் தைப் பயன்படுத்தி இரத்தினக்கல் படிமங்களைத் தேடியறிந்து விபரங்கள் திரட்டி அது மட்டில் பயனுள்ள நடவடிக்கைகளைமேற் கொள்வதற்கு வசதியாக தனது திட்டத்திற்கேற்ப நிலையான தொரு இரத் தினக்கல் அகழ்வு தொழிலாக அதனை ஸ்தாபிப்பதற்கென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சமர்ப்பித்த பிரேரணை அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்டது.

# தேசிய எல்லை முகாமைத்துவ சபை உருவாக்கப்படவிருக்கின்றது

ஒரு நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அதனது எல்லைகள் மீதான கட்டுப்பாடென்பது இன்றியமையாதது. இலங்கையில் எல்லை கடந்த விதமான பொருட்பரிமாற்றங்கள் மட்டுமல்லாது ஆட்கடத்தல்கள் போன்ற விடயங்களும் படிப்படியாக அதிகரித்தே வருகின்றன. இந்நிலை தொடருமானால் 2020 ஆம் ஆண்டளவில் ஆட்கள் 10 மில்லியன்களாகவும் பொருட்கள் 200 மில்லியன் கிலோ கிராம்கள் என்ற ரீதியில் இந்த எல்லை கடந்த விடயங்கள் கைமீறிப்போகும்நிலைக்கே நாட்டினை கொண்டுசென்றுவிடும்.

எனவே நாட்டின் தேசிய பாதுகாப்பினை மேற்கொள்ளும் பொருட்டும் சமூக ஒழுக்கம்-ஒழுக்கக்கட்டுப்பாடுகள் போன்ற நல்விழுமியங் களை பேணிக்காத்து கொள்வதற்கும் பொருளாதார செழுமையை விரைவில் ஏற்படுத்தவதற்கும் எல்லைக்கட்டுப்பாடும் பாதுகாப்பும் உயர் முக்கியத்துவம் வாய்ந்த விதத்தில் நிர்வகிக்கப்படுவது அத்தியாவசியமாகின்றது.

இதற்கேற்ப ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பாதுகாப்பு அமைச்சர் என்ற தனது அந்தஸ்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தி தேசிய எல்லைப்பாதுகாப்பு சபையொன்றை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளார். இந்த விதத்தில் அரசாங்கத்தின் மத்திய அமைப்பாக செயற்படவிருக்கும் இந்த அமைப்பில் மூத்த அதிகாரிகள், கொள்கைத் திட்டவியலாளர்கள் இது மட்டில் எழக்கூடிய ஆபத்துக்கள், உருவாகக்கூடிய முன்னுரிமை ஏற்பாடுகள் பற்றி அரச மதிப்பீடுகளை மேற்கொள்பவர்களாக இருப்பார்கள். ஜனாதிபதியின் இப்பாதுகாப்புத் திட்டம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது.

# யாழ்.மாவட்ட அச்சுவேலிப்பிரதேசத்தில் நிலமட்டத்தின் கீழ் இறங்கும் பகுதிகள் பற்றி ஆராயப்படவிருக்கின்றன

யாழ்ப்பாணம் அச்சுவேலி பிரதேசத்தில் விவசாயக் காணி நிலங்கள் நிலமட்டத்தின் கீழ் தாழ்இறங்கும் நிகழ்வுகள் பற்றி அறிவிக்கப்படுகிறது. இப் பிரதேசத்தின் நிலப்பகுதியானது தரைக்குக்கீழ் இயல்பாகவே சுண்ணாம்பு பாறைகளை கொண்டமைந்தவையாகவே காணப்படுகின்றன. நிலக்கீழ் நீரோட்டங்கள்பாறைகளிடையே அரிப்பை ஏற்படுத்துவதால் அவற்றில் பாரிய குடைவுகள், குழிகள் போன்றவை உருவாகிநிலம்பலவீனமடைவதால் இந்நிலை ஏற்படுகின்றது.

இப்பிரதேசத்தின் நிலப் பயன்பாடுகள் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளும் பொருட்டு தேசிய கட்ட ஆராய்ச்சி அமைப்பு ஆராய்ச்சி-மதிப்பீடுகளை மேற்கொண்டு பல்வேறுபட்ட தரவுகளையும் பெறும் பொருட்டு பணியில் ஈடுபடுத்தப்படவேண்டும் என சிறைக்கூட சீர்திருத்தங்கள் - புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துசமய விவகாரங்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் சபையில் கொண்டு வந்த பிரேரணை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது.

## இன்று ஒரு தகவல்

### ஆட்சேபம் தெரிவித்துவிட்டு...

ஒரு கட்டணமோ ஒரு கூலியோ, ஓர் இனமோ ஓர் நன்கொடையோ எதுவானாலும் அது மிக அதிகம் என்று தோன்றினால் வாய் மூடி மௌனியாக அதைக் கொடுத்துவிடக் கூடாது. காரணம் நம்மை சரியான பத்தாம் பசலி என்று பிறர் முடிவுக்கு வந்துவிடுவார்கள். ஒன்றும் தெரியாது இவருக்கு என்பார்கள் – நம் காது படவே தொடர்ந்து பிடுங்குவார்கள்.

பணம் என்றில்லை– எது சரியென்று படாவிட்டாலும் , நம் கருத்தைச் சொல்ல வேண்டிய அவசியம் எழுந்தால் நாம் நம் லேசான ஆட்சேபத்தை தெரிவித்துவிட்டுப் பிறகு நம் ஒத்துழைப்பைத் தரலாம்.

பத்து வருடங்களுக்கு முன்பு என்று ஞாபகம். அது ஒரு மாதக் கடைசி நாள் .பூந்தமல்லி நெடுஞ்சாலையில் மோட்டார் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தேன். ஒரு டிராபிக் சார்ஜன்ட் என்னைத் தடுத்து நிறுத்தினார். அதிவேகம் போனேன் என்று சார்ஜ் சீட் எழுதியதோடு கோபத்துடன் பேசினார். கையெழுத்திடச் சொன்னார். எனக்கு நிச்சயமாகத் தெரியும்–நான் 40 கி. மீ வேகத்திற்கு மேல் போகவில்லை என்று.கையெழுத்துப் போடமாட்டேன் என்று சொல்ல முடியாது. வண்டியைக் கைப்பற்றவோ என்னைக் கைது செய்யவோ அவருக்கு உரிமை வந்துவிடும். கையெழுத்துப் போட்டாலோ நான் குற்றத்தை ஒப்புக் கொண்டதாக ஆகிவிடும். With protest என்று கையெழுத்துப் போட்டுக் கொடுத்துவிட்டு நகர்ந்தேன்.

ஏமாளி என்றும் உலகம் தெரியாதவன் என்றும் பிறர் பட்டம் சூட்ட, இளித்துக் கொண்டிருப்பதாவது? கூடாது. நம்மிடம் ஏமாற்று வேலைகள் செல்லாது என்பதை அவ்வப்போது உணர்த்த வேண்டியது அவசியம். ஆட்சேபம் செய்துவிட்டுக் கொடுக்கிறபோது பலவிதமான உண்மைகள் எதிராளிக்குத் தெரிய வரும்.

முதலாவது, அச்செயல் நம் பெருந்தன்மையைக் காட்டும், மனிதருக்கு விடயம் தெரிந்து இருக்கிறது. ஆனாலும் பெருந்தன்மையாக நடந்து கொள்கிறார் என்பதைப் புரிந்து கொள்வது இதன் மூலம் சாத்தியமாகிறது.

அடுத்தது, நாம் ரௌடித்தனம் பண்ணத் தயாரில்லை என்பது.

மூன்றாவதாக , இனி இந்த வேலையைத் தொடரக் கூடாது என்பதாகவும் நாம் மறைமுகமாக எச்சரிப்பவர்களாக ஆகிறோம்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் கொஞ்சம் கால நீடிப்புச் செய்ய வேண்டும். அதாவது, இழுத்தடிக்க வேண்டும்.

அவசியம் ஏற்பட்டால் இறுதியில் ஏன் சம்மதித்தோம் அல்லது கேட்ட தொகையைத் தந்தோம் என்று சிறு விளக்கம் தரலாம்.

ஒரு குழாய் வேலை பார்ப்பவர் வேலையை முடித்துவிட்டு பத்து ரூபாய் அதிகமாகக் கேட்கிறார். என்ன சொல்லியும் பிடிவாதம் காட்டுகிறார். அவரிடம் நியாயமான கூலியை இரண்டு நாள் கழித்து வாங்கிக் கொள் என்று திருப்பி அனுப்பிவிடலாம். ரொம்பவும் கட்டாயப் படுத்தினாலோ, கூப்பிட்டதும் என் அவசரம் தெரிந்து வந்தாய் அல்லவா, அதற்காகத் தான் நீ கேட்டதைத் தருகிறேன். என்றோ, வேலையைத் திருப்தியாகப் பாத்திருக்கிறாய் அல்லவா, அதற்காகத் தான் இந்தக் கூடுதல் பத்து என்றோ நாளைக்குக் கூப்பிட்டதும் உடனே வர வேண்டும் என்பதற்காகவே இந்த அதிகப்படுத்து என்றோ விளக்கம் தந்துவிட்டுத் தான் கொடுக்க வேண்டும். அதே நேரத்தில் வம்பு வேண்டாம்.

**லேனாதமிழ்வாணன்**

# க.பொ.த. (சா/த) பரீட்சை- 2016
# மாதிரி வினாத்தாள்

கணிதம் பகுதி II

3 மணித்தியாலம்

02) (a) Y=(x+2) (x-1) எனும் சார்பில் x இன் பெறுமானத்திற்கு ஒத்த y இன் பெறுமானங் களைக் கொண்ட பூரணமற்ற அட்டவணையொன்று கீழே தரப்பட்டுள்ளது.

| $x$ | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|---|---|
| $y$ | 10 | 4 | 0 | -2 | -2 | ....... | 4 | 10 |

i)அட்டவணையில் காணப்படும் வெற்றிடத்தை நிரப்பி பொருத்தமான அளவிடைக்கு தரப்பட்ட ஆயிடையில் சார்பின் வரைபை வரைக.

(b) வரைபிலிருந்து

i) வரைபின் சமச்சீர் அச்சின் சமன்பாட்டை எழுதுக?

(ii)y=0 என்ற சமன்பாட்டின் மூலங்களைக் காண்க?

(iii) y<0 ஆகும் போதுள்ள x ன் பெறுமான ஆயிடையை எழுதுக.

(c) y=0 எனும் சமன்பாட்டின் மூலகங்கள் –1,3ஆகவும் $x^2$ ன் குணகம் 1 ஆகவும் உள்ள இருபடிச் சார்பு y இன் சமன்பாட்டைத் தருக.

03)(a) கொய்யாப்பழம் ஒன்றின் விலை தோடம்பழம் ஒன்றின் விலையை விட ரூபா 15 அதிகமாகும். இரண்டு தோடம்பழங்களினதும் ஒரு கொய்யாப்பழத்தினதும் விலை ரூபா 165 ஆகும்.

(i) இத் தகவல்களைக் கொண்டு ஒருங்கமை சமன்பாடுகளை அமைக்க

(ii) தோடம்பழம் ஒன்றின் விலையையும் கொய்யாப்பழம் ஒன்றின் விலையையும் தனித்தனியே காண்க.

(iii)சுந்தரிடம் ரூபா 230 உள்ளது. பணம் முழுவதற்கும் பழவகை இரண்டையும் கொள் வனவுசெய்யக்கூடியவாறுஒவ்வொருபழத்தின்எண்ணிக்கையைத்தனித்தனியேகாண்க.

(b) $3x^2-4x-2=0$ எனும் இருபடிச் சமன்பாட்டின் மூலங்கள் $x=\frac{2\pm\sqrt{10}}{3}$ எனக் காட்டுக.

(ii) $\sqrt{10}=3.16$ எனக்கொண்டு நேர் மூலத்தைக் காண்க.


04) (a) (i) சுருக்குக. $(x+1)^2+5(x+1)+4$

(i) காரணி காண்க $3x^2+11x+10$

(b) (i) சுருக்குக. $\frac{1}{x+1}-\frac{2}{3(x-1)}$

(ii) இரண்டு பழப்பொதிகளில் விளாம்பழமும் வில்வம்பழமும் உள்ளன. முதலாவது பொதியில் 3 விளாம்பழங்களும் 5 வில்வம்பழங்களும் இரண்டாவது பொதியில் 4 விளாம்பழங்களும் 4 வில்வம்பழங்களும் உள்ளன. இத்தரவுகளை தாயம் ஒன்றில் காட்டி அதன் பருமனை (வரிசை) எழுதுக.

05) (a) கிடைத்தளம் ஒன்றில் அமைந்துள்ள 4.5 m உயரமான மரம் AB உம், அதிலிருந்து 50m தூரத்திலுள்ள கோபுரம் CD உம் காணப்படும் உரு அருகில் காட்டப்பட்டுள்ளது. Bயிலிருந்து Dயின் ஏற்றக் கோணம் $42^{\circ}$ ஆகும்.




(i) உருவைப் பிரதிசெய்து தரப்பட்ட தரவுகளை அதில் குறிக்க


(ii)திரிகோண கணித அட்டவணையைப் பயன்படுத்திக் கோபுரத்தின் உயரத்தை இரண்டு தசமதானத்தில் காண்க.

(b)இயங்கும் பொருளொன்று இயங்கிய நேரமும் அதற்கு ஒத்த தூரமும் கீழே அட்ட வணையில் தரப்பட்டுள்ளன.

| நேரம் (செக்கன்) | 0 | 2 | 4 | 6 | 8 | 10 | 12 |
|---|---|---|---|---|---|---|---|
| தூரம். (மீற்றர்) | 0 | 10 | 20 | 30 | 50 | 70 | 90 |

(i)பொருளின் இயக்கத்திற்கான தூர–நேர வரைபைத் தரப்பட்ட அச்சுத் தொகுதியில் வரைக.

(ii) இறுதி 6 செக்கனில் பொருளின் கதி, முதல் 6 செக்கனில் அதன் கதியின் இருமடங்கு எனக் காட்டுக.




06) குறித்த ஒரு வியாபார நிலையத்தினால் 30 நாட்களுள்ள மாதமொன்றில் ஒவ்வொரு நாளும் விற்பனை செய்த அரிசியின் அளவு பற்றிய விபரம் கீழே மீடிறன் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

(i)இப்பரம்பலின் ஆகார வகுப்பு யாது?

(ii) களஞ்சிய அறையில் இருக்கும் 2500 kg அரிசி எதிர்வரும் 3 மாதங்களுக்கு (90 நாட்கள்) போதுமானதாக இருக்கும் என வியாபார நிலைய உரிமையாளர் ஊகிக்கின்றார். நாளொன்றில் விற்பனை செய்த அரிசியின் இடை நிறையைக் காண்பதன் மூலம் அவரது ஊகம் சரியானதா தவறானதா என காரணங்களுடன் முன்வைக்குக.

| நாளொன்றில் விற்பனை செய்த அரிசியின் அளவு (kg) | நாட்களின் எண்ணிக்கை ($f$) |
|---|---|
| 0 - 8 | 1 |
| 8 - 16 | 2 |
| 16 - 24 | 6 |
| 24 - 32 | 10 |
| 32 - 40 | 5 |
| 40 - 48 | 4 |
| 48 - 56 | 2 |

## பகுதி II B

ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விட எழுதுக

07) (a) தனுசன் ஜனவரி 1 ஆம் திகதி உண்டியலில் ரூபா 25 ஐ இட்டார். மேலும் ஒவ்வொரு மாதமும் முன்னைய மாதத்தைவிடரூபா 10 அதிகமாக உண்டியலில் இட வேண்டும் என்ற எண்ணத்துடன் இச் செயன்முறை ஆரம்பித்தார்.

(i) முதல் மூன்று மாதங்களில் உண்டியலில் இட்ட தொகை விருத்தியாக எழுதுக. இது எவ்வகையான விருத்தியாகும்.

(ii) அவர் உண்டியலில் ரூபா 195 ஐ எத்தனையாம் மாதத்தில் இடுவார்.

(iii) 2 வருடத்தில் ரூபா 3 000 ஐ சேமிப்பதே தனுசனின் இலக்காகும். அவ்விலக்கை அவர் அடைந்து கொள்வாரா? காரணத்துடன் விளக்குக.

(b) 2,4,8....... எனும் பெருக்கல் விருத்தியில் முதல் 10 உறுப்புக்களின்கூட்டுத்தொகையைக் காண்க.


08) (a) $\triangle ADC$ இல் $C\hat{A}D=90^{\circ}$, AC இன் நடுப்புள்ளி E இலிருந்து AC இற்குச் செங்குத்தாக வரையும் கோடு CD யை B இல் சந்திக்கின்றது.

i) மேலுள்ள தகவல்களை வரிப்படம் ஒன்றில் காட்டுக.

ii) முக்கோணி BAD ஒரு இருசமபக்க முக்கோணி எனக் காட்டுக.

iii) $AC^2+AD^2=4AB^2$ எனக் காட்டுக.

09) 0 வை மையமாகக் கொண்ட வட்டத்திற்கு புள்ளி B யில் வரையப்பட்ட தொடலி PE ஆகும்.




(i) $A\hat{D}B=30^{\circ}$ எனின், $A\hat{O}B$ யின் பெறுமானத்தைக் காரணத்துடன் எழுதுக.

(ii) $A\hat{D}B=A\hat{C}B$ ஆவதற்கு உரிய தேற்றத்தை எழுதுக.

(iii) $A\hat{B}P=30^{0}$ ஆவதற்கு காரணத்தை தருக.

(iv) AOB ஒரு சமபக்க முக்கோணி எனக்காட்டுக.

(v) AB, DC ஆகிய நேர்கோடுகள் சமாந்தரம் என மாணவன் ஒருவர் கூறுகின்றார். இதனை ஏற்றுக்கொள்வீரா? காரணம் தருக.

10) கவராயம், cm/mm கொண்ட நேர் விளிம்பு என்பவற்றைப் பயன்படுத்தி

(i) BC=7.8cm, $A\hat{B}C=60^{0}$, BA=6.4cm ஆகுமாறு ஒரு முக்கோணியை அமைக்க

(ii) புள்ளி AB என்பவற்றிலிருந்து சமதூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கை அமைக்க.

(iii) பக்கம் AC யை A யில் தொடுவதும் புள்ளி B யினூடாக செல்வதுமான வட்டமொன்றை அமைத்து அதன் ஆரையை அளந்து எழுதுக.

(iv) புள்ளிகள் AB யிலிருந்து 6cm தூரத்தில் இருக்குமாறு புள்ளி P ஐக் குறிக்க

(v) பக்கம் ஒன்றின் நீளம் 6cm ஆகவும் AB யை மூலைவிட்டமாகவும் கொண்ட APBQ எனும் சாய்துரத்தை அமைக்க.


11) (a) (i) ஆரை r cm ஆகவும் நீளம் 2.24 m ஆகவும் சீரான குறுக்குவெட்டைக் கொண்டதுமான உருளை வடிவ திண்ம உலோகக் கோலின் கனவளவுக்கான கோவையை $\pi$, $r$ சார்பில் தருக.

(ii)2r ஆரையுடைய உலோகக் கோளமொன்றின் கனவளவுக்கான கோவையை $\pi$, $r$ சார்பில் எழுதுக.

(iii) மேலே குறிப்பிட்ட உலோகக் குற்றியை உருக்கி உலோகம் வீணாகாமல் உருவாக்கக்கூடிய 2r ஆரையுடைய உலோகக் கோளங்களின் எண்ணிக்கை 21/r எனக் காட்டுக.

(b) $\frac{(3.275)^2\times 0.654}{26.52}$ ஐ மடக்கை அட்டவணையைப் பயன்படுத்திச் சுருக்கி விடையை கிட்டிய இரண்டு தசமதானங்களுக்குத் திருத்தமாகத் தருக.

12) (a) ஆசிரியர் சேவை, சுகாதார சேவை,நிர்வாக சேவை எனும் சேவைகளுக்கான ஆட்சேர்ப்புப் பரீட்சை A,B,C எனும் மூன்று பகுதிகளாக நடைபெற்றது. ஆசிரிய சேவைக்காக A பகுதியிலும் சுகாதார சேவைக்காக B பகுதியிலும் நிர்வாக சேவைக்காக C பகுதியிலும் சித்தியடைதல் வேண்டும். பரீட்சைக்காக தோற்றியோர் எண்ணிக்கை 460 ஆகும். A யும் C யும் சித்தி பெற்றோர் 100 பேர். 90 பேர் B யும் C யும் சித்தி பெற்றனர். A யும் B யும் மாத்திரம் சித்திபெற்றோர் 50 பேர்.




(i)வென் உருவைப் பிரதி செய்து ஏனைய தரவுகளைப் பூரணப்படுத்துக.

(ii) ஆசிரிய சேவை சுகாதார சேவை இரண்டிலும் சித்தி பெற்றோர் எத்தனை பேர்?

(iii) நிர்வாக சேவைப் பகுதியில் மாத்திரம் சித்தி பெற்றோர் எத்தனை பேர்?

(b) சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக முதலில் எழுத்துப் பரீட்சையும் அதில் சித்தி பெற்றோருக்காக செயன்முறைப் பரீட்சையும் நடைபெறும். இரண்டு பரீட்சைகளிலும் சித்தி பெற்றோருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். ஒரு அபேட்சகர் எழுத்துப் பரீட்சையில் சித்தி அடைவதற்கான நிகழ்தகவு 3/5 உம், செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைவதற்கான நிகழ்தகவு 3/4 உம் ஆகும்.

(i) இரண்டு பரீட்சைகளிலும் சித்தியடைந்தமை சித்தியடையாமையைக் காட்டும் மரவரிப்படத்தை வரைந்து எழுத்துப் பரீட்சை, செய்முறைப்பரீட்சை ஆகிய இரண்டிலும் சித்தியடைவதற்கான நிகழ்தகவு யாது?

(ii) 500 பேர் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுவார்களாயின் சாரதி அனுமதிப்பத்திரம் பெறும் தகைமையுடையோர் எத்தனை பேர்?

♦ ♦ ♦

# கணனித் தொகுதியால் முடங்கிய கட்டுநாயக்க விமான நிலையம்

(கொழும்பு)


கட்டுநாயக்க அனைத்துலக விமான நிலையத்தின் கணனிக் கட்டமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறினால், விமான நிலையச் செயற்பாடுகள் நேற்று முன்தினம் இரண்டரை மணி நேரம் முடங்கிப் போயின.

நேற்று முன்தினம் பிற்பகல் கட்டுநாயக்க விமான நிலைய கணனி கட்டமைப்பு தொகுதி திடீரெனச் செயலிழந்தது.

இதனால், குடிவரவு, குடியகல்வு நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. பயணிகள் வெளிச் செல்ல முடியாமலும், விமானங்களுக்கு அனுமதிக்கப் படாமலும் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க நேரிட்டது.

இரண்டரை மணி நேரத்துக்குப் பின்னர், மாலை 5.45 மணியளவில் கணனி கட்டமைப்பு மீண்டும் செயற்படத் தொடங்கிய பின்னரே, நிலைமை சீரடையத் தொடங்கியது.

இதனால் விமானங்களின் புறப்படும் நேரத்திலும் தாமதம் ஏற்பட்டது. (இ-10)




கேலிச்சித்திரம்

# மத்திய வங்கியில் அரசியல் தலையீட்டை தடுக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம்

மத்திய வங்கியின் செயற்பாடுகளில் அரசியல் மற்றும் அதிகாரிகளின் தலையீடு முற்றாக நிறுத்தப்படல் வேணடும். அதற்கேற்ற வகையில் இம்முறை வரவு செலவுத் திட்டத்தினூடாக மத்திய வங்கி சட்டமூலம் திருத்தியமைக்கப்படுமென நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

மத்திய வங்கியின் சட்டமூலம் 1970 களில் தயாரிக்கப்பட்டது. அந்தவகையில் இது மிகவும் பழைமை வாய்ந்தது. இச்சட்டமூலத்தில் நிலவும் குறைபாடுகள் காரணமாகவே பிரமிட் முறை போன்ற மோசடிகள் இடம் பெறுகின்றன. இவை இனி மேலும் தொடராமல் இருக்க வேண்டுமாயின் மத்திய வங்கியின் சட்டமூலம் மேலும் வலுப்படுத்தப்படல் வேண்டும் என்றும் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை எதிர்வரும் ஜனவரிக்குள் நிதி நகரத்துககான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி அதற்கான வேலைத் திட்டங்களை ஆரம்பிப்போமெனறும் நிதி அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

அத்துடன் மாகாண சபைகளுக்கென 2016 ஆம் ஆணடு ஒதுக்கப்பட்ட அதே நிதி 2017 இலும் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் ஒரு சில அமைச்சுக்களுக்கு மட்டும் இந்நிதி சுமார் 03 சதவீதத்தால் குறைக்கப் பட்டுள்ளபோதும் ஆளுநர்கள் இதனை விருப்பத்துடன் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். நிதி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த போதே அமைச்சர் மேறகண்ட கருத்துக்களை முன்வைத்தார். நிதி நகரத்துக்கான சட்ட மூலம் தொடர்பில் இன்னும் ஓரிரு வாரங்களில் அமைச்சரவைக்கு பத்திரம் சமர்ப்பிக்கப்படும். அதன் பின்னர் ஜனவரிக்கு முன்னர் அதற்கான சட்டமுலம் நிறைவேற்றப்படும்.

சில மாகாண சபைகளில் அநாவசியமான நிதிகள் குறைக்கப்பட்டுள்ளன. முன்னர் பலர் சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர். இவை தேவையற்றவை.

மத்திய அமைச்சுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ள மாகாணசபை அமைச்சுகளுக்கே நிதி சற்று குறைக்கப்பட்டுள்ளது. இதனை ஆளுநர்கள் ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது முழு மனதுடன் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஊடகங்களில் குறிப்பிட்டது போல் உண்மையில் ஆளுநர்களுடன் எவ்வித முரண்பாடும் இடம்பெறவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# இலங்கையில் நாள் ஒன்றுக்கு 800 கருக்கலைப்புச் சம்பவங்கள்

(கொழும்பு)

இலங்கையில் நாள் ஒன்றுக்கு 800 கருக்கலைப்புச் சம்பவங்கள் பதிவாகின்றது என தென் மாகாண சுகாதார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

தென் மாகாண தொற்றா நோய்ப் பிரிவின் பொறுப் பதிகாரி நலின் விஜேசேகர இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் நாள் ஒன்றுக்கு 1100 முதல் 1200 பிறப்புக்கள் பதிவாகின்றன.

அதேபோன்று நாள் ஒன்றுக்கு 700 முதல் 800 வரையில் கருக்கலைப்புக்கள் இடம பெறுகின்றன.


பிறக்கும் சிசுக்களின் எண்ணிக்கைக்கு நிகரான அளவில் கருக்கலைப்புக்கள் இடம்பெறுகின்றன.

யார்என்ன சொன்னாலும் கருக்கலைப்பு என்பது ஓர் கொலையாகும்.

அது சட்டவிரோதமான செயலாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 910

பேபி




அரவிந்தன்




நிமா




சித்தாராமன்




விஜய்




நிரஞ்சன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நடைபெறப்போகும் 2016 க.பொ.த. (சா.த) பரீட்சையில் சாதிக்குமா? வடக்கு,கிழக்கு!!!

கல்வியில் எமது தமிழ் சமூகம் இன்று பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்கு பல புள்ளிவிபரங்களும், பரீட்சை திணைக்களத்தின் தரப்படுத்தல்களும் சான்றுபகர்கின்றன. இதற்கான காரணத்தை எமக்குள் நாம் தேடுவதே மேல். ஒரு காலத்தில் கல்வியில் சிறந்து விளங்கிய வடக்கு, கிழக்கின் கல்விப் பாரம்பரியத்தை மீண்டும் நிலை நாட்டுவதற்கு நாம் எல்லோரும் ஒன்றாக இணைய வேண்டும். சிறுபிள்ளைப் பருவத்திலேயே ஒரு பிள்ளைக்குக் கல்வியில் விருப்புடைய மனநிலையை ஏற்படுத்த வேண்டியது பெற்றோர்களது தலையாய கடமை. மாணவச்செல்வங்களின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்கள், அதிபர்கள். கல்வியியலாளர்கள் மாத்திரம் அக்கறை செலுத்தாது பெற்றோர்களும் உரிய கவனம் செலுத்த வேண்டும்.

2015ஆம் ஆண்டிற்குரிய க.பொ.த சாதாரண பரீட்சை பெறுபேறுகள் கடந்த மார்ச் மாதம் வெளியாகியது. க.பொ.த சாதாரண பரீட்சை பெறுபேறுகளின் தரவுகளின் படி வடக்கு, கிழக்கில் உள்ள மாவட்டங்கள் கடைசி இடங்களில் காணப்படுவது மிகவும் மனவேதனையளிக்கிறது.

இது, இதுவரை நிகழாத துர்ப்பாக்கிய நிலை என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கவலை வெளியிட்டுள்ளதுடன் ஊடகங்கள் வாயிலாக அறிக்கையும் வெளியிட்டிருந்தது.

கடுமையான கெடுபிடிகள் நிறைந்த யுத்த காலங்களிலும் அதற்கு முன்னரும் வடகிழக்கு மாகாணங்களின் கல்வித் தரம் உயர்ந்தே காணப்பட்டது. இதற்கான சரியான அளவு கருவியாக கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையை மட்டுமே கொள்ள முடியும்.

| ஆண்டு | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 |
|---|---|---|---|---|---|
| வடக்கு | 4 | 4 | 3 | 5 | 2 |
| கிழக்கு | 7 | 5 | 6 | 8 | 7 |

க.பொ.த (சா.த) 2005-2009 ம் ஆண்டு வரை வடக்கு கிழக்கின் தரவரிசை

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையையோ, க.பொ.த உயர்தர பரீட்சையையோ கொள்ள முடியாது. க.பொ.த உயர்தர பரீட்சையின் சித்திக்கு பல காரணிகள் உள்ளன. ஆனால் க.பொ.த சாதரணதர சித்திக்கு தனியே பாடசாலைக் கல்வியை மட்டுமே சொல்ல முடியும். காரணம் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையை "பெற்றோர்களின் பரீட்சை" என்றும், சா.தர பரீட்சையை "ஆசிரியர்களின் பரீட்சை" எனவும், உயர்தர பரீட்சையை "மாணவர்களின் பரீட்சை" என்றும் வர்ணிப்பார்கள்

கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் மாணவர்கள் , பெற்றோர்களின் பங்களிப்புடன் ஆசிரியர்களின் பங்களிப்பு போதாதா? அல்லது பரீட்சை பெறுபேறுகளை உயர்த்துவதற்கென மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள் வெற்றியளிக்கவில்லையா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அந்தவகையில் ஆசிரியர்கள் உட்பட அதிபர்கள், கோட்ட, வலய மற்றும் மாகாண கல்விப்பணிப்பாளர்கள் வகைசொல்ல வேண்டியவர்களாக உள்ளனர். இம்முறையாவது இந்த துர்ப்பாக்கிய நிலையில் இருந்து மீளுவார்களா? என்ற ஆதங்கம் எழுகின்றது.

க.பொ.த (சா.த) பரீட்சையில் கடந்த வருடங்களில் **ஒன்பது மாகாணங்களிலும** வடகிழக்கு மாகாணங்களின் நிலை வருமாறு.

| மாகாணம் | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வடக்கு | 4 | 4 | 3 | 5 | 2 | 6 | **9** | 8 | 6 | **9** | 9 |
| கிழக்கு | 7 | 5 | 6 | 8 | 7 | 4 | 6 | 5 | 5 | 5 | 8 |

தகவல்: இலங்கை பரீட்சை திணைக்களம் www.doenets.lk

க.பொ.த (சா.த) பரீட்சையில் கடந்த வருடங்களில் **இருபத்தைந்து** மாவட்டங்களிலும் வடகிழக்கு மாவட்டங்களின் நிலை வருமாறு.

| மாவட்டம் | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 16 | 8 | 20 | **21** |
| கிளிநொச்சி | 24 | 25 | 25 | **25** |
| முல்லைத்தீவு | 25 | 24 | 24 | **24** |
| வவுனியா | 7 | 3 | 7 | **16** |
| மன்னார் | 10 | 4 | 2 | **10** |
| திருகோணமலை | 20 | 20 | 21 | **23** |
| மட்டக்களப்பு | 11 | 7 | 15 | **17** |
| அம்பாறை | 14 | 12 | 9 | **13** |

தகவல்: இலங்கை பரீட்சை திணைக்களம் www.doenets.lk

க.பொ.த உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்றோர் வரிசையில் கடந்த வருடம் 20 ஆவது இடத்தில் இருந்த யாழ்ப்பாண மாவட்டம் இம்முறை 21ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டிருப்பது ஜீரணிக்கமுடியாத விடயமாகும்.

இதைவிட ஒன்பது மாகாண இடங்களுக்குள் வடகிழக்கு மாகாணங்களின் எந்தவொரு மாவட்டங்களும் இடம்பெறவில்லை.

மன்னார் 10ஆம் இடத்திலும், அம்பாறை 13ஆம் இடத்திலும், வவுனியா 16ஆம் இடத்திலும், மட்டக்களப்பு 17ஆம் இடத்திலும், யாழ்ப்பாணம் 21ஆம் இடத்திலும், திருகோணமலை 23ஆம் இடத்திலும், முல்லைத்தீவு 24ஆம் இடத்திலும், கிளிநொச்சி 25ஆம் இடத்திலும் உள்ளன.

இந்த தரவரிசையானது எப்போதும் நிகழாத ஒன்றாகவே காணப்படுகின்றது.

தமிழர் பிரதேசங்களில் இத்தகைய நிலை ஏற்பட்டிருப்பதற்கு பல காரணங்கள் இருந்தாலும் மாகாண, மாவட்ட மட்டத்தில் உள்ள பல குறைபாடுகள் அதற்கு முழுக்காரணமாக அமைகின்றன.

குறிப்பாக சில விடயங்களை கூறமுடியும்

- முறையற்ற ஆசிரிய இடமாற்றங்கள் .
- முறையற்ற கல்விசார்அதிகாரிகளின் இடமாற்றங்கள்.
- அரசியல் தலையீடுகள் .
- கலவியில் அநாவசியமான வெளியாரின் தலையீடுகள் (நேரடியான, மறைமுகமான)
- இவற்றைவிட கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்களின் சுயமான சிந்தனைக்கு ஏற்படுத்தப்படும் முட்டுக்கட்டைகள்.
- ஆசிரியர்களுக்கு முறையான ஊக்குவிப்புக்கள் கிடைக்காமை.
- வணிகமயமான கல்வி.
- ஆசிரியர்களினால் மாணவர்களை கண்டிக்க முடியாத நிலை. கண்டிக்கின்ற வேளைகளில் மனித உரிமைமீறல், நீதிமன்றங்கள், பொலிஸ் நிலையங்கள் போன்ற பல இடர்கள் ஏற்படுகின்றன. அதனால் பல ஆசிரியர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர்.
- மாணவர்களை குறிவைத்து சமூகவிரோத சக்திகளால் திரைமறைவில் நிகழும் போதைப்பொருள் வியாபாரம்.
- மாணவர்களிடையே செல்லிடதொலைபேசி மற்றும் அதிமிஞ்சிய சமூகவலைத்தள பாவனை.

இது போன்ற பல காரணங்கள் இன்றைய கல்வி வீழ்ச்சிக்கு காரணமாக அமைகின்றன.

இதை விட மிக முக்கியமான காரணமாக யாழ்ப்பாணத்து ஆசிரியர்கள் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு வெளியே இடமாற்றலாகி செல்வதும் , வடக்கு கிழக்கு தவிர்ந்த வெளிமாகாணங்களில் வட, கிழக்கு ஆசிரியர்களை பயன்படுத்தி பெருந்தொகை பணத்தை செலவிட்டு தனியார்வகுப்புக்கள்,விசேட செயற்றிட்டங்கள், செயலமர்வுகள், வினாத்தாள் தயாரிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது கண்கூடு. இதுதான் யதார்த்தமான உண்மை. இதற்காக வடகிழக்கு ஆசிரியர்கள் ஏனைய பிரதேசங்களுக்கு குடிபெயரும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலமை தடுக்கப்படவேண்டும். அண்மையில் கல்வியியல் கல்லூரிகளில் ஆசிரியர் பயிற்சியை நிறைவுசெய்து வெளியேறிய ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி முன்னிலையில் நடைபெற்றது. கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஆசிரியர்களை கிழக்கு மாகாணத்திலேயே நியமிப்பதற்கு கிழக்கு மாகான முதலமைச்சர் உத்தரவிட்டிருந்தார். வடக்கு கிழக்கை சேர்ந்த அரசியல் தலைவர்கள் முதற்கொண்டு ஒவ்வொரு ஆசிரியரும் சிந்திக்கவேண்டிய இக்கட்டான சூழ்நிலை. இல்லையென்றால் வடகிழக்கை சேர்ந்த மாணவச்செல்வங்களுக்கு கிடைக்கும் கல்வி வளம் குறைந்ததே செல்வதுடன் கல்விநிலை பின்தள்ளப்பட்டுக்கொண்டே இருக்கும். எதிர்கால சவால்களை மாணவர்கள் எவ்வாறு முகங்கொடுக்க போகின்றார்கள் என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

இதைவிட வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்தி மற்றும் க.பொ.த (சா.த) பரீட்சை தொடர்பான வலுவூட்டல் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். கருத்தரங்குகள் நடத்தப்பட வேண்டும். இது மாகாண கல்வியமைச்சின் நேரடி கண்காணிப்பில் நடத்தப்படுதல் சிறந்தது. ஒவ்வொரு பாட துறைசார்ந்த ஆசிரியர்களிடம் மாகாண கல்வியமைச்சு நேரடியாக கலந்துரையாடி அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து தீர்வு காணப்படல் வேண்டும். 2000ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து 2006 காலப்பகுதி வரை செயற்பட்டது போன்ற "செயலட்டை" எனும் விசேட வினாத்தாள்கள் வழங்கப்பட்டு மாணவர்களின் கல்விவிருத்தியை மேம்படுத்த வேண்டும். மேலதிக வகுப்புக்கள் நடத்துதல். தரம் 11 இற்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் குறிப்பாக ஓகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் பாடங்களை நிறைவு செய்யுமுகமாக பாடக்குறிப்புக்களை தயார் செய்ய வேண்டும். பின்னர் உள்ள மூன்று மாத காலப்பகுதியினுள் மாணவர்களை கணிதம், தமிழ் போன்ற உயர் தரத்தை தீர்மானிக்கும் பாடங்களை அடிப்படையாக கொண்டு தரம் பிரித்து, அவர்களுக்குரிய கற்பித்தல் நடவடிக்கைகள் மற்றும் மாதிரி வினாத்தாள் பயிற்சியினை மேற்கொள்ளலாம்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண மாணவர்கள் பாடத்தெரிவுகள் தொடர்பாக கவனமாக செயற்பட வேண்டும். அதுவும் குறிப்பாக முதன்மை பாடங்கள் ஆறு, தொகுதிப்பாடங்கள் மூன்று. முக்கியமாக கணிதம், தமிழ் அத்துடன் தொகுதிப்பாடங்களை தெரிவு செய்வதிலும் கவனம் தேவை. இதற்கு கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள் மாணவர்களை வழிகாட்ட வேண்டும்.

மேலும் பெற்றோர்கள் ஒவ்வொருவரும் தமது பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்ட வேண்டும். பிள்ளைகளின் பாடசாலை வரவை எந்நாளும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன் தங்கள் பிள்ளைகள் தொடர்பாக கலந்துரையாடுங்கள். வடக்கு கிழக்கு தமிழர் பிரதேசங்களில் சின்னத்திரை நாடகங்களிலும், சினிமாக்களிலும், சமூக வலைத்தள மற்றும் வெளிநாட்டு மோகத்தில் மூழ்கியுள்ள ஒவ்வொரு அம்மா, அப்பாக்களும் தம் பிள்ளை எதிர்கால சவால்களை எதிர்கொள்ளக்கூடிய, கல்வியறிவுள்ள தமிழ் பேசும் சந்ததியை உருவாக்க அயராது பாடுபட வேண்டும்.

இவை எல்லாவற்றையும் விட வடகிழக்கு மாகாணங்களின் கல்வி திரைமறைவில் திட்டமிட்டு அழிக்கப்படுகிறது என்ற உண்மையை நாம் அனைவரும் உணரவேண்டும், என்பதோடு வடகிழக்கு பகுதிகளை சேர்ந்த மாகாண கல்வியமைச்சுகள், கல்விப் பணிப்பாளர்கள், கல்வியியல் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், மதஅமைப்புக்கள், சமூக நிறுவனங்கள் எல்லோரும், தலைமுறை தலைமுறையாக பேணப்பட்டு வந்த தமிழர் கல்வியில் கரிசணையுடன் செயற்படவேண்டும்.

நல்லதொரு சமுதாயத்தை, நல்லதொரு குடும்பத்தைக் கட்டியெழுப்ப அனைவரதும் பங்களிப்பு அவசியமானது. பெற்றோர்களின் குடும்ப மற்றும் பொருளாதார ரீதியான பாதிப்பால் மாணவர்களின் கல்வியில் பின்னடைவு ஏற்பட்டு விடக் கூடாது. தமிழ்ப் பாடசாலைகளில் கற்கும் மாணவ,மாணவியரின் பின்னடைவுக்கான ஏதுக்கள் கண்டறியப்படவேண்டும். தமிழர் கல்வியின் அடிப்படைத் தேவைகள் எவை, அவற்றைப் பெற்றுக் கொடுக்கும் வழிமுறைகள் எவை என்பவை கண்டறியப்படவேண்டும். தமிழர் கல்வியை சீர்செய்து உயர்ந்த நிலைக்கு, நாட்டின் ஏனைய சமூகத்தவர் பெற்றுக் கொள்ளும் தரத்திற்கு தமிழர் கல்வியையும் உயர்த்த வழி காணப்பட வேண்டும். இதுவே எமக்குள்ள முதற்பணி.

க.பொ.த (சா.த) பரீட்சையில் இம்முறை வடக்கு, கிழக்கு சாதிக்க வேண்டும். குறைகள் பின்னடைவுகள் தொடர்பில் குரல் கொடுக்கக்கூடிய, சீர்செய்ய வழி முறைகளை ஏற்படுத்தக் கூடிய பொறுப்பு வாய்ந்த கல்விச்சமூகத்தை கொண்ட குழுவின் தேவையை தமிழ்க் கல்வியில் அக்கறையுள்ளோர் மற்றும் தமிழ் ஊடகங்கள் கவனத்தில் கொள்வது காலத்தின் கட்டாய தேவையாகும்.

**Mr.T.Aynkaran-SLTS 3-1**
**(BEd (r),NDT in Sci (Merit),**
**Spl Trnd in Sci, Dip in Psychology(1st Class),IPICT,**
**Cert. in Psychology & Counselling (r)(University of Peradeniya)**

# அரசு - போராளிகள் சமாதான உடன்பாடு



உலகில் மிக நீண்ட விடுதலைப் போராட்டமாக அறியப்பட்ட கொலம்பியாவின் "பார்க்" அமைப்பின் ஆயுதப் போராட்டத்துக்கு முடிவுகட்டும் வகையில் அரசுக்கும் போராட்டக் குழுவினருக்கும் இடையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க புதிய சமாதான உடன்படிக்கை நேற்று கையொப்பமானது.

கொலம்பிய புரட்சிகர விடுதலை இராணுவம் எனப் படும "பார்க" (FARC) அமைப்பு 1964ஆம் ஆண்டிலிருந்து கொலம்பிய அரசாங்கத்திற்கு எதிராக போராடி வருகிறது.

தென்அமெரிக்காவின் வட முனையில் உள்ள நாடான கொலம்பியா, பனாமா, வெனிசுவெலா, ஈக்குவடோர், பெரு, பிரேசில் ஆகிய நாடுகளுடன் எல்லைகளைக் கொண்டது. பல்வேறு பழங்குடிகளைக் கொண்ட கொலம்பியா 1499ஆம் ஆண்டு ஸ்பானிய காலனி ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்து, 1886ஆம் ஆண்டு சுதந்திரமடைந்தது.

1950களில் கொலம்பிய கம்யூனிஸ்ட் கட்சி கொலம்பியாவில் நிலவிய சர்வாதிகார ஆட்சிக்கெதிராக இடைய றாத போராட்டத்தை முன்னெடுத்திருந்தது. அமைதியாக நடைபெற்ற இப்போராட்டங்கள் மீது கொலம்பிய அரசு வன்முறையை ஏவியது.

இதற்கிடையில் கடந்த 2008ஆம் ஆண்டு பார்க் இயக்கத்தின் இரண்டாவது தலைவராகக் கருதப்பட்ட ராவுல ரேயஸ் என்பவர் கொலம்பிய வான்படைத் தாக்குதலில் இறந்தார்.

ஈக்குவடோர் நாட்டின் பகுதியில் நிகழ்ந்த சர்வதேச விதிகளை மீறிய இச்செயல் கொலம்பியா - ஈக்குவடோர் நாடுகளுக்கிடையிலான உறவில் விரிசலை ஏற்படுத்தியது. கொலம்பியாவுடனான இராஜாங்க உறவுகளை ஈக்குவடோர் முறித்தது.

அதேஆண்டு பார்க் நிறுவனர்களில் ஒருவரும் தலைவருமான மனுவல் மருலாண்டா மாரடைப்பால் இறந்தார். அதையடுத்து பார்க் அமைப்பு முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படடது. ஆனால், 2010ஆம ஆண்டில் மட்டும் திட்டமிட்ட தாக்குதல்களை நடத்தி 1,800 இராணுவ வீரர்களைக்கொன்று தனது பலத்தை நிறுவியது.

இலத்தீன் அமெரிக்காவின் நான்காவது பெரிய பொருளாதாரமான கொலம்பியா, அந்தீஸ் மலைத் தொடர்கள், அமேசன் மழைக்காடுகள், வெப்பமண்டலப் புல்வெளிகள், கரீபியன் தீவுகள், பசுபிக் கடலோரப் பகுதிகள் ஆகியவற்றைக் கொண்ட புவியியல் பல்வகைமை மிக்க நாடாகும். பார்க் அமைப்பின் 52 வருடகால வரலாற்றில் பலமுறை கொலம்பிய அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடந்தாலும் எதுவும் பலனளிக்கவில்லை.

நீண்டகாலமாக பார்க் போராளிகளுக்கு ஆதரவாயிருந்த வெனிசுவெலாவும் பேச்சுக்களின் மூலமும் முரண்பாடுகளைத் தீர்க்க வேண்டும் எனக் குரல் கொடுத்ததுடன், குறிப்பாக, முன்னாள் ஜனாதிபதி ஹியுகோ சாவேஸ் ஆட்சியின போது, கொலம்பியாவின் இரு தரப்புகளையும் பேச்சுவார்த்தைக்கு கொண்டு வந்திருந்தது.

முதலாவதாக சமாதான பேச்சுவார்த்தைக்கு முழு ஆதரவு வழங்கி பார்க் போராளிகளிடம் நம்பிக்கையை உருவாக்கிய நாடு கியூபாவாகும். பல சுற்றுப் பேச்சுக்கள் கியூபாவிலேயே நடைபெற்றன. 2012ஆம ஆண்டு கொலம்பிய அரசுக்கும் பார்க் போராளிகளுக்கும் இடையில் தொடங்கிய பேசசுவாரத்தைகள் பல தடைகளைத் தாண்டி சமாதான உடன்படிக்கையை எட்டியது.

இதையடுத்து, உலகில் மிக நீண்ட விடுதலைப் போராட்டமாக அறியப்பட்ட கொலம்பியாவின் "பார்க்" அமைப் பின் ஆயுதப் போராட்டத்து க்கு முடிவுகட்டும் வகையில் அரசுக்கும் போராட்டக் குழு வினருக்கும் இடையில்நேற்று வரலாற்று சிறப்புமிக்க சமாதான உடன்படிக்கை கடந்த செப்டெம்பர் மாதம் கையொப்பமானது.

இந்த உடன்படிக்கையை ஏற்றுக்கொள்வது நடத்தப் பட்ட பொதுவாக்கெடுப்பு தோலவியை தழுவிய நிலையில் திருத்தப்பட்ட புதிய சிறப்பம்சங்களை கொண்ட புதிய சமாதான உடன்படிக்கை தயாரிக்கப்பட்டது.

கொலம்பியா நாட்டின் ஜனாதிபதி ஜுவான் மானுவேல் சான்ட்டோஸ் மற்றும் கொரில்லா இயக்கத் தலைவர் ரோட்ரிக்கோ டிம்மோச்சென்கோ லன்டோனோ ஆகியோர் துப்பாக்கி தோட்டாக்களை உருக்கி உருவாக்கப்பட்ட பேனாக்களை பயன்படுத்தி கொலம்பியாவின் தலைநகரான பொகோட்டோவில் நேற்று இந்த புதிய சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிட்டனர்.

கடந்த அரை நூற்றாண்டாக கொலம்பியாவில் இருதரப்பினருக்கும் இடையில் நீடித்த மோதலில் இரண்டரை இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டதாகவும, சுமார் அரை இலட்சம் பேர் மாயமானதாகவும் வரலாற்றுப் பதிவுகளில் காணப்படும் நிலையில் நேற்று ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின்படி, இத்தனை ஆண்டுகாலமாக போராட்டக்குழுவாக இருந்த பார்க் அமைப்பு இனி அரசியல் கட்சியாக புதிய பரிணா மம் எடுத்து அந்நாட்டின் முக்கிய தேர்தல்களில் போட்டியிடும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# பிரிவினைகளை மறந்து நாம் ஒன்றுபட்டு நிற்போம்

## அமெரிக்க மக்களுக்கு ட்ரம்ப் அழைப்பு



பிரிவினைகளை மறந்து, ஒன்றுபட்டு நின்று, அமெரிக்காவை மீண்டும் உயர்த்துவோம் என அமெரிக்க மக்களுக்கு நன்றி தெரிவித்தல் நாள் உரையில் ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார்.

அமெரிக்காவில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 4ஆம் வியாழக்கிழமை நன்றி தெரிவித்தல் நாளாக கொண்டாடப்படுகிறது.

அரசியல் பின்னணியில் பார்த்தால், இந்த விழா மக்களிடையே நல்லுறவை வளர்க்க பயன்படுவதாக கூறப்படுகிறது. இந்த நாளையொட்டி, அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப், நாட்டு மக்களுக்கு காணொளியில் ஒரு செய்தியை வெளியிட்டுள்ளார்.

அந்த செய்தியில் அவர் கூறியிருப்பதாவது,

வரலாற்று சிறப்புவாய்ந்த அரசியல் பிரசாரம் எல்லாம் ஓய்ந்து விட்டது. இப்போது நமது நாட்டை மறு கட்டமைக்கவும், அமெரிக்கா அனைத்து அமெரிக்க மக்களுக்கும் உரித்தானது என்ற தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் மிகப்பெரிய தேசிய பிரசாரம் தொடங்குகிறது.

ஒவ்வொருவரும் தங்கள் வேறுபாடுகளை மறந்து விட வேண்டும். அமெரிக்காவை மறுபடியும் ஒரு மகத்தான நாடாக உயர்த்துவதற்கு ஒரே குடையின் கீழ் அனைத்து மக்களும் ஒன்றுசேர வேண்டும்.

இந்த நன்றி தெரிவித்தல் நாளில் எனது பிரார்த்தனையும் அதுதான்.

நாம் நமது பிரிவினைகளை மறப்போம். ஒரே நாடாக, ஒரே நோக்கத்தோடு வலுப்பெற்று, முன்னோக்கி நடைபோடுவோம்.


நீண்டதும் காரசாரமானதுமான அரசியல் பிரசாரம் முடிந்துள்ள நிலையில், உணர்வு கொந்தளிப்புகள் அப்படியே உள்ளன. அவற்றை ஒரே நாளில் சரி செய்து விட முடியாது. துரதிர்ஷ்டவசமாக அது விரைவாக போய் விடாது.

நாம் ஒன்றாக சேர்ந்து உண்மையான மாற்றத்தை வோஷிங்டனுக்கு கொண்டு வந்தும், பிற நகரங்களுக்கு உண்மையான பாதுகாப்பை கொண்டு வந்தும், நமது மக்களுக்கு உண்மையான வளத்தை கொண்டு வந்தும் வரலாறு படைப்போம். இது எனக்கு முக்கியம். இது நாட்டுக்கு முக்கியம். ஆனால் நாம் வெற்றி பெறுவதற்கு முயற்சிக்க அனைவரும் உறுதி கொள்வோம்.

இந்த முயற்சியில் உங்களை இணைத்துக்கொள்ள அழைக்கிறேன். மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்துவோம். அமெரிக்கா ஒன்றுபட்டிருக்கிற போது தான், நம்மால் அடைய முடியாதது எதுவும் கிடையாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# ஒரு துப்பாக்கி வாங்கினால் மற்றொன்று இலவசமாம்

## பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி அறிவிப்பு



ஒரு துப்பாக்கி வாங்கினால் மற்றொன்று இலவசம் என்ற சலுகையில் ரஷ்யா தங்கள் நாட்டிற்கு ஆயுதங்கள் வழங்குவதாக பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் நாட்டிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே நீண்டகாலமாக சுமூகமான உறவு இருந்து வந்தது. பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியாக ரோட்ரிகோ டுடெர்டி பொறுப்பேற்ற பின்பு, அவர் அமெரிக்காவிடம் இருந்து விலகும் போக்கை கையாண்டு சீனாவுடன் அதிக நெருக்கமான உறவை கடைப்பிடிக்கத் தொடங்கினார்.

அமெரிக்கா உடனான உறவை முறித்துக் கொள்வதாகவும் ஜனாதிபதி ரோட்ரிகோ வெளிப்படையாகவே அறிவித்தார். அப்போது பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு ஆயுதங்கள் வழங்க அமெரிக்க அதிகாரிகள் தயக்கம் காட்டுவதாக குற்றம்சாட்டினார்.

இந்நிலையில் ஒரு துப்பாக்கி வாங்கினால் மற்றொன்று இலவசம் என்ற சலுகையில் ரஷ்யா தங்கள் நாட்டிற்கு ஆயுதங்கள் வழங்குவதாக ஜனாதிபதி ரோட்ரிகோ தெரிவித்துள்ளார்.

பெருநாட்டில் நடைபெற்ற ஆசிய பசுபிக் பொருளாதார மாநாட்டில் கலந்து கொண்டு நாடு திரும்பிய போது இதனை அவர் தெரிவித்தார். ஜனாதிபதி ரோட்ரிகோ தெரிவிக்கையில்,

லிமா நகரில் நடைபெற்ற மாநாட்டின் போது பிலிப்பைனஸுக்கு சலுகை விலையில் துப்பாக்கிகள் விற்பனை செய்ய ரஷ்யா தயாராக உள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடின் என்னிடம் தெரிவித்தார்.

ரஷ்யாவிடம் இருந்து எப்பொழுதும் துப்பாக்கிகள் வாங்க முடியும். அமெரிக்கா எங்களுடன் கூட்டு வைத்திருக்க விரும்பவில்லை என்றால் நாங்கள் சீனா, ரஷ்யாவிற்கு செல்வோம் என அவர்மேலும் தெரிவித்தார். (இ-10)

# வயகரா மாத்திரைகளால் பெண் ஜனாதிபதிக்கு சிக்கல்



(சியோல்)

தென்கொரியாவின் பெண ஜனாதிபதி 364 வயகரா மாத்திரைகளை வாங்கியதால் தற்போது சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

தென்கொரியா நாட்டில் பார்க்குன் ஹெயின் ஜனாதிபதியாக இருக்கிறார். பெண் ஜனாதிபதியான இவர் மீது பல்வேறு முறைகேடு குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளன. இவருடைய நீண்டகால தோழி சோய் சூன். இவரை தனது உதவியாளர் போல் பெண் ஜனாதிபதி வைத்திருந்தார்.

ஆனால் சோய் சூன் தனது அதிகாரங்களை கையில் எடுத்து ஏராளமான தவறுகளை செய்ததாக கூறப்படுகிறது.

இதனால் ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்று மக்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். எதிர்க்கட்சியினரும் அவருக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தி உள்ளனர்.

இந்த நிலையில் ஜனாதிபதி பார்க்குன் ஹெயின் வயகரா மாத்திரைகளை அதிக அளவில் அரசு பணத்தில் வாங்கி இருப்பது தெரிய வந்துள்ளது. 364 மாத்திரைகளை இவ்வாறு வாங்கி இருக்கிறார்.

இதுபறறி ஜனாதிபதி மாளிகை ஒரு விளக்கம் அளித்துள்ளது. அதில், அண்மையில் ஆபிரிக்க நாடுகளுக்கு ஜனாதிபதி சுற்றுப்பயணம் செய்தார். அந்த நாடுகள் கடல் மட்டத்தில் இருந்து மிக உயரத்தில் இருக்கின்றன. இதனால் அங்கு அவருக்கு உடல் நிலை பாதிப்பு ஏற்படலாம் எனக் கருதி அதைத் தடுக்கும் வகையில் வயகரா மாத்திரை வாங்கியதாகவும், ஆனால், அந்த மாத்திரையை பயன்படுத்தவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆனால் இதுபற்றி எதிர்க்கட்சியினர் கூறும் போது, ஜனாதிபதி தனி ஒரு உல்லாச உலகத்தில் வாழ்ந்தார். அதற்காக இந்த மாத்திரைகள் அவருக்கு தேவைப்பட்டு இருக்கும் என்று கூறி உள்ளனர். (இ-10)

# அதிகரித்த ஆயுத கலாசாரத்துக்கு பாதுகாப்பு தரப்பே பொறுப்பு

## மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**சட்டவிரோத துப்பாக்கி பாவனையால் இடம்பெறுகின்ற குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளமைக்கு பாதுகாப்பு தரப்பு பொறுப்புக்கூற வேண்டும் என்று முன்னாள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்துள்ளார்.**

துப்பாக்கி பயன்பாட்டால் குற்றச்செயல்கள் இடம்பெறுவது அது தொடர்பில் அனுபவம் உள்ளவர்களினாலேயே என்று அவர் தெரிவித்தார்.

இராணுவம் மற்றும் பொலிஸ் சேவையில் இருந்து தப்பிச்சென்றவர்கள் தொடர்பான தரவுகள் மற்றும் குற்றங்கள் தொடர்பிலான விரிவான விசாரணையின் மூலம், துப்பாக்கி மூலமான குற்றச் செயல்களை அதிகளவில் கட்டுப்படுத்த முடியும் என்று அவர் கூறியுள்ளார்.

கடந்த சில மாதங்களுக்குள் துப்பாக்கி மூலமான குற்றச் செயல்கள் நாட்டில் பல பிரதேசங்களில் பதிவாகியிருந்ததுடன், மிகவும் அண்மைய சம்பவமாக நேற்று முன்தினம் மினுவாங்கொடையில் சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றிருந்ததுடன், ஒருவர் உயிரிழந்தார்.

இதற்கு முன்னர், கண்டி - அங்குபுர பகுதியின் பெபில பள்ளிக்கு அருகில், காரில் வந்த சிலரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 20 வயதுடைய ஒருவர் உயிரிழந்ததுடன், மேலும் ஒருவர் காயமடைந்திருந்தார்.

ரி.56 ரக துப்பாக்கி ஒன்று இதற்குப் பயன்படுத்தப்பட்டது.

இதுதவிர, கடந்த 15ஆம் திகதி குருநாகல் மாஸ்பொத பிரதேசத்தில் பொலிஸ் தொலைபேசி கண்காணிப்பு வாகனம் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில், உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்தனர்.

வாத்துவ புகையிரத நிலையத்திற்கு அருகில் துப்பாக்கிச் சூட்டில் பலியான ஒருவரின் சடலம் கடந்த ஒக்டோபர் 31 ஆம் திகதி கண்டு பிடிக்கப்பட்டது.

ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி மட்டக்குளிய பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நால்வர் உயிரிழந்திருந்தனர்.

இதை அண்மித்த ஒரு நாளில் நிட்டம்புவ பிரதேசத்திலும் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றிருந்ததுடன், வர்த்தகர் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

இந்த சம்பவங்களை பாதாள உலக குழுக்களுக்கு இடையில் உள்ள பிரச்சினையாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சட்டவிரோதமாக வைத்திருக்கும் துப்பாக்கிகளை பாதுகாப்புத் தரப்பினர் பொறுப்பேற்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும், அதன் மூலம் சிறந்த பலன் கிடைக்கவில்லை என்பது நாளுக்கு நாள் அதிகரித்துள்ள துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் மூலம் அவதானிக்க முடிந்துள்ளது.

சட்டவிரோத துப்பாக்கிகளை பொறுப்பேற்பதற்கான பொறுப்பு பொலிஸ் மற்றும் பாதுகாப்புத் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருப்பதாக கலாநிதி பிரதீபா மஹாநாமஹேவா மேலும் தெரிவித்தார். (இ-10)

# பால்நிலைசார் வன்முறைகளும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளே

பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான 16 நாள் செயற்பாடுகள் சர்வதேச ரீதியில் நவம்பர் மாதம் 25 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பால்நிலை வன்முறைசார் வலைப்பின்னல் அமைப்பினர் இணைந்து பல்வேறு நிகழ்வுகளை நடத்தவுள்ளனர். அதன் முதற்கட்டமாக பால்நிலைசார் வன்முறை தொடர்பான இவ் ஆக்கம் பிரசுரிக்கப்படுகின்றது.

பால்நிலைசார் வன்முறைகளுக்கும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கும் கூடுதலான கவனம் செலுத்தப்பட வேண்டும். இது தொடர்பான விழிப்புணர்வு சிறுவர் முதல் பெரியோர்கள் வரை அனைவர் மனதிலும் விதைக்கப்பட வேண்டும்.

இந்த விழிப்புணர்விற்கான அவசர தேவை மனதை உறைய வைக்கும் உண்மைகளாலும் புள்ளி விபரங்களாலும் நிரூப்பிக்கப்படுகின்றது. பால்நிலைசார் வன்முறைகள் என்பது சமூக நியதிகள், வளர்ப்பு முறைகள், எண்ணப்பாங்குகள் என்பனவற்றில் பெண்கள் ஆண்களுக்கு உரித்துடையவர்கள் என்ற அர்த்தமில்லாத நம்பிக்கையில் தங்கியுள்ளது. இதுவே அநேகமான வன்முறைகளுக்கு இட்டுச் செல்கின்றது.

பால்நிலை என்பது மனிதர்கள் மத்தியில் மட்டும்தான் காணப்படுகின்றது. ஆண்கள் வீரமுள்ளவர்கள், தைரியசாலிகள், அறிவுபூர்வமானவர்கள் என்பதனால் நாட்டுக்கும் வீட்டுக்கும் அவர்கள் தலைவர்களாக வருவது பொருத்தமாகும் எனக் கூறப்படுகின்றது. அதேபோன்று பெண்கள் மென்மையான சுபாவம் உடையவர்கள், நாணம் கொண்டவர்கள், இலகுவாக அச்சமடைபவர்கள், உணர்ச்சிவசப்படுபவர்கள், கற்புடையவர்களாக வாழ வேண்டியவர்கள்.

பால் என்கிற உயிரியில் வேறுபாட்டிற்கும் பால்நிலைக்கும் நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றனவாயினும் உயிரியல் இயல்புகளுக்கு சற்றும் பொருந்தாத வகையிலும் பால்நிலை உருவாக்கப்படலாம். இதற்கு உதாரணமாக தாய்மை என்பது ஒரு பெண் தன்வாழ்க்கையில் வகிக்க வேண்டிய முக்கிய பாத்திரம் ஆகும். இது உயிரியல் ரீதியாகவும் பெண்களுக்குப் பொருந்துவதாகும்.

உலகளாவிய ரீதியில் பெண்கள் இன்று பலவிதமான வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். பெண்களுக்கெதிரான வன்முறைகளை வெளி உலகிற்கு காட்டி அதற்கான நியாயமான, தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்காக சர்வதேச பெண்கள் தினம் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் ஒழிப்புதினம் ஆகியன முன்வைக்கப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 1999 டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி கூடிய போது ஆண்டுதோறும் நவம்பர் மாதம் 25 ஆம் திகதி பெண்களுக்கெதிரான வன்முறைகள் ஒழிப்பு சர்வதேச தினமாகப் பிரகடனம் செய்யும் தீர்மானத்தை நிறைவேற்றியது. இத் தீர்மாணம் ஐக்கியநாடுகள் அவையின் 54/134 இலக்கப் பிரேரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சமூகத்தில் எல்லா மட்டங்களிலும் பால்நிலைசார் வன்முறைக் கலாசாரம் ஊடுருவியுள்ளது. வேலை செய்யும் இடங்களில், போக்குவரத்து முறை, பாடசாலைகளில் இருந்து வீடுகள் வரை காணப்படுகின்றது.

பெண்களுக்கெதிரான வன்முறையானது பல வடிவங்களை எடுக்கிறது. அவற்றில் உடல், உளவியல், பாலியல், பொருளாதாரம் போன்ற தாக்கங்கள் எல்லா நாடுகளிலும் பரவலாகக் காணப்படுகின்றது. இலங்கையில் வீட்டு வன்முறை, பாலியல் வன்முறை, கட்டாய விபச்சாரம், இரத்த உறவினர்களுக்கிடையேயான பாலுறவு மற்றும் வஞ்சக் கடத்தல் என்பனவே மிக அதிகமாகக்காணப்படும் பெண்களுக்கெதிரான வன்முறையாக உள்ளன.

இக் குற்றச் செயல்களானவை ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்திற்கோ அல்லது ஒரு இத்திற்கோ உட்பட்டவை அல்ல. இவை இனம், மதம், குலம், சமுதாயம், வர்க்கம், பொருளாதார நிலை என்ற அனைத்திற்குமிடையிலும் பரவலாகக் காணப்படுகின்றது. அநேகமான சந்தர்ப்பங்களில் வன்முறைகள் மறைக்கப்படுகின்றன.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதானது வறுமையை முடிவுக்குக் கொண்டு வருவது போன்று முக்கியமானது. ஏனெனில் வன்முறையாலும் துஷ்பிரயோகத்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகளை வழங்குவதற்கான செலவினம் உயர்வாக இருப்பதுடன் பெண்களினதும் இளம்பிள்ளைகளினதும் சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, சுய அபிவிருத்தி என்பவற்றில் இது தடங்கலை ஏற்படுத்துவதால் அதன் மனிதச் செலவினமும் உயர்வாக உள்ளது.

இலங்கையானது இச் சவாலை வெற்றிகொள்வதற்காகவும் பெண்களுக்கெதிரான வன்முறையை முடிவுக்கு கொண்டுவரும் ஒரு முயற்சியாக பெண்கள் சாசனத்தை கைக்கொண்டமை, 1995 குற்றவியல்சட்டக்கோவைக்கான சீர்திருத்தங்கள், 2005 ஆம் ஆண்டு வீட்டு வன்முறைச் செயல் தடுப்புச் சட்டம் என்பன தொடர்பாகப் பல முனைகளில் இலங்கை முன்னேற்றம் கண்டுள்ளது.

எனினும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையானது ஒரு சிக்கலான பலவற்றுடன் தொடர்புடைய பிரச்சினையாக இருப்பதாலும் அது பல்வேறுபட்ட மட்டங்களில் கையாளப்பட வேண்டி இருப்பதாலும் இன்று வரைக்கும் அரச மற்றும் அரசசார்பற்ற செயற்பாட்டாளர்களாலும் மேற்கொள்ளப்படுகின்ற தலையீடுகளினால் பனிமலையின் ஒரு நுனியைத் தொடுவது போன்று ஒரு சிறு பாகத்தை மாத்திரமே தொட்டுச் செல்ல முடிகின்றது.

பெண்களதும் சிறுவர்களதும் நலனோம்பலையும் மகத்துவத்தையும் அச்சுறுத்தும் இந்த விடயத்தில் பணியாற்றும் எல்லா நிறுவனங்களிடமிருந்தும் தொடர்ச்சியான கூட்டுழைப்பும் வலைப்பின்னலும் தேவையாக இருப்பதை இது அழுத்தம் செய்து காட்டுகிறது. மனித இனத்தின் அபிவிருத்திக்குத் தேவையான முக்கிய தூண்களாக பெண்கள் உள்ளனர்.

பெண்கள் வன்முறை, துஷ்பிரயோகத்திலிருந்து சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளை அனுபவிக்க முடியாது போனால் கணிசமான அபிவிருத்தி நோக்கிய முன்னேற்றம் பின்தங்கி விடும் என்பதனை எல்லோரும் கருத்திற்கொண்டு வன்முறையில்லாத வீடு, சமூகம் மற்றும் நாட்டை உருவாக்க இம் மாதிரியான பல நிகழ்ச்சிகள் உங்கள் பிரதேசத்திலும் நடைபெறவுள்ளதால் அதிலும் கலந்து கொண்டு பால்நிலை வன்முறைக்கு எதிரான கருத்தியலை உங்களிலும் சமூகத்திலும் ஆழமாகப் பதிக்க பங்களிப்பு நல்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**முல்லைத்தீவு மாவட்ட செயலக**
**பால், பால்நிலை வலையமைப்பு.**

# பரம்பரை வைத்தியர்களுக்கும் களம் அமைத்துக் கொடுத்திருக்கும் சுதேச மருத்துவ மாநாடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவப்பிரிவு ஸ்தாபிக்கப்பட்டு 32 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் அத்துறையினர் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்துடன் இணைந்து முதற்தடவையாகத் தேசிய ரீதியில் சுதேச மருத்துவ மாநாடு ஒன்றையும் சுதேச மருத்துவக் கண்காட்சியையும் 2017ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதியில் கைதடி சித்தமருத்துவப்பரிவில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்ற இச்சந்தர்ப்பத்தில் அத்துறை பற்றிய சில தகவல்கள் இக்கட்டுரையில் தரப்படுகிறது.

தமிழரின் பாரம்பரிய மருத்துவம் சித்தமருத்துவமாகும். ஆங்கில மருத்துவம் இங்கு அறிமுகப் படுத்தப்படுவதற்கு முன்னரே சித்த மருத்துவம் சிறந்து விளங்கியது. அது வெறும் பாட்டிவைத்தியமோ, ஏட்டுவைத்தியமோ அல்ல. தற்காலத்தில் நம்மில் பலர் தெரிந்தோ, தெரியாமலோ கடைப்பிடித்து வரும் பல பாரம்பரிய மருத்துவ சுகாதார முறைகளுக்கு இம்மருத்துவ முறையே காரணமாகவுள்ளது. நோய்க்குச் சிகிச்சையளிப்பதிலும் பார்க்க நோய்வராமல் தடுப்பதிலேயே சித்தமருத்துவம் சிறந்து விளங்குகின்றது. சித்தர்களினால் நன்கு திட்டமிடப்பட்டு குழந்தை மருத்துவம், மகளிர் மருத்துவம், மகப்பேற்று மருத்துவம், எலும்பு முறிவு மருத்துவம், அறுவை மருத்துவம், கண்மருத்துவம், என்று பல துறைகளில் விருத்தி செய்யப்பட்டது. ஒவ்வொரு துறைக்குமுரிய நோய் நிதானங்கள், சிகிச்சைமுறைகள் என்பன நீண்டகால அனுபவம் மற்றும் ஆய்வுகளால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே சித்தர்களால் வெளிப் படுத்தப்பட்டன. 19ஆம் நூற்றாண்டில் அந்நியர் ஆட்சியும் அரசார்புடனான ஆங்கில மருத்துவ அறிமுகம் சித்தமருத்துவ வளர்ச்சியை மட்டுப்படுத்திய போதிலும் தமிழ் மக்களில் பலர் அவ்வைத்திய முறை மீது கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையும் பரம்பரை வைத்தியர்களின் அர்ப்பணிப்புடனான சேவையும் சித்தவைத்தியத்தை அழியவிடாமல் பாதுகாத்தன என்று கூறலாம்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் பாடசாலைகள் பெருமளவில் ஆரம்பிக்கப்பட்டதால் குருகுலக்கல்வி முறையும் வீழ்ச்சியடைந்தது. ஆயினும் சுதேச மருத்துவக் கல்வி முறையில் சில பெரியோர்கள் அக்கறை செலுத்த முற்பட்டனர். அவர்களுள் அக்காலத்தில் சட்டசபை உறுப்பினராக இருந்த க. பாலசிங்கம் முக்கியமானவர். அவர் சுதேச மருத்துவத்துக்கென ஒரு கல்லூரி நிறுவப்பட வேண்டும் என்ற தீர்மானத்தைச் சட்டசபையில் கொண்டுவந்தார். அதன் பயனாக 1929ஆம் ஆண்டு ஜூன் மாதம் பொரளையில் சுதேச மருத்துவக்கல்லூரி உருவாக்கப்பட்டது. அக்கல்லூரியில் ஆரம்பத்திலிருந்தே ஆயுர்வேத வைத்தியம், சித்தவைத்தியம், யுனானி வைத்தியம் ஆகிய மூன்று சுதேச வைத்திய முறைகளும் கற்பிக்கப் பட்டன. சிங்கள மாணவர்கள் ஆயுர்வேதத்தையும் தமிழ் மாணவர்கள் சித்த வைத்தியத்தையும், முஸ்லிம் மாணவர்கள் யுனானி வைத்தியத்தையும் கற்றார்கள்.

இக்கல்லூரியானது பல வளர்ச்சிகளைக் கண்டு 1977ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பல்கலைக்கழக அந்தஸ்துக்கு தரமுயர்த்தப்பட்டு சுதேச மருத்துவக் கல்வி நிறுவனம் என்ற பெயருடன் இந்தியாவிலும் மேற்கொண்டு பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்றுள்ளார்கள். பலநூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளனர்.

கைதடி சித்தமருத்துவ நிறுவனமாக தரமுயர்த்தப்படுவதற்கான ஏற்பாடுகள் தற்போது யாழ்.பல்கலைக்கழகத்தாலும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவாலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அது மட்டுமன்றி சுதேச மருத்துவ முறைகளான ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவத்துறைகளில் பட்டமேற்படிப்புகளை மேற்கொள்வதற்கான சுதேச மருத்துவப்பட்ட மேற்படிப்பு நிறுவனம் ஒன்றை அமைக்கும் விடயத்திலும் இத்துறைசார் வல்லுநர்கள் ஈடுபட்டுள்ளனர். அரசாங்கமும் அதற்குரிய ஊக்குவிப்பினைச் செய்து வருகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் பல்கலைக் கழகச் சித்தமருத்துவத்துறைக்கும் தமிழ்ச் சமூகத்திற்குமான பிணைப்பை மேலும் வலுப்படுத்த சித்த மருத்துவத்துறையினர் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். ஏற்கனவே சித்தமருத்துவத்துறையினர் பாடசாலைகளில் மூலிகை விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் ,மருத்துவ முகாம்கள், மூலிகைக் கண்காட்சிகள் என்பவற்றையும் நடத்தி வருகின்ற போதிலும் அவற்றை மேலும் விரிவுபடுத்துவதுடன் சுதேச மருத்துவ சம்பந்தமான ஆய்வுகளை வெளிக் கொண்டு வரும் முயற்சியிலும் அவர்கள் அக்கறை கொண்டுள்ளனர். அதன் ஒரு அங்கமாகவே 2017 ஜனவரி மாத இறுதியில் தேசிய சுதேச மருத்துவ மாநாடும் கண்காட்சியும் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் சிறப்பம்சமாக எமது பிரதேசத்திலுள்ள பரம்பரை வைத்தியர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. பரம்பரை வைத்தியர்கள் அனுபவங்கள், ஆய்வுகள், பல்வேறு சிறப்புச் சிகிச்சைமுறைகளில் அவர்கள் கொண்டுள்ள அறிவு என்பவற்றையும் வெளிப்படுத்தவும் இம்மாநாட்டில் களம் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் பரம்பரை வைத்தியர்கள் தமது வைத்திய சம்பந்தமான விடயங்களை மற்றவர்களுக்குச் சொல்லாமல் மறைத்து வைத்திருந்தார்கள். அதனால் அரிய பல வைத்திய முறைகள் அவர்களுடன் அழிந்தும் போய்விட்டன. ஆனால் தற்போது நிலைமை பெருமளவில் மாறியுள்ளது. பரம்பரை வைத்தியர்கள் தம்வசமுள்ள மருத்துவ உண்மைகளைப் பகிரங்கப்படுத்தவே பெரிதும் விரும்புகின்றனர். அதன் மூலம் அம்முறைகள் அழிந்து போய் விடாது மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதே அவர்களின் பேரவாவாகும். ஆனால் அதற்கான சரியான வாய்ப்பு அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப் படவில்லை. தற்போது பல்கலைக் கழக மட்டத்தில் சித்தமருத்துவப்பிரிவு எடுத்துள்ள இம்முயற்சி அவர்களை ஊக்குவிக்கும் என்பதில ஐயமில்லை. அவர்களின் மூலிகைகள் சம்பந்தமான விளக்கங்கள், நோய்கள் நிதானித்தல், சிகிச்சைமுறை, சிறப்பான மருந்து முறைகள் போன்ற ஆக்கங்களும் இம்மாநாட்டில் வாசிக்கப்படவுள்ளது. எனவே கட்டுரைகளை சமர்ப்பிக்க விரும்பும் பரம்பரை வைத்தியர்கள் கைதடி சித்தமருத்துவப்பிரிவுக்கு தமது ஆக்கங்களை அனுப்பிவைக்கலாம் என்பதையும் கூறிவைக்க விரும்புகிறேன்.

**Dr.சே. சிவசண்முகராஜா**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**சித்தமருத்துவப்பிரிவு,**
**யாழ்.பல்கலைக்கழகம்,**
**கைதடி.**

# தமிழ் சினிமா வரலாறு

## தமிழக ரசிகர்களை கவர்ந்த லலிதா, பத்மினி, ராகினி

**308**

ஏழை படும்பாடு

இதன் பிறகு தமிழ்ப்படங்களிலும் லலிதா, பத்மினி சகோதரிகள் நடிக்கத் தொடங்கினர். பட்சிராஜா ஸ்ரூடியோவில் கே.ராம்நாத் டைரக்‌ஷனில் உருவான ஏழை படும் பாடு (1950) படம் தான் இவர்கள் நடித்த முதல் படம்.

பிரதான குணச்சித்திர வேடத்தில் வி.நாகையா நடித்தார். இளைஞனாக நடித்த வி.கோபாலகிருஷ்ணனின் காதலைப் பெறப்போட்டி போடும் பெண்களாக லலிதாவும் பத்மினியும் நடித்தனர். இந்தப் படத்தில் பத்மினியை விட லலிதாவின் நடிப்பு தான் சிறப்பாக இருந்தது.

படங்களில் நடிக்கத் தொடங்கினாலும் நடனங்களும் தொடந்தன. அதில் ராகினியும் பங்கு கொண்டார்.

காஞ்சனா


லலிதா, பத்மினி அற்புதமாக நடித்த படம் காஞ்சனா.(1952)

இந்தப் படத்தையும் பட்சிராஜா ஸ்ரூடியோ தான் தயாரித்தது. டைரக்‌ஷன் ஸ்ரீராமுலு நாயுடு.

பிரபல பெண் எழுத்தாளர் லட்சுமி "காஞ்சனையின் கனவு" என்ற பெயரில் ஆனந்தவிகடனில் எழுதிய தொடர்கதை தான் காஞ்சனா என்ற பெயரில் படமாகியது.

கதாநாயகன் கே.ஆர். ராமசாமி இளம் ஜமீன்தார். அவருக்கும் தாசி குலத்தில் பிறந்த பானுவுக்கும் (பத்மினி) காதல் ஏற்படுகிறது. மனைவி என்ற அந்தஸ்தை தர முடியாவிட்டாலும் மனைவி போலவே அவளிடம் பாசத்தைப் பொழிகிறார் ராமசாமி.

எவ்வளவு காலம் பிரமச்சாரியாக இருப்பாய்? ஒரு பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்து கொள் என்று ராமசாமியிடம் தாயார் வற்புறுத்துகிறார். தன் தோட்டத்தில் வேலை செய்யும் ஏழையின் மகளான காஞ்சனாவை (லலிதா) மணந்து கொள்கிறார் ராமசாமி.



காஞ்சனா, பானு இருவரிடமும் சம அன்பு செலுத்துகிறார் ராமசாமி. இதனால் ஏற்படும் சிக்கல்களை படம் சித்திரித்தது.

படத்தின் இறுதியில் பத்மினி இறந்து விடுவார். அவருக்காக லலிதாவும் கண்ணீர் சிந்துவார்.

பாத்திரத்தின் தன்மையை உணர்ந்து லலிதா, பத்மினி, கே.ஆர் ராமசாமி மூவரும் அற்புதமாக நடித்திருந்தனர்.

என்.எஸ்.கிருஷ்ணன் டைரக்‌ஷனிலும் கலைஞர் மு.கருணாநிதி வசனத்திலும் உருவான மணமகள் (1951) படத்திலும் லலிதாவும் பத்மினியும் சேர்ந்து நடித்தனர். சுப்பர்ஹிட் படம் இது.

(தொடரும்)

ஆற்றலைக் காட்டிலும், ஆர்வமே வெற்றிக்கு காரணம்.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நம்பிக்கைக்குரிய தலைமையை தமிழ் மக்கள் உருவாக்க வேண்டும்

அப்பா என்ற படத்தில் ஒரு தந்தை தன் மகனுக்குச் சொல்கின்ற புத்திமதி இருக்கிறது தெரியாமல் இருந்து விட்டுப் போகவேணும் என்பதுதான்.

இருக்கிற இடம்தெரியாமல் இருப்பதென்பது சம்பந்தப்பட்டவர் உட்பட யாருக்கும் பிரயோசனமற்றது.

எனினும் எங்கள் தமிழினத்தில் இருக்கிற இடம் தெரியாமல் – எங்கள் அலுவல்களைப் பார்த்துக் கொண்டு – நாம் வாழ்ந்தால் போதுமென்ற நிலைப்பாட்டில் இருப்பவர்கள் பலர். இந்த நினைப்புத்தான் எங்கள் இனத்துக்குப் படுபாதகத்தை ஏற்படுத்தி வருகிறது.

குறிப்பாக மற்றவர்கள் பாடுபடட்டும் அதனால் நமக்கும் கிடைக்கும் என்ற எங்களின் குறுகிய நோக்கம் எங்கள் இலட்சியத்தை அடைவதற்குப் பெரும் தடையாக உள்ளது.

தவிர, சொந்த நலன்களுக்காகவும் பதவி படோபகாரங்களுக்காகவும் ஒரு இனத்தின் உயர்ந்த இலட்சியத்துக்கு உலை வைக்கின்ற பாதகங்களும் நம் மண்ணில் இடம்பெற்றதால்தான் எத்தனையே தியாகம் நிறைந்த எங்கள் மண்ணுக்கு; எங்கள் இனத்துக்கு இன்னமும் விமோசனம் கிடைக்காமல் உள்ளது.

இந்த நிலைமைக்கு அடிப்படைக் காரணம் நேர்மையான – விசுவாசமான அரசியல் தலைமை தமிழ் மக்களுக்குக் கிடைக்காமல் போனதுதான்.

நேர்மையான அரசியல் தலைமை தமிழர்களுக்குக் கிடைக்காமல் போய்விட்டது என்று கூறுவதானது திருத்திய வாசிப்புக்கு உட்பட வேண்டும் என வாதிடுவர்களும் இருக்கவே செய்வர்.

அதாவது நேர்மையான – விசுவாசமான தலைமையைத் தமிழ் மக்கள் உருவாக்கவில்லை என்பதே திருத்திய வாசிப்பாக இருக்கும்.

இதில் நியாயமும் இருக்கவே செய்கிறது. அன்று தொடக்கம் இன்று வரை தமிழ் மக்களை உசுப்பேத்தும் அரசியல் கலாசாரமே நீடிக்கின்றது. யதார்த்த பூர்வமாகச் சிந்திக்காமல் அரசியல்வாதிகளின் உசுப்பேத்தலில் எல்லாவற்றையும் மறந்து போகக் கூடியவர்கள் தமிழ் மக்கள் என்பதால்தான் தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற தந்திரோபாயங்கள் கனகச்சிதமாக நடந்தேறுகின்றன.

தமிழ் மக்களை எப்படியும் ஏமாற்றலாம் என்று சிங்கள ஆட்சியாளர்கள் நினைத்ததை விட, தமிழ் அரசியல் தலைமைகள் நினைத்ததும் செய்ததுமே அதிகம்.

இப்போதுகூட இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியம் என்று கூறப்படுகிறது. இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியப்படுமாயின் அது மிகவும் வரவேற்கத்தக்கது.

ஆனாலும் சாத்தியமான தீர்வு என்ன என்பது இன்று வரை தமிழ் மக்களுக்குத் தெரியாமல் உள்ளது.

தீர்வு என்ன என்பது தமிழ் அரசியல்வாதிகளுக்குத் தெரிந்தால் அதுபோதும் என்று நினைக்கின்ற அளவிலேயே நாம் இருக்கின்றோம்.

தமிழ் மக்களுக்கான தீர்வு என்றால் அது எங்களுக்கானது. எங்களுக்கானது என்றால் அதில் இருப்பது என்ன? இல்லாதது என்ன? என்பதை அறிகின்ற அதிகாரமும் உரிமையும் நமக்கே உள்ளது.

இருந்தும் அதுபற்றி நாம் எதுவும் அலட்டிக் கொள்ளாமல் அரசியல்வாதிகள் பார்த்துக் கொள்வார்கள் என்று விட்டு விட்டோம்.

அவர்களுக்கும் இது நல்லதாகிப் போக அவர்களும் தீர்வு வருகிறது ... தீர்வு வருகிறது ... என்று கூறுகிறார்களே தவிர, என்ன என்று கூறாமல் தவிர்த்து வருகின்றனர்.

உண்மையில் எங்களுக்கான தீர்வில் எங்களுக்கு கருசனை இருந்திருக்குமாயின் தேர்தலில் வாக்களிப்பது என்ற பணியை மட்டும் நாம் செய்து கொண்டிருக்க மாட்டோம்.

மாறாக எங்கள் தொடர்பிலான அனைத்து விடயங்களையும் எங்களின் வாக்குகள் பெற்று பதவிக்கு வந்த தமிழ் அரசியல் தலைமை எமக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருந்திருப்போம்.

அந்த உறுதித்தன்மை எங்களிடம் இல்லாமல் போனதன் விளைவாக இன்றைய எங்களின் நிலைமை ஆபத்தானதாக உள்ளது.

எனவே எங்களை நாம் புதுப்பிக்க வேண்டும். எங்களுக்கான அரசியல் தீர்வு உள்ளிட்ட அனைத்தையும் சரியாகச் செய்ய நேர்மையான தமிழ்த் தலைமை உருவாக்க இன்றைய நாளில் தமிழ் மக்கள் உறுதி பூண வேண்டும்.

# கலாபூஷணம் விருது பெறும் தமிழ்க்கலைஞர்கள்

(கொழும்பு)

கலைத்துறையில் சிறந்த பணியாற்றும் கலைஞர்களுக்கு வருடந்தோறும் கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் என்பவற்றின் ஏற்பாட்டில் கலாபூஷணம் எனும் விருது வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாண்டுவிருதுபெறும் தமிழ்க் கலைஞர்கள் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நியமித்த மதிப்பீட்டுக் குழுவின் மூலம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். இவ்வாண்டு மொத்தமாக 70 தமிழ்க்கலைஞர்கள் கலாபூஷணம் விருது பெறுகின்றனர். விருது பெறுவோரது விபரம் வருமாறு,

**கலாபூஷண விருது– 2016**

அந்தோனி சவரிமுத்து (ஊர்காவற்றுறை) –நாடகத்துறை, சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் (யாழ்ப்பாணம்) இசைத்துறை–வாய்ப்பாட்டு, கந்தையா வேலாயுதம்பிள்ளை (வந்தாறுமூலை)–நாட்டுக்கூத்து, லூமிஸ் அலோசியஸ் பர்ணாந்து (முசலி, மன்னார்) –இலக்கியத்துறை,கபிரியேல் பிலேந்திரன் (அல்லைப்பிட்டி) – நாட்டுக்கூத்து, கருப்பையா தங்கவேல் (ஹப்புத்தளை)– இலக்கியத்துறை–கவிதை, சின்னத்தம்பி பொன்னையா (வாகரை)–நாட்டுக்கூத்து, சின்னத்துரை நவரத்தினம் (கரவெட்டி)–இசைத்துறை வாய்ப்பாட்டு, பத்திநாதன் சைமன் (ஊர்காவற்றுறை)– நாட்டுக்கூத்து, சபாபதிப்பிள்ளை சந்திரசேகரம் (கொக்கட்டிச்சோலை) –சமய இலக்கியத்துறை, முடியப்பு சிங்கராயர் (யாழ்ப்பாணம்)– நாடகத்துறை, நாகமணி கோபால கிருஷ்ணன் (யாழ்ப்பாணம்) –சமய இலக்கியத்துறை, தம்பு மயில்வாகனம் (திருகோணமலை) –நாடகத்துறை, வேலுப்பிள்ளை நடராசா (காரைநகர் –சமய இலக்கியத்துறை, வேலுப்பிள்ளை பாக்கியரெத்தினம் (களுவாஞ்சிக்குடி)– நாட்டுக்கூத்து, ஞானமுத்து பேரின்பம் (கொக்கட்டிச் சோலை) – நாட்டுக்கூத்து, சுப்பிரமணியம்புண்ணியசீலன் (கொழும்பு–06)–இலக்கியம், வேலாயுதர் விநாசித்தம்பி (மிருசுவில்)–சமய இலக்கியத்துறை, இளையதம்பி விநாயகம் (வக்கி எல்ல)–சிற்பக் கலை, திருமதி வெள்ளைச்சாமி நவரட்ணம்மா (நுகேகொடை)– இலக்கியத்துறை,திருமதி முருகுப்பிள்ளை தேவிகாராணி (உவர்மலை)–இசைத்துறை– வாய்ப்பாட்டு, சந்திரசேகரம் சிவசிதம்பரம் (முள்ளியவளை)– நாட்டுக்கூத்து,வல்லிபுரம் குமாரசாமி (சுன்னாகம்)–சமய இலக்கியத்துறை, சுப்பிரமணியம் வேலாயுதபிள்ளை (காரைநகர்)–இலக்கியத்துறை, சண்முகம் வைரமுத்து (மட்டக்களப்பு)–வர்மக்கலை, பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வரசர்மா நித்தியானந்த சர்மா(கொக்குவில் (சமய இலக்கியத்துறை, கந்தையா மருதன் (வேலணை)– நாட்டுக்கூத்து, நடராசா நாகராசா (பண்டத்தரிப்பு)–நாடகத்துறை, வேலுப்பிள்ளை புவனேஸ்வரன் (மட்டக்களப்பு)– இலக்கியத்துறை, நாடகம், கயிலாயபிள்ளை தர்மகுலசிங்கம் (அல்வாய்)–நாடகத் துறை, ஐயம்பிள்ளை சின்னராசா (மூளாய்)–சிற்பக்கலை, செல்லையா கணபதிப்பிள்ளை( வந்தாறுமூலை)–சிற்பக்கலை, செல்லையா தனபாலசிங்கம் (பளை)–நாடகத்துறை ஒப்பனை, வைரன் பாக்கியராசா (தோப்பூர்)–இலக்கியத் துறை, இராசா திருமேனி (முல்லைத்தீவு)–நாடகத் துறை, மிக்கேல் அல்வின்ராஜ்( பண்டத்தரிப்பு)–நாட்டுக்கூத்து, தம்பிராசா சேனாதிராசா( செங்கலடி)–நாட்டுக்கூத்து ,செல்லையா நல்லதம்பி (வாழைச்சேனை)–நாட்டுக்கூத்து, கந்தர் வைத் திலிங்கம் குணசேகரம் (கோப்பாய்)– இலக்கியத்துறை, ஆறுமுகம் இராசரத்தினம் (சந்தி வெளி)–நாட்டுக்கூத்து, திருமதி . இந்திராணி புஷ்பராஜா(மட்டக்களப்பு)–இலக்கியத்துறை, நாடகம், கந்தையாநடேசன் (வாழைச்சேனை)–நாட்டுக்கூத்து, அந்தோனி மேவின் யேசுரத்தினம் (வத்தளை)–இசைத்துறை மெல்லிசை, சின்னத்தம்பி திவ்யநாயகம் (புத்தூர்)–இசைத்துறை–தவில், திருமதி கிருஷ்ணசாமி தெய்வநாயகம் (மீசாலை)–இசைத்துறை–வாய்ப்பாட்டு, திருமதி கனகரத்தினம் பேரின்பநாயகி (யாழ்ப்பாணம்)– நாடகத்துறை கந்தன் பாலன் (வல்வெட்டித்துறை)– இலக்கியத்துறை, செல்லத்துரை சிவசுப்பிரமணிய ஐயர் பாலச்சந்திரன் (மயிலணி)– இலக்கியத்துறை, கந்தப்பு சிவஞானம் (வவுனியா)–இலக்கியத் துறை, செல்வநாயகம் சசிதரன் (மூதூர்)– இசைத்துறை வாய்ப்பாட்டு, இரத்தினம் சச்சிதானந்தம் (பருத்தித்துறை)– நாடகத்துறை, செல்லையா சிவபாதம் (பண்டத்தரிப்பு)– சமய இலக்கியத்துறை, வேதநாயகி குணநாயகம் (களுதாவளை)– இலக்கியத்துறை, அற்புதராஜா கருணாதேவி (முல்லைத்தீவு)–இசைத்துறை, வாய்ப்பாட்டு, இரவீந்திரா கிருஷாந்தி (சுன்னாகம்)–நடனம், பராசக்தி ஜெகநாதன் (வவுனியா) –இசைத்துறை வாய்ப்பாட்டு, மிக்கேல் அருள்மொழி ராஜா (களுதாவளை)– இலக்கியத்துறை, சந்திராதேவி தியாகலிங்கம் (ஆரையம்பதி– நாடகத்துறை, சின்னத்தம்பி தங்கராசா (மட்டக்களப்பு)–நாட்டுக்கூத்து, திருமதி இரத்தினசிங்கம் புவனேஸ்வரி (முள்ளியவளை)–இசைத்துறை–வாய்ப்பாட்டு, சுந்தரமூர்த்தி ஐயா வரதராசன் (தெல்லிப்பழை)–இசைத்துறை– மிருதங்கம், திருமதி விமலாதேவி நாகேஸ்வரன் (இணுவில்)–இசைத்துறை–வாய்ப்பாட்டு, திருமதி வதனி சிறீதரன் (வவுனியா)–இசைத்துறை–வாய்ப்பாட்டு, பாலசிங்கம் அமிர்தராசா (புளியங்குளம்)–சிற்பக் கலை, கருப்பன்னன் சிவனய்யா சிவன் (கம்பொல)–நாடகத்துறை, கனகசபை இராஜலிங்கம் (கோப்பாய்)–சிற்பக்கலை, பிரான்சிஸ் யூல்ஸ் கொலின் (யாழ்ப்பாணம்)–நாடகத் துறை, குமாரசாமி சுமுகலிங்கம் (சாவகச்சேரி)–சமய இலக்கியத்துறை.

இக்கலைஞர்களுக்கான கலாபூஷணம் விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் டிசெம்பர் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பு, தாமரைத்தடாக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் வைபவம்தொடர்பான அழைப்பிதழ் மற்றும் கடிதங்கள் விருதுபெறும் கலைஞர்களுக்குத் திணைக்களத்தினால் தனித்தனியே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களைப் பெற விரும்பும் கலைஞர்கள் 011 255 2641 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார்.(செ)

## வரி அதிகரிக்க காரணம் என்ன?

### அமைச்சர் ரவி விளக்கம்

வழமையான தொலைபேசி அழைப்புக்களிற்கு புறம்பாக இணையத்தளத்தினூடாக மக்கள் தொடர்புகளை மேற்கொண்டமையே இணையத்தளத்திற்கான வரி அதிகரப்பதற்கான காரணம் என நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இருந்தபோதும் அது மிகவும் அதிகமானது இல்லை எனவும் நேற்று முன்தினம் நிதியமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

"எம்மோடு நடத்திய பேச்சுவார்த்தையின்போது தொலை பேசி நிறுவனங்கள் வழமையான தொலைபேசி அழைப்புக்களிற்கு பதிலாக அநேகமானோர் வைபர் மற்றும் வட்ஸ்அப் பாவிப்பதாவும் இதனால் தமது வருமானம் குறைவடைவதாகவும் தெரிவித்தனர். இந்த மாற்றத்தின் காரணமாக ஏனைய நாடுக ளில் உள்ளதை போன்று சம மட்டத்திற்கு கொண்டு வருவதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது" என சுட்டிக்காட்டிய அமைச்சர் அரசாங்கத்திற்கு வருமானத்தை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். (இ–10)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2016

"குடிமக்கள் செய்யக்கூடிய சிறிய பணிகளே பெரிய மாற்றங்களை உண்டு பண்ணும். என்னால் செய்யக்கூடிய சிறிய பணி மரங்களை நடுவது தான்"

*வங்காரி மாதாய் (அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)*

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து 6 மணி வரை யாழ்பிரதேசத்தில ஞானபாஸ்கரோதய வீதி, திருநெல்வேலி பாற்சங்க பிரதேசம், திருநெல்வேலி சந்தைப பிரதேசம், ஆடிய பாதம் சந்தி, கலைப்பீடம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(இ–9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்




❖ கொள்கைகளையோ, நம்பிக்கைகளையோ, மதப்பிரிவுகளையோ, கோயில்களையோ பொருட்படுத்தாதே. ஒவ்வொரு மனிதனது வாழ்க்கையிலும் சாரமாய் அமையும் அறிவுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் அவை என்ன? ஒரு மனிதனிடம் இந்த அறிவு முதிரும் அளவிற்கே நன்மை செய்யும் ஆற்றல் அவனிடம் மிகுகின்றது. முதலில் இதனையே தேடிப்பெறு. இதனையே அடைக. ஒருவரையும் குறை கூறாதே. ஏனெனில் எல்லாக் கொள்கைகளிலும் முடிவுகளிலும் சிறிது நன்மையுள்ளது. சமயம் என்பது மொழிகளோ, கட்சிகளோ அல்ல, மெய்யுணர்வே அதன் கருத்தாகும். இதை உனது வாழ்க்கையில் காட்டு.

❖ தெளிந்த உண்மையும் கருத்தின் தூய்மையும் வெற்றியளிப்பது நிச்சயம். இந்த இரண்டையும் படைக்கலமாகக் கொள்ளும் சிறுபான்மையோரும் எவ்வளவு பெரிய வலிமையையும் எதிர்த்து வெற்றியடைவதே மாறாத விதியாகும்.

❖ உண்மை, தூய்மை, தன்னலமின்மை இம்மூன்றும் உள்ள இடத்தில் எல்லாம் அவற்றை உடையவர்களை நசுக்கும் ஆற்றல் சூரிய மண்டலத்தின் கீழோ மேலோ இல்லை என்பதை அறிவாய். இவற்றைப் பெற்றுள்ளவன் ஒருவனே ஆனாலும் உலகம் முழுவதையும் எதிர்த்து நிற்கும் திறன் உடையவனாவான்.

# இந்தியா - இங்கிலாந்து மோதும் 3 ஆவது டெஸ்ட் இன்று ஆரம்பம்



இங்கிலாந்து அணிக்கு எதிராக மொகாலியில் இன்று நடைபெறும் 3 ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் அதிரடி தொடருமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து வரும் இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டி, மூன்று 20 ஓவர் போட்டியில் விளையாடுகிறது.

டெஸ்ட் தொடரில் ராஜ்கோட்டில் நடந்த முதல் டெஸ்ட் சமநிலையானது. விசாகப்பட்டினத்தில் நடந்த 2 ஆவது டெஸ்டில் இந்தியா 246 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதனால் 1-0 என்ற இந்தியா முன்னிலையிலுள்ளது.

இரு அணிகளும் மோதும் 3 ஆவது டெஸ்ட் போட்டி இன்று மொகாலியில் ஆரம்பமாகிறது.

2 ஆவது டெஸ்டில் அசத்திய இந்திய அணி இப்போட்டியிலும் அதிரடியை தொடரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதில் வென்று 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெறும் ஆர்வத்தில் இருக்கிறது.

இந்தியாவின் துடுப்பாட்டத்தில் கப்டன் விராட்கோலி முதுகெலும்பாக திகழ்கிறார். இத்தொடரில் அவர் இதுவரை ஒரு சதம், ஒரு அரைசதம் உட்பட 337 ஓட்டங்கள் குவித்துள்ளார். மேலும் முரளி விஜய், புஜாரா ஆகியோரும் நல்ல நிலையிலுள்ளனர்.

அணிக்கு திரும்பி உள்ள தொடக்க வீரர் லோகேஷ் ராகுல் 2 ஆவது டெஸ்டில் சோபிக்கவில்லை. அவர் திறமையை நிரூபிக்கும் கட்டாயத்தில் உள்ளார். இதேபோல் மிடில் ஆர்டர் வரிசையில் ரகானேவும் ஓட்டங்கள் குவிக்க வேண்டும். இருந்த போதிலும் இந்தியாவின் துடுப்பாட்டம் வலிமையாகவே காணப்படுகிறது. காயம் அடைந்த சகாவுக்கு பதில் பார்த்தீப் பட்டேல் விளையாடுகிறார்.

பந்துவீச்சில் தமிழகத்தை சேர்ந்த சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் முதன்மையாக உள்ளார். முதல் டெஸ்டில் சோபிக்காத அவர் 2 ஆவது டெஸ்டில் 8 விக்கெட் வீழ்த்தினார். மேலும் ஜடேஜா, ஜெயந்த் யாதவ் ஆகியோரும் வேகப்பந்து வீச்சில் முகமது ஷமி, உமேஷ்யாதவ் நல்ல நிலையில் இருக்கிறார்கள்.

அதே உத்வேகத்தை தொடர்ந்தால் இங்கிலாந்தை வீழ்த்துவது எளிது. மொகாலி ஆடுகளமும் சுழற்பந்து வீச்சுக்கு ஒத்துழைக்கும். இதனால் இந்தியா ஆதிக்கம் செலுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அலஸ்டர் குக் தலைமையிலான இங்கிலாந்து அணி முதல் டெஸ்டில் போராட்ட குணத்தை வெளிகாட்டியது. ஆனால் 2 ஆவது டெஸ்டில் சுழற்பந்து வீச்சுக்கு தாக்குபிடிக்காமல் சரண்டர் ஆனது.

இதனால் அந்த அணி சுழற்பந்து வீச்சை எதிர்கொள்ள தீவிர பயிற்சி எடுத்து வருகிறது. அஸ்வின் பந்தில் திணறிய பென்டக்கெட்டுக்கு பதிலாக பட்லர் சேர்க்கப்பட்டுள்ளார்.

கப்டன் குக், ஜோரூட், ஹமீத், மொயின் அலி, பென் ஸ்டோக்ஸ், பேர்ஸ்டோவ் போன்ற சிறந்த துடுப்பாட்டக்காரர்கள் உள்ளனர்.

பந்துவீச்சில் ஆண்டர்சன், ரஷீத், ஸ்டோக்ஸ், மொயின் அலி உள்ளனர். காலில் காயம் அடைந்துள்ள ஸ்டூவர்ட் பிராட் விளையாடுவது சந்தேகம். இதேபோல் சுழற்பந்து வீச்சாளர் அன்சாரியும் காயம் அடைந்துள்ளார்.

இவர்களுக்கு பதில் ஸ்டீவன் பின், கிரேந்பட்டி இடம்பெறலாம். இங்கிலாந்து அணி திடீரென எழுச்சி பெறும் திறமை கொண்ட அணியாகும். 2 ஆவது டெஸ்டில் ஏற்பட்ட தோல்விக்கு பதிலடி கொடுக்க முயற்சிக்கும். இதனால் இந்திய அணி கவனமுடன் விளையாடுவது அவசியம்.

**3 ஆவது டெஸ்ட் போட்டிக்கான இரு அணி வீரர்கள் விபரம்:**

**இந்தியா:-** விராட் கோலி (கப்டன்), முரளி விஜய், ராகுல், புஜாரா, ரகானே, அஸ்வின், பார்த்தீவ் பட்டேல், ஜடேஜா, ஜெயந்த் யாதவ், முகமது ஷமி, உமேஷ் யாதவ், புவனேஸ்வர் குமார், ஹர்த்திக் பாண்டியா, அமித் மிஸ்ரா, கருண் நாயர்.

**இங்கிலாந்து:-** அலஸ்டர் குக் (கப்டன்), ஹமீத், ஜோரூட், மொயின் அலி, பேர்ஸ்டோவ், ஜோஸ் பட்லர், கேரி பேலன்ஸ், ரஷீத், பென் ஸ்டோக்ஸ், கிறிஸ்வோக்ஸ், பிராட், ஆண்டர்சன், ஸ்டீவன் பின், கிரேத் பட்டி, ஜக்பால், அன்சாரி. (க)



Northern Province Karate Do Championship -2016 மாகாண மட்ட போட்டி அண்மையில் நடைபெற்றது. அதில் அச்சுவேலி கராத்தே கழக வீரர்கள் தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், வெண்கலப்பதக்கம் என்பவற்றை பெற்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளனர். அவர்களுடன் கராத்தே பயிற்சிவிப்பாளர் சென்சே றமணிகாந்தும் நிற்பதை படத்தில் காணலாம்.

**மெஸ்சி அதிரடி**

# சம்பியன்ஸ் லீக் தொடர் அடுத்த சுற்றில் பார்சிலோனா



ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையே இடம்பெற்று வரும் சம்பியன்ஸ் லீக் தொடரின் குழு நிலைப் போட்டிகளில், கடந்த புதன்கிழமை இடம்பெற்ற போட்டியொன்றில் வெற்றி பெற்ற பார்சிலோனா, இறுதி 16 அணிகளுக்கான சுற்றுக்குத் தகுதி பெற்றது. பார்சிலோனா, 2-0 என்ற கோல் கணக்கில் ஸ்கொட்லாந்து அணியான செல்டிக்கைத் தோற்கடித்தே அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. பார்சிலோனா சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் லியனல் மெஸ்ஸி பெற்றார்.

இந்நிலையில், ஜேர்மனியின் புண்டெலிஸ்கா தொடர் சம்பியன்களான பெயார்ண் மியூனிச், ரஷ்ய அணியான எஃப்.சி றொஸ்டோவ் விடம் 3-2 என்ற கோல் கணக்கில் தோல்வியுற்றது. எவ்வாறெனினும் தனது குழுவில் இரண்டாமிடம் பெற்றுள்ள மியூனிச், அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

ஏனைய போட்டிகளில், அத்லெட்டிகோ மட்ரிட், நெதர்லாந்து அணியான பி.எஸ்.வி. ஐந்தோவனை 2-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து, தனது குழுவில் முதலிடம் பெற்று, இறுதிப் 16 அணிகளுக்கான சுற்றுக்குத் தகுதி பெற்றது. அத்லெட்டிகோ சார்பாக, கெவின் கமேய்ரோ, அந்தோனி கிறீஸ்மன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

மன்செஸ்டர் சிற்றி, ஜேர்மனிய அணியான பொரிசியா மொச்சென் கிளட்பா ஆகிய அணிகளுக்கிடையிலான போட்டி, 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. இதன் மூலம், இறுதிப் 16 அணிகளுக்கான சுற்றுக்கு சிற்றி தகுதி பெற்றது. சிற்றி சார்பாக பெறப்பட்ட கோலை டேவிட் சில்வா பெற்றார்.

ஆர்சனல், பரிஸா ஜேர்மா ஆகிய அணிகளுக்கிடையிலான போட்டியும் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. இந்த நிலையில், இந்த இரண்டு அணிகளும் இறுதி 16 அணிகளுக்கான சுற்றுக்குத் தகுதி பெற்றன. பரிஸா ஜேர்மா சார்பாக எடினசன் கவானியும் ஆர்சனல் சார்பாக ஒலிவர் ஜிரோட்டும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். மற்றைய இரண்டு கோல்களும் "ஒவ்ண் கோல்" மூலம் பெறப்பட்டிருந்தன. (க)

# இந்தியன் சுப்பர்லீக் கால்பந்தாட்டம் கோவாவை வீழ்த்தியது கொல்கத்தா







ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் கொல்கத்தா அணி 2-1 என்ற கோல் கணக்கில் கோவாவை பதம் பார்த்து அரைஇறுதி வாய்ப்பை பிரகாசப்படுத்திக் கொண்டது.

3 ஆவது இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து போட்டியில் படோர்டாவில் நேற்று முன்தினம் இரவு நடந்த 47 ஆவது லீக் ஆட்டத்தில் எப்.சி.கோவா- அட்லெடிகோ டீ கொல்கத்தா அணிகள் மோதின. பரபரப்பாக தொடங்கிய ஆட்டத்தில் 28 ஆவது நிமிடத்தில் கொல்கத்தா கோல் கணக்கை தொடங்கியது. அந்த அணி வீரர் அபினாஷ் ரூய்டாஸ் நீண்ட தூரத்தில் இருந்து கோல் நோக்கி தூக்கியடித்த பந்தை, சக வீரர் ஜுவான் பெலன்கோசா தலையால் முட்டி கோல் அடித்தார். முதல் பாதியில் கொல்கத்தா 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

பிற்பாதியில் உள்ளூர் அணியான கோவாவின் ஆட்டத்தில் அனல் பறந்தது. குறிப்பாக 60 முதல் 75 ஆவது நிமிடத்திற்குள் கோவா வீரர்கள் அலைஅலையாய் தாக்குதலை தொடுத்தனர். அதற்கு பலனும கிடைத்தது. 80 ஆவது நிமி டத்தில் ரபெல் கோயல்ஹோ கடத்திக்கொடுத்த பந்தை கோவாவின் மந்தர் தேசாய் பலமாக உதைக்க, அது கொல்கத்தா தடுப்பாட்டக்காரரின் கால்களுக்கு இடையே புகுந்து ஓடி கோலாக மாறியது. முன்னதாக கொல்கத்தா கோல் கீப்பர் டெப்ஜித் கோவா வீரர் ஜாப்ரே கோன்சலேசிடம் கைகலப்பில ஈடுபட்டார். நடுவர் கவனிக்காததால் டெப்ஜித் தண்டனையில் இருந்து தப்பினார். இறுதி கட்டத்தில் வெற்றிக்குரிய கோல் அடிக்க இரு அணி வீரர்களும் தீவிரம் காட்டினர். கடைசி நிமி டத்தில் (90 ஆவது நிமிடம்), சமீக் டோட்டி குறுக்காக தட்டிக்கொடுத்த பந்தை கொல்கத்தாவின் ஸ்டீபன் பியர்சன் தவறுக்கு இடம்கொடுக் காமல் சுப்பராக கோலாக்கி அசத்தினார். முடிவில் கொல்கத்தா அணி 2-1 என்ற கோல் கணக்கில் கோவாவை பதம் பார்த்து அரை இறுதி வாய்ப்பை பிரகாசப்படுத்திக் கொண்டது. 7 ஆவது தோல்வியை தழுவிய கோவா வின் அரைஇறுதி கனவு ஏறக் குறைய முடிவுக்கு வந்தது. (க)

## தேர்தல் முறைமை...

யம் தொடர்பாக பவ்ரல் அமைப்பின் நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் எஸ்.சிறீதரன் கருத்துத் தெரிவிக்கையில்,

புதிய அரசியல் யாப்பில் தேர்தல் முறைமை செயற்பாடு தொடர்பான வரவேண்டிய முக்கிய அம்சங்களை நாடு பூராக ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பொதுமக்களை ஒன்று திரட்டி கலந்துரையாடல மேற்கொண்டு அந்தந்த மாவட்டங்களில் மக்கள் முன்வைத்த சிபாரிசுகளை புதிய அரசியலமைப்பு தயாரிப்பதற்காக அரசினால் அமைக்கப்பட்ட 20 பேர் உள்ளடங்கிய குழுவுக்கு சமர்ப்பித்தோம்.

அக்குழு அரசியல் அமைப்பு மாற்றம் தொடர்பாக 365 பக்கம் அடங்கிய அறிக்கை ஒன்றை 3 மொழிகளிலும் வெளியிட்டிருந்தது. அதில் தேர்தல் முறைமை தொடர்பாக வரவேண்டிய சிபாரிசுகளை பிரித்தெடுத்து நாங்கள் ஏற்கெனவே முன்வைத்த சிபாரிசுகளுடன் ஒப்பீடு செய்து அவற்றை மேலும் மெருகூட்டுவதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

அந்த வகையில் அனைத்து மாவட்டத்திலும் உள்ள சிவில் அமைப்புக்கள் பல்கலைக்கழக சமூகம், சமூக ஆர்வலர் சிவில் அமைப்புக்கள் மகளிர் அமைப்புக்கள் ஆகியோருடன் சேர்ந்து கலந்துரையாடி அவர்களின் சிபாரிசுகளை பெற்று குறித்த அறிக்கையை மெருகூட்டுவதற்கான வசதிகளை ஏற்படுத்தி அதை பெற்று அந்தந்த மாவட்டங்களில் உள்ள தேர்தல் அலுவலகம் ஊடாக கொழும்பில் உள்ள தேர்தல் ஆணையாளருக்கு சமர்ப்பப்பதற்காக சேவைகளை செய்து வருகிறோம்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் கடந்த நவம்பர் 15 ஆம் திகதி தேர்தல் முறைமை தொடர்பான கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தோம். அந்தவகையில் ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்ற பொது தேர்தல், சுயாதீன வேட்பாளர்கள் , தேசிய பட்டியல், பிரசார செலவு மீதான மட்டுப்பாடு, பிரதிநிதிகளின் சொத்து விபரங்கள், பிரதிநிதிகளுக்கான ஒழுக்கக்கோவை, கட்சி மாற்றம், நாடாளுமன்ற உறுப்பினர்களை மீள் அழைத்தல், தேர்தல் நாட்காட்டி, பெண்கள் இளையோருக்குரித்தான பிரதிநிதித்துவம், வாக்களித்தல் போன்ற 12 தலைப்புகளுக்கு கீழ் விடயங்கள் ஆராயப்பட்டன.

இவ்வாறு மேற்கொண்ட கலந்துரையாடலில் மேற்குறித்த சிபாரிசுகளை வலுப்படுத்தி ஆவணம் தயாரிப்பதற்கு முடிவுகளை எடுத்துள்ளோம். அதற்கென குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அக்குழு மேற்குறித்த கலந்துரையாடலில் சிபாரிசு செய்யப்பட்ட ஆவணத்தை தயாரித்து எதிர்வரும் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஊடாக தேர்தல் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்படும்.

இதன்மூலம் எதிர்காலத்தில் வரவுள்ள தேர்தல் தொடர்பாக பாவிக்கப்படும் செயன்முறைகளை எளிமையாக்குவதும், நல்லாட்சிக்கு ஒத்துப்போவதாகவும் மக்களுக்கு சிறந்த பயன்களை பெற்றுக் கொள்ளக்கூடிய முறைமையை அறிமுகப்படுத்துவதே நோக்கமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.(செ-9)

## தமிழீழ விடுதலை...

முடித்தபிறகு மேற்படிப்புக்குச் செல்ல இலங்கை அரசின் மேற்கல்வி தரப்படுத்தல் கொள்கை ஒரு தடையாக இருந்தது. 10-ம் வகுப்புவரையிலும் படித்த பிரபாகரன் விடுதலைப் போராளியாக செயற்படத் தொடங்கி விட்டதனால் படிப்பைத் தொடரவில்லை. பிரபாகரனின் போக்கு அவரது பெற்றோருக்குப் புரியவில்லை.

ஒருநாள் பொலிஸார் பிரபாகரனை தேடி முதன்முதலில் அதிகாலை 3 மணிக்கு வீடு வந்த போதே அவர்களால் அறிந்து கொள்ள முடிந்தது. பொலிஸாரிடம் இருந்து தப்பிச் சென்ற பிரபாகரன் அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு தன் வீட்டிற்குத் நிரந்தரமாக திரும்பவே இல்லை. 1972இல் புதிய தமிழ் புலிகள் அமைப்பு என்ற அமைப்பை தனது 18ஆவது அகவையில் பிரபாகரன் தொடங்கினார்.

1975இல் தமிழர் ஆர்ப்பாட்ட இயக்கங்களில் அவர் அதிகமாக இயங்கி வந்த காலகட்டத்தில்,யாழ்ப்பாண மாநகர மேயர் அல்பிரட் துரையப்பா படுகொலைக்கு அவர் தான் காரணம் என குற்றம் சாட்டப்பட்டார். 1976 மே மாதம் 5ஆம் திகதி புதிய தமிழ்ப் புலிகள் இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் என்று பெயர் மாற்றப்பட்டது.

உலகத் தமிழர்கள் அவரைத் தமிழ்த் தேசியத் தலைவராக மதிக்கிறார்கள், என்றாலும் இலங்கை, இந்தியா, அமெரிக்கா மற்றும் சில நாட்டு அரசுகளால் அவர் ஒரு பயங்கரவாதியாக அறிவிக்கப்பட்டார். இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலைக்கும் அவருக்கு தொடர்பு இருப்பதாக இந்திய அரசு கருதியதால் அவரை இந்தியாவுக்கு நாடு கடத்த வேண்டும் என இந்திய மத்திய அரசு முனைப்பு காட்டியது.

தொடர்ந்த உள்நாட்டுப் போரில் இறுதியாக வேலுப்பிள்ளை பிரபாகரன் 2009, ஆம் ஆண்டு மே மாதம் பதினெட்டாம் திகதி முல்லைத்தீவு பகுதியில் கொல்லப்பட்டதாக இலங்கை அரசு அறிவித்தது. எனினும் அவரது மரணம் தொடர்பில் நீடித்த பல்வேறு சந்தேகங்களினாலும் மாறுபட்ட தகவல்களாலும் தலைவருக்கு என்ன நடந்தது என்பது இன்று வரை மர்மமாகவே உள்ளது.

அவரது மூத்த மகன் சார்ல்ஸ் அன்ரனி இராணுவத்தினருடன் நடந்த மோதலில் கொல்லப்பட்டார். பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் படைத்துறையால் கொல்லப்பட்டதாகப் பின்னாளில் செய்திகளும், அவரது உடலின் ஒளிப்படமும் கிடைக்கப் பெற்றது. மனைவி மதிவதனியின் நிலையும், மகள் துவாரகாவின் நிலையும் இதுவரை உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களுடன் என்ன வாயிற்று என அறிய முடியவில்லை. தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் தன்னிகரில்லா தலைவராக உலக தமிழர்களால் போற்றப்படும்அவருக்கு இன்று 62 ஆவது பிறந்ததினமாகும்.

வழமை போன்று இம்முறையும் அவரது பிறந்த தினம் உலக தமிழர்களால் விமரிசையாக கொண்டாடப்படவுள்ளது. இலங்கையில் விடுதலைப்புலிகள் மீதான தடை உள்ளதனால் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் சில இடங்களில் இந்த பிறந்த தின நிகழ்வுகள் அனுஷ்டிப்படுவது வழமையாகும். பிரபாகரன் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் போது பல கருத்துக்களை கூறியிருந்தார். அவை தற்போது நிதர்சனமாக நடைபெறும் அளவிற்கு அவருக்கு எதிர்காலம் தொடர்பான கணிப்பு இருந்ததாக அரசியல் அவதானிகள்பலர் தற்போதும் கூறிவருகின்றனர்.

ஏதோ ஒருவன் பிறந்தான், வளர்ந்தான், சண்டை பிடித்தான், மடிந்தான் என்றுதான் நாங்கள் வீரச்சாவடையும் போராளிகளைப் பார்க்கிறோம். இந்தநிலை மாற வேண்டும். இவர்கள் நாம் வணங்கும் தெய்வங்களாக போற்றப்பட வேண்டும் என மாவீரர்கள் தொடர்பில் பிரபாகரன் கூறிய கருத்துக்கள் அமைந்திருந்தன. (செ-4)

## தூய்மையாகும் துயி...

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் சிரமதானம் செய்யும் பணிகள் அப்பகுதி மக்களினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சிரமதான பணிகள் நேற்று காலை வட மாகாணசபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை தலைமையில் கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் முன்னெடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து முழங்காவிலில் அமைந்துள்ள மாவீரர் துயிலுமில்லத்திலும் குறித்த சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவித்ததுள்ளன. (செ-312)

## 18 பேருக்கு; மரண...

தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இந்த கொலை வழக்கில் கைதாகியிருந்த 4,5 மற்றும் 20ஆவது சந்தேக நபர்களை நிரபராதிகள் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்து விடுதலை செய்துள்ளது.

தெரணியகல நூரி தோட்டத்தில் தோட்ட நிர்வாக அதிகாரி நிஹால் பெரேரா கடந்த 2013ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டிருந்ததோடு, அவரது பாதுகாவலர் இருவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இந்த கொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் தெரணியகல பிரதேச சபையின் முன்னாள் தலைவரான அனில் சம்பிக்க விஜேசிங்க உட்பட 21 பேர் கைது செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு மீதான விசாரணை 3 வருடங்களாக இடம்பெற்று வந்தது.

இதற்கமைய நேற்றைய தினம் தீர்ப்பளிக்க வேண்டியிருந்த நிலையில் அவிசாவளை மேல் நீதிமன்ற நீதவான் தேவிகா அபேரட்ண முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மேற்படி தீர்வு வழங்கப்பட்டுள்ளது. (செ)

## மாவீரர்நாள் நவம்...

வர் பிறந்த இடமான வல்வெட்டித்துறை உட்பட தமிழர் தாயகத்தின் அனைத்து இடங்களிலும் நாளை மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படும். என வடக்கு மாகாணசபை உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு இறுதிக்கட்ட யுத்தம் நடைபெற்ற காலம் வரையில் பல்லாயிரக்கணக்கான போராளிகள் உயிரிழந்திருந்தனர். இவர்கள் வடக்கு கிழக்கில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களில் விதைக்கப்பட்ட நிலையில் யுத்தத்திற்கு முன்னதான காலங்களில் விடுதலைப் புலிகளால் பெரும் எழுச்சிகளுடன் நினைவு தினங்கள் கொண்டாடப்பட்டன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும், இந்த நிகழ்வுகளில் நேரடியாக கலந்து கொண்டு மாவீரர்களுக்கு அகவணக்கம் செலுத்தி கெளரவம் அளிப்பது வழமை, இதே போன்று ஒவ்வொரு நவம்பர் மாதம் 27 ஆம் திகதியில் மாலை 6.05 மணியளவில் உயிரிழந்த அனைத்து மாவீரர்கள் நினைவாக வேலுப்பிள்ளை பிரபாகரனால் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, அதன் பின்னர் பிரபாகரனின் மாவீரர் தின உரை இடம்பெறும்.

இந்த உரையை தமிழர்கள் மாத்திரமல்ல, சிங்கள மக்கள் மற்றும் வெளிநாட்டு மக்கள் என அனைவரும் பெரும் எதிர்பார்ப்புடன் கேட்டிருந்த காலங்களும் உண்டு.

இவ்வாறான சிறப்புக்களை கொண்ட மாவீரர் தினம் யுத்த காலத்தில் மாவீரர் துயிலுமில்லங்களில் உறவினர்களால் தமது உறவுகள் நினைவாக கல்லறைகள் முன்பாக விளக்கேற்றி கதறி அழுது அஞ்சலி செலுத்தினார்கள். இந்த வருடம் மீண்டும் இந்த எழுச்சி ஆரம்பமாக வாய்ப்புள்ளது.

கிளிநொச்சியிலுள்ள கனகபுரம் மற்றும் முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லங்கள் தற்போது துப்புரவாக்கப்பட்டு வருகின்றன. மாவீரர்களின் பெற்றோர் உறவினர்களும் இளைஞர், யுவதிகளும் தாங்களாகவே முனவந்து துயிலும் இல்லங்களைத் துப்புரவாக்கி வருகின்றனர்.

நாளை இந்த துயிலும் இல்லங்களில் மாவீரர்களுக்கு சுடர் ஏற்றி வணக்கம் செலுத்தப்படும் என்று கிளிநொச்சி மக்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைக்காக போராடி வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட மாவீரர்களுக்கு தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக எழுச்சியடைந்து சுடரேற்றி வணக்கம் செலுத்தும் மாவீரர் தினம் நாளை 27 ஆம் திகதி தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் தேசத்திலும் பெரும் எழுச்சியாக நடைபெறவுள்ளது

இதற்காக கனகபுரம், முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லங்களை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யும் பணி நேற்று இடம்பெற்றபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை ஆகியோரும் கலந்துகொண்டனர்.

2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்த வருடம் தாயகத்தில், அதுவும் மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர்களுக்கு சுடரேற்றி வணக்கம் செலுத்தப்படவுள்ளமை விடுதலைப் போராட்டத்தின் புதிய பரிணாமத்தை வெளிப்படுத்தியிருப்பதாக நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் தமிழீழ விடுதலைக்காகப் போராடி வீரமரணம் அடைந்த மாவீரர்களுக்கு புலிகளின் உறுப்பினர்களுக்கு - வடக்கு, கிழக்கில் அஞ்சலி செலுத்த முடியாது என்று அரசு தடை விதித்துள்ளது. ஆனால், இம்முறை நல்லூரில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்படும் என்றும் அதில் தமிழ் மக்களைக் கலந்துகொள்ளுமாறும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பை எள்ளி நகையாடியுள்ள சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்தின, சிவாஜிலிங்கம் வைக்கும் மாவீரர் தினத்திற்கு எத்தனை பேர் வருகிறார்கள் என்று நாங்களும் பார்க்கத்தான் போகிறோம் என்றார். சிவாஜிலிங்கம் கடந்த முறை மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியபோது அதில் அதிகமானோர் கலந்துகொள்ளவில்லை என்றும் ராஜித தெரிவித்தார்.

இந்த நிலையில், வடமராட்சி உட்பட தமிழர் தாயகம் எங்கும் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படும் என்றும் முடிந்தால் அதை புலனாய்வுத்துறை தடுத்துப் பார்க்கட்டும் என்றும் சிவாஜிலிங்கம் சவால் விடுத்துள்ளார்.

வடமராட்சியில் உள்ள ஆலயங்களில் மணி ஒலிக்கப்பட்டு, மக்களின் வீடுகளில் தீபம் ஏற்றப்பட்டு மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் மாவீரர் தினத்தை அனைத்து இடங்களிலும் வடக்கு கிழக்கு மக்கள் உணர்வு பூர்வமாக அனுஸ்டிக்க முன்வர வேண்டும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக போராளிகள் கட்சி உட்பட தமிழ் கட்சிகளும், வவுனியா பிரஜைகள் குழு உட்பட பொது அமைப்புக்களும் கோரியுள்ளன. (செ-4)

## "இரத்த காயங்களு...

ஊர்காவற்றுறை நோக்கி சென்ற பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவின் மெய்பாதுகாவலராக நான் அவருடன் சென்றேன்.

நாரந்தனைப் பகுதியில் நாம் சென்ற பாதைக்கு குறுக்கே ரக் வண்டி ஒன்று தடைபோட்டு நின்றிருந்தது. அதில் இருந்தவர்கள் கத்தி பொல்லு, வாள்,துப்பாக்கி, சைக்கிள் செயினுடன் எமக்கு முன் சென்ற வாகனத்தை சூழ்ந்து நின்றார்கள்.

சிலர் எம்மை நோக்கி வந்தார்கள் திடீரென எமது வாகனத்தை திருப்ப முடியவில்லை. எமது கடமையை நிறைவேற்றும் நோக்குடன் காரில் இருந்த பாராளுமன்ற உறுப்பினரை வெளியே அழைத்து பாதுகாப்பாக கொண்டு செல்ல முற்பட்டபோது ஒருவர் தாக்க முற்பட்டார்.

அப்போது நான் மாவை சேனாதிராஜாவை கட்டிப்பிடித்தேன். அவருக்கு விழவேண்டிய அடி எனது இடுப்பில் பட்டது. இரும்புக்கம்பியால் தாக்கியதால் நான் உணர்சிகள் அற்று நின்ற போது என்னை பிடித்து இழுத்து கீழே விழுத்தி தாக்கினார்கள். அப்போது ஒரு குரல் கேட்டது. " இவன் தமிழ் பொலிஸ் இவனை விடுவம்" என்று கேட்டது.

அப்போது நான் அவர்களிடம் இருந்து விடுபட்டு வெளியே பார்த்த போது மாவை சேனாதிராஜா, அக்கும்பலிடம் அடி வாங்கி இரத்த காயத்துடன் நின்றிருந்தார். தலையில் காயத்துடன் கை முறிந்து விட்டது தம்பி என கூறினார். அப்போது அவரை வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும் முழு முயற்சியில் ஈடுபட்டிருந்தேன்.

பின்னர் யாழ்.போதனா வைத்திய சாலையில் கொண்டு வந்து சேர்த்தேன். துப்பாக்கியை விட பாரிய ஆயுதங்களுடன் அவர்கள் நின்ற காரணத்தால் நாம் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளவில்லை.

தாக்கியவர்களை எனக்கு தெரியாது. ஆனால் தற்போது அவர்களுடைய தோற்றம் மாறாமல் இருந்தால் அடையாளம் காட்ட முடியும் என தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

குறித்த வழக்கின் 32 ஆவது சாட்சியான நடராஜா ரவிராஜ் உயிரிழந்துள்ளதாக ஊர்காவற்றுறை பொலிசாரால் வழங்கப்பட்ட அறிக்கையும் மரண பதிவு அறிக்கையும் அரச சட்டத்தரணியால் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

அவர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்கு தொடுநர் தரப்பால் சுருக்க முறையற்ற விசாரணையில் சாட்சியமளித்துள்ளார். அதை சான்று கட்டளைச்சட்டத்துக்கு அமைவாக 26.02.2002 அன்று ந.ரவிராஜ், நீதவான் நீதிமன்றில் வழங்கிய சாட்சியை ஏற்று மன்றின் முதலியார் ஊடாக வழக்கின் சான்றாக இலக்கமிட அரச சட்டத்தரணி மன்றில் அனுமதி கோரினார்.

அதற்கமைய ந.ரவிராஜ்ஜின் பிரதம விசாரணை, குறுக்கு விசாரணை வழங்கப்பட்ட சந்தர்ப்பம், நீதிமன்ற விசாரணை அனைத்தும் அடங்கிய சாட்சிப்பதிவு நீதிமன்றில் வாசிக்கப்பட்டது. அவர் சாட்சியம் அளிக்கையில் எதிரிகள் இருவர் மன்றில் சமூகமாகியுள்ளனர்.

சாட்சியிடம் குறுக்கு விசாரணை மேற்கொள்ள எதிரி தரப்புக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போது,மனச்சாட்சி உள்ளவர்களிடம தான் கேள்வி கேட்க முடியும் மனச்சாட்சி இல்லாதவர்களிடம் கேள்வி கேட்க விரும்பவில்லை என 2 ஆவது எதிரியான மதனராசா தெரிவித்துள்ளார். 3 ஆம் எதிரிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போதும் அவர் கேள்வி எதுவும் எழுப்பவில்லை.

எனவே நீதவான் நீதிமன்றில் ந.ரவிராஜ் வழங்கிய சுருக்க முறையற்ற விசாரணையை சாட்சி கட்டளை சட்டத்தின் கீழ் சாட்சி குறிப்புக்களை சாட்சி பட்டியலில் 13 ஆவது சான்றாக இணைக்க அரச சட்டத்தரணி வழங்கிய விண்ணப்பத்தை மன்று ஏற்று அனுமதி வழங்கி உத்தரவிட்டது.

நாளை மறுதினம் 28 ஆம் திகதி 7 ஆம்8 ஆம் சாட்சிகளான மாவை சேனாதிராஜா மற்றும் சிவாஜிலிங்கம் உள்ளிட்ட 5 ஆம் சாட்சிகளினசாட்சியம் பதிவு செய்ய வேண்டும் எனவும மன்று பணிப்புரை விடுத்துள்ளது. (செ-9)

## சிங்கள மாணவ...

ளான நிலையில் நேற்று லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த மாணவன் பாடசாலை முடிவடைந்து வீட்டுக்கு சென்று கொண்டிருந்த போது, தலவாக்கலை ரயில் நிலையத்துக்கு அருகில் காணப்படும் சுரங்கப் பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர்களால் தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பெற்றோர் தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (செ)

# யாழ்.பல்லையில் நேற்று...

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் உறுப்பினராக இருந்து வீரச்சாவடைந்த அனைத்து போராளிகளையும் நினைவுகூரும் வகையில் நவம்பர் 21 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதிவரை மாவீரர் வாரமாக புலிகள் பிரகடனப்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில் குறித்த மாவீரர் தினத்தை நினைவுகூரும் வகையில் உலக தமிழர்கள் பலர் பல்வேறு நிகழ்வுகளை தமது நாடுகளில் முன்னெடுத்து வருகின்றனர். இந்நிலையில் நேற்றையதினம் யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் அஞ்சலி நிகழ்வுகள் அனுஷ்டிக்கபட்டுள்ளன. காலை பதினொரு மணியளவில், யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிற்கு முன்பாக ஒன்றுகூடிய மாணவர்கள், அதில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவு தூபயை சுற்றி மரக்கன்றுகளை மாணவ பிரதிநிதிகள் நாட்டினார்கள். பின்னர் கைலாசபதி கலையரங்கில் ஒன்று திரண்ட மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் ஊழியர்கள் உட்பட பல்கலைக்கழக சமூகததினர் அனை வரும் ஐந்து நிமிடமௌன அஞ்சலியைச் செலுத்தியிருந்தனா.

அதையடுத்து அனைவரும் தமது கைகளில் சுடர் ஏந்திய மெழுகுவர்த்திகளை ஏந்தியபடி அகவணக்கம செய்ததுடன், மண்டபத்தின் முன்பாக வைக்கப்பட்டிருந்த கார்த்திகை பூசின்னத்திற்கு அனைவரும் வரிசையாக வந்து மலர் தூவி அஞ்சலி செய்தார்கள்.

மண்டபத்தில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வுகளை அடுத்து வெளியே வந்த பல்கலைச் சமூகத்தினர் அனைவரும் வரிசையாக வந்து நூற்றுக்கணக்கான மரங்களை பல்கலை சூழலில் நாட்டி வைத்தனர்.

இந்த நிகழ்வுகளில் முஸ்லிம் மற்றும் சிங்கள மாண வர்களும் கலந்து கொண்டு போராளிகள் மற்றும் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

மேலும் யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம், ஊழியர் சங்கம், மாணவர் ஒன்றியம் என அனைத்து தரப்பினரும் இதன் போது கலந்து கொண்டிருந்தனர். யாழ்.பல்கலையில் மாவீரர் தினம் வழமை போன்று ஒவ்வொரு வருடமும் நடைபெற்றிருந்தாலும், இம் முறையும் புலிகளை நினைவு கூர தடை என அரசாங்கம் அறிவித் துள்ள நிலையிலும் யாழ்.பல்கலை யில் எந்த தடையும் இன்றி மாவீரர் தினம் எழுச்சியுடன் நடைபெற்றது.

இந்த நினைவுகூரலின் போது யாழ.பல்கலைக்கழத்திற்கு வெளியே சீருடை அணிந்த இராணுவம் மற்றும பொலிஸார் காணப்படாத போதிலும் புலனாய்வு பிரிவினர் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது. (செ-4)


அனைத்து நாடுகளுக்குமான
விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550*/= Kg
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)
மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0768226243
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
• நெல்லியடி • வல்வெட்டித்துறை
V2 TRAVELS (C-6359)



பணியாளர்கள் தேவை
Receptionist : Female
(சரளமாக உரையாடக்கூடிய, வாடிக்கையாளரை சிறந்த முறையில் கையாளக்கூடிய, கணனி அறிவுடன், தமிழ், ஆங்கில ரைப்பிங் தெரிந்த கணக்கியல் அனுபவமுள்ளவர்கள்)
- அலுவலகத்தை சிறப்பாக நிர்வகிக்க கூடியவர்
- ஆங்கிலம் / சிங்களம் தெரிந்தவர்கள் மோட்டார் சைக்கிள் லைசன்ஸ் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
Basic 15,000/- + Allowence (C-6478)
27/28.11.2016 சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும்
SMART PRINTING
#255, Stanley Road, Jaffna.
Tel : 021 221 2958, Mob : 07 1650 1650,
e.mail : smartjaffna@gmail.com



VACANCY (6711)
☆ Manager (for Bookshop)
☆ Data Entry Operator (தென்மராட்சி)
☆ Marketing Executive (for IT Institute)
☆ Sales Rep.
கோலாசிற்றி
224/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 0213200994 0774336247


# இருவரைக்...

கடந்த 23 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் ஒரு படகில் சென்ற ஜோன அன்ரனி கிளாப் மற்றும் யூட்மைக் ஆகிய இருவருமே காணாமல் போயுள்ளனர்

இவர்கள் நேற்று முன்தினம் 24 ஆம் திகதி காலை 9 மணிக்கு கரை சேர வேண்டியவர்கள் என்றும் ஆனால் நேற்று வரை அவர்கள் கரை திரும்பவில்லை எனவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

கடற்படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பத போதிலும் அவர்களை இன்று (நேற்று) வரை கண்டுபிடிக்கவில்லை.

இது தொடர்பாக யாழ் மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்கள் சம்மேளன அலுவலகம், கடற்தொழில நீரியல் வளத்துறை, பொலிஸ்நிலையத்தில் உறவினர்கள் தமது முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளனர். (செ-9)


2016 டிசம்பர் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள
O/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு
இறுதி நேரத்தில் எதிர்பார்க்கக் கூடிய மேல் மாகாண
மற்றும் வட மாகாண கல்வி ஆய்வாளர்களின் தொகுப்பு
முற்றிலும் இலவச விசேட கருத்தரங்கு



காலம் :- 27.11.2016 ஞாயிற்றுக்கிழமை
காலை 8.00 மணி
இடம் :- யாழ் கல்லூரி - நிஷாளினி மண்டபம்



ஆறுகால் மடம்
பொன்னையா லேன்.
ஆனைக்கோட்டை.
யாழ்ப்பாணம்.
0775937166

கேணியடி
கொக்குவில் மேற்கு.
கொக்குவில்.
யாழ்ப்பாணம்.
0778448763

வடக்கின் கற்பித்தலில் சிறந்த வளவாளர்களான

தமிழ்
T.S. குகன் BA,MA

விஞ்ஞானம்
R. அரசகுலசூரியன் BA,Spl Trd Science
V. பார்த்தீபன் Bsc

கணிதம்
B. ஜெயரூபன் B.Com , PGDE Med
N. பிரதீபன் Bsc, Spl Trd Maths, PGDE
A. ஜெயம் S.L.T.S - I

வரலாறு
I. கஜன் BA, Hons
S. வேந்தன் BA, Hons

ஆங்கிலம்
B. சுபதீசன் Dip in Eng
Y. துஷ்யந்தன் HND in English,Trd Eng Teacher

நிகழ்வின் விருந்தினர்கள்
பிரதம விருந்தினர் : உயர்திரு. சி.மாணிக்கராஜா (பிரதிக் கல்விப் பணிப்பாளர். யாழ்வலயம்.)
சிறப்பு விருந்தினர் : உயர்திரு. தி. ஸ்ரீமோகனராஸ் (தொழில் அதிபர் - நேறு களஞ்சியம்)
கௌரவ விருந்தினர்கள் : அயல் பாடசாலை அதிபர்கள்

மாணவர்களே வடக்கின் O/L பெறுபேறை உயர்த்திட எம்மால் ஆன பங்களிப்பு தவறவிடாமல் உரியநேரத்திற்கு கலந்து கொள்ளுங்கள்.
கருத்தரங்கு ஏடுகள் மற்றும் ஆசனங்களை ஒழுங்கு செய்வதற்கு தங்கள் வரவை தொலைபேசி ஊடாகவோ SMS ஊடாகவோ நேரடியாகவோ உடன் உறுதிப்படுத்தவும். (C-6585)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## மாவட்ட நீதிமன்றம் - யாழ்ப்பாணம்
## பகிரங்க பிஸ்கால் ஏல விற்பனை

சண்முகசுந்தரம் சுதன்
சந்தையடி ஒழுங்கை,
மானிப்பாய்.

வழக்காளி -

வழக்கு இல. ஈடு/11/2014

எதிர்

பிறவுண் கிறிஸ்ரியன் மனோசுதன்
இல.783, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
தற்போது
இல. 126/33, கச்சேரி-நல்லூர்
றோட், யாழ்ப்பாணம்.

- எதிராளி -

2016.11.02. ஆம் திகதி இந் நீதிமன்றினால் இடப்பட்ட கட்டளையின்படி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலலாகிய துரைச்சாமி சிறிமோகன் ஆகிய என்னை அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைவாகவும் எனக்களிக்கப்பட்ட விற்பனை அதிகாரத்திற்கமைவாகவும் இவ்விற்பனையை நடாத்த மன்று நியமித்துள்ளதால் அதன் கீழுள்ள ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனத்தை குறித்த யாழ்ப்பாணம், கச்சேரி – நல்லூர் வீதி, ஆசீர்வாதப்பர் ஒழுங்கை, இல.12 இல் அமைந்துள்ள ஆதனத்தில் நின்று 2016 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறியத் தருகின்றேன்.

### தீர்வைத் தொகை

எதிராளி வழக்காளிக்கு (ரூபாய் 4,300,000/-) நாற்பத்துமூன்று இலட்சமும் வட்டியும் செலவும் கொடுக்க வேண்டியுள்ளது.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று, யாழ்ப்பாணம் மாநகரசபை, யாழ்ப்பாணம் சிவயாதெரு இறை **"நல்லிவளவு"** நி.பரப்பு 00 குளி 17.92 உம் வீடும் கிணறும் வான்பயிர் செய் பயிர்களும். எல்லை கிழக்கு சவரிமுத்து சின்னப்புவினாதனம், வடக்கு றோட்டு, மேற்கு அப்பையா கைம்பெண் மாரியம்மாவினாதனம் தெற்கு அம்பலவாணரின் ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும், இதன் பதிவு **D 708/75**.

வாங்கற்காரன் கொள்விலையில் நாலிலொருபங்கை (1/4) உடன் அவ்விடத்திலேயே செலுத்துவதுடன் பின்வரும் செலவுகளையும் மேலதிகமாக செலுத்த வேண்டும்.

அரச இறை (பவுண்டேஜ்) - 1 %.
பிஸ்கால் செலவு சிவில் நடைமுறைக் கோவையின்படி.
விளம்பரச் செலவுகளும், பிரசித்த செலவுகளும்.
விற்பனை சம்பந்தமான போக்குவரத்து செலவுகள்.
விற்பனை கமிசன் 2 1/2 %
விற்பனவு ஒப்பந்தக் கட்டணம் (நொத்தாரிஸ் தயாரித்த பட்டியலின்படி
நீதிமன்றக் கட்டளைப்படி.
2016ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 24 ஆம் திகதி

து.சிறிமோகன்,
பதிவாளர் / பிஸ்கால்
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.


அகரம் கல்வி நிலையம்
மல்லாகம் கொக்குவில் (6709)
தரம் 06 - O/L வரையான ஆங்கில, தமிழ் மொழிமூல வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
புதிய கல்வியாண்டு 2017இற்கான வகுப்புக்கள் ஆரம்பம் 05/12/2016
மீண்டுமொரு மாவட்ட முதனிலைச்சாதனை
2015 க.பொ.த சா/தர பரீட்சை முடிவுகளின்படி யாழ் மாவட்ட முதனிலை மாணவனாக செல்வன் நி.பிருந்தாபன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி) தெரிவுசெய்யப்பட்டுள்ளார். என்பதனை எமது சாதனைப் பதிவாக பதிவுசெய்வதில் அகரம் இறும்பூதெய்துகின்றது.
நேரம்
தரம் 6,7,8 - காலை 09.10
தரம் 9,10,11 - காலை 10.10
"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.